

ஆண்டு அறிக்கை

2019

அனர்த்த முகாமைத்துவ நிலயம்

உள்ளடக்கம்

01	நிறைவேற்று சாராம்சம்		1
	1.1	அறிமுகம்	1
	1.2	அனர்த்த முகாமைத்துவத்துஅக்கான தேசிய சபை	1
	1.3	அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் அனர்த்தங்கள்	2
02	அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்பான ஒரு சுருக்கமான அறிமுகம்		3
	2.1	நோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள்	3
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்	4
	2.3	அனர்த்த முகாமைத்துவ நிலத்தின் நிறுவன கட்டமைப்பு	5
	2.4	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தன் பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் பணியாட் தொகுதி	5
		2.4.1 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்	5
		2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள்	7
	2.5	அனர்த்த தாக்க விளைவுகளின் பகுப்பாய்வு	8
		2.5.1 அனர்த்தங்களின் தாக்க விளைவுகள் பற்றிய பார்வை	8
03	தேசிய அளவிலான முக்கிய செயல்பாடுகள்		14
	3.1	அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் திருத்தங்கள்	14
	3.2	தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டம் (NEOP)	14
	3.3	நிறுவன அனர்த்த முன்னாயத்தத் திட்டம் (IDMP)	15
	3.4	இடைக்கால முகாமைத்துவ குழு (IMC)	15
	3.5	கணக்காய்வு மற்றும் நிருவாகக் குழு (AMC)	16
04	குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு		17
	4.1	அறிமுகம்	18
	4.2	பிரிவின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்	18
	4.3	பிரிவின் செயல்பாடுகள்	20
	4.4	பிரிவின் பொதுச் செயல்பாடுகள்	22
	4.5	2019 ஆண்டின் முன்னேற்றம்	23
	4.6	அனர்த்தங்களை குறைக்கும் திட்டங்களை செயல்படுத்தல்	24
	4.7	2018 ஆண்டின் முடிவுறுத்தப்படாத கருத்திட்டங்கள்	26
	4.8	2019 ஆண்டின் புதிய கருத்திட்டங்கள்	27
	4.9	ஏனைய கருத்திட்டங்கள்	37

05	முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு		37
	5.1	அறிமுகம்	37
	5.2	மாவட்ட அளவிலான முன்னாயத்த திட்டங்கள்	38
	5.3	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை அறிவூட்டும் திட்டம்	39
	5.4	மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டம்	39
	5.5	மாவட்ட அளவிலான ஒத்திகை நிகழ்ச்சிகள்	39
	5.6	பாரிய நீர்த்தேக்க அணைகள் சார்ந்த பேரழிவுகள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள்	40
	5.7	நாட்டினுள் நீரில் மூழ்கி இறக்கும் எண்ணிக்கையை குறைத்தல்	41
	5.8	வைத்தியசாலை அவசர நிலை முன்னாயத்த திட்டங்களைத் தயாரித்தல்	41
	5.9	பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	42
	5.10	பிரதேச மட்டத்தில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	43
	5.11	பருவமழைக்கால முன்னாயத்த திட்டம் - தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச	43
	5.12	தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018 – 2030	44
	5.13	ஒன்றிணைந்த திட்டம் (2020 – 2024) மற்றும் முக்கிய செயல்பாட்டுக் குறிகாட்டிகளை தயாரித்தல் (KPI)	45
06	பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவு		46
	6.1	அறிமுகம்	46
	6.2	ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்	55
	6.3	துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவூட்டுதல்	56
	6.4	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்பை இற்றப்படுத்துதல்	57
	6.5	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான மாவட்ட மட்டத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்	57
	6.6	அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் தொகுதியின் இயலளவு மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டங்கள்	59
	6.7	தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சி	61
07	அவசர செயல்பாட்டு நிலையம் (Emergency Operations Centre)		63
	7.1	அறிமுகம்	63
	7.2	2019 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள்	63

	7.3	முன் அறிவித்தல்கள்	68
	7.4	அழைப்பு நிலையம்	70
	7.5	காவல்துறை மற்றும் முப்படைகள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்	71
	7.6	தேடுதல் மற்றும் மீட்பு தொடர்பான அனர்த்த முகாமைத்துவ 12 நாள் வதிவிட பயிற்சிநெறி	73
	7.7	SPILLEX 2019 ஒத்திகை நிகழ்ச்சியினை நடத்துதல்	74
	7.8	அவசர நிலைமைகளின்போது ஊடக ஒருங்கிணைத்தல்	75
	7.9	தேசிய அவசரநிலை செயல்பாட்டுத் திட்டம் (தே. அ. செ. தி.)	76
	7.10	2019 ஆம் ஆண்டில் அவசர செயல்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயல்பாடுகள்	77
	7.11	அவசர செயல்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்	78
	7.12	சவால்கள்	79
08		நிதி மற்றும் கணக்குகள் பிரிவு	80
	8.1	2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்	80
09		2019 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த பிரிவின் கீழான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	108

1. நிறைவேற்று சாராம்சம்

1.1 அறிமுகம்

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவத்திற்கான முதன்மை நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். தொடர்புடைய சகல தரப்பினர்களின் ஒத்துழைப்புடன் அனர்த்தங்களை குறைத்துக்கொள்வதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்பு இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பேரழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின்கீழ் செயல்படும் நிறுவனமாக, 2005 ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக இந்த நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய கொள்கைத் திட்டத்தினால் மூலோபாய வழிகாட்டல் வழங்கும் பணியினை, தேசிய சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்க்கு வழிகாட்டல் வழங்கும் பணியினை மேற்கொள்ளப்படுகின்றது. பதிலளிப்பை அடிப்படையாகக்கொண்ட முறையிலிருந்து வெளியேறி முன்னோக்கிய அணுகுமுறையொன்றை பெற்றுக்கொள்வதற்காக,கொள்கைரீதியான மாற்றமொன்றை நோக்கிய இலங்கையின் பேரழிவு முகாமைத்துவத்தை முழுமையாக உள்ளடங்கிய அனர்த்த அபாயங்களை குறைக்கும் திட்டங்களுக்கான செயல் கட்டமைப்பாக 2005 ஆண்டின் 13 ஆம் இலக்கமுடை இச் சட்டம் மாறியது.


இச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய பணிகளாவது, அனர்த்தங்களை குறைத்தல், முன்னாயத்த திட்டங்களை தயாரித்தல், பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆபத்து நிலையிலுள்ள மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுத்தல், அவசர நிலைமைகளின் செயற்பாட்டு நவடிக்கைகள், மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நிவாரண மற்றும் பின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல் என்பவையாகும். பிரதேச மட்டத்தின் பேரழிவு அபாய நிலை குறைப்பு நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்காக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள் நிறுவப்பட்டுள்ளது.

1.2 அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

இது அனர்த்த முகாமைத்துவத்திற்கான முதன்மை நிலயமாவதுடன் அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமை மற்றும் பிரதமரின் துணைத் தலைமையுடனான, உயர் மட்ட அமைச்சுக்களின் பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு அமைப்பு ஆகும். அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் ஏனைய உறுப்பினர்கள் ஆவது சட்டத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள், மாகாண சபைகளின் பிரதம அமைச்சகர்கள் (அவரால்

கலந்துகொள்ள இயலாவிடின் மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் ஐந்து எதிர்கட்சி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஆகியோர் ஆவர். (குறிப்பு 1.1)

அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் உள்ளடக்கம்



குறிப்பு 1.1: தேசிய சபையின் உள்ளடக்கம்

1.3 அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் அனர்த்தங்கள்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் சட்டத்தின்படி, அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ்வரும் அபாயங்களாவது,

- நிலச்சரிவுகள்
- சூறாவளி
- வெள்ளம்
- வறட்சி
- தொழில்துறை ஆபத்துகள்
- சுனாமி
- தொற்றுநோய்கள்
- வெடிப்புகள்
- விமானத் தாக்குதல்கள்
- சிவில் அல்லது உள் போராட்டங்கள்
- இரசாயன விபத்துகள்
- கதிர்வீச்சு தொடர்பான அவசரநிலைகள்

- பூகம்பங்கள்
- ஆகாய விபத்துகள்
- கடல் விபத்துகள்
- தீ விபத்துகள்
- உள் மற்றும் கடல் கசிவுகள் உட்பட எண்ணெய் கசிவுகள்
- அணுசக்தி பேரழிவுகள்
- நகர்ப்புற மற்றும் காட்டுத் தீ
- கரையோர அரிப்பு
- டோனாடோ, மின்னல் தாக்கம் மற்றும் கடுமையான இடியுடன் கூடிய சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்பான ஒரு சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேசிய பொறுப்பாவது இலங்கையை பாதுகாப்பான சமூகமாக மாற்றியமைப்பது ஆகும். அதற்காக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் ஆறு துறைகளைக் கொண்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயட்பாட்டு பொறிமுறை வடிவமைக்கப் பட்டுள்ளது. அதற்கமைய அதன் முக்கிய பிரிவுகள் கீழ்வருமாறு;

1. அனர்த்தங்களை குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவு
4. அவசர நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கை வழங்கும் பிரிவு
5. மனிதவள பிரிவு
6. நிதி பிரிவு

இந்த தேசிய பொறுப்பினை நாடு முழுவதிலும் செயல்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபித்து அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை வினைத்திறனாகவும் பயமிக்கதாகவும் நாட்டினுள் செயட்படுத்தப் படுகின்றது.

2.1 நோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமும் நிலைபேறான அபிவிருத்தியும்.

பணி

இயற்கை, தொழினுட்ப மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்களை முறையாக முகாமைத்துவம் செய்வதனூடாக சமுதாயத்திலும் மற்றும் நாட்டிலும் பாதுகாப்பான கலாச்சாரத்தை உருவாக்குதல்.

குறிக்கோள்கள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் போன்ற நாடளாவிய நிருவாக கட்டமைப்பின் மூலம் கீழ்வரும் பணிகளை ஒருங்கிணைத்தல், செயல்படுத்தல் மற்றும் மெட்பார்வை செய்தல்.


2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள்.

- தேசிய கொள்கையை அடிப்படையாகக்கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ மற்றும் தேசிய அவசரநிலை செயல்பாட்டு திட்டங்களை உருவாக்குதல்.
- ஆபத்துகளை வரைப்படமாக்குதல் மற்றும் ஆபத்து நிலைமைகளை மதிப்பீடுதல்.
- பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நடத்துதல்.
- முன்னாயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உட்பட அநர்த்தங்களுக்கு பதிலளிப்பதற்கு முன்னாயத்த செயட்பாடுகளை செயல்படுத்தல்.
- முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றை பரவலாக்கல்.
- அவசர நிலை செயட்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் சோதனை மற்றும் மீட்பு பணிகளை ஒருங்கிணைத்தல்.
- நிவாரணங்களை வழங்குதல் உட்பட பின் அனர்த்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- அனர்த்தங்களை குறைத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக அபிவிருத்திச் செயட்பாட்டுடன் ஒன்றிணைத்தல்.
- காலநிலை மாற்றங்களுக்கான இசைவாக்க நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.
- அனர்த்த அபாயங்களைக் குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், முப்படை மற்றும் போலீஸ், தனியார்த் துறை நிறுவனங்கள்,உள்நாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து செய்லபடுதல்.
- அனர்த்தங்களை குறைத்தல், பதிலளித்தல் மற்றும் அநர்த்தங்களுக்கு பின் மீட்பு திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கான வெளிநாட்டு உதவியைப் பெறுதல்.

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலத்தின் நிறுவன கட்டமைப்பு

குறிப்பு 2.1இல் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகள் மற்றும் நிகழ்ச்சிகளை கவனத்தில் கொண்டு இந்த நிறுவன கட்டமைப்பை வடிவமைக்கப்பட்டுள்ளது.



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலத்தின் நிறுவன கட்டமைப்பு

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தன் பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் பணியாட் தொகுதி

2.4.1 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

நிறுவனத்தில் தற்போதுள்ள மூன்று பணிப்பாளர் பதவி வெற்றிடங்களில் பணிப்பாளர் (செயட்பாடுகள்) பதவிக்காக இலங்கை இராணுவப் படை உத்தியோகத்தர் ஒருவரை தற்காலிகமாக இணைப்புச் செய்ய பட்டுள்ளது. 101 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் 100 பதவிகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் அவ் வெற்றிடங்களை பூர்த்திக் செய்வதற்ககான நிதி ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளன. தேவையான அனுமதிகள் பெறப்பட்டு 2020 ஆம் ஆண்டில் ஏனைய வெற்றிடங்களையும் பூர்த்திக் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31.12.2019 திகதியில் பணியாட் தொகுதி தகவல்கள்

பணியாளர் வகை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	தற்போதைய எண்ணிக்கை	வெற்றிடங்கள் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	1	1	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	1	1	0
பணிப்பாளர்	6	3	3
உள்ளக கணக்காய்வாளர்	1	1	0
உப பணிப்பாளர்	18	0	18
உதவி பணிப்பாளர்	15	12	3
உதவி பணிப்பாளர் (மாவட்ட)	25	25	0
கணக்கீட்டு அதிகாரி	1	1	0
நிர்வாக அதிகாரி	1	0	1
பிரத்தியேக உதவியாளர்	1	0	1
விசாரணை அதிகாரி	1	1	0
தோலை நோக்கு / புவியியல் தரவு தொகுதி ஆய்வாளர்	1	1	0
தரவு தொகுதி ஆய்வாளர்	1	1	0
தகவல் தொழில்நுட்ப அதிகாரி	1	0	1
வலையமைப்பு தொகுதி நிருவாகி	1	0	1
நூலகர்	1	1	0
அபிவிருத்தி உத்தியோகத்தர்	101	0	101
மொழிபெயர்ப்பாளர்	2	0	2
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	6	6	0
அசையும் மற்றும் அசையா கேமரா வல்லுநர்	1	1	0
தொடர்பு தொழில்நுட்ப வல்லுநர்	3	2	1
வானொலி இயக்குபவர்	1	1	0
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	201	186	15
சாரதி	39	38	1
அலுவலக உதவியாளர்	35	34	1
மொத்தம்	**465**	**316**	**149**

அட்டவணை 2.2: 31.12.2017 திகதியில் பணியாட் தொகுதி தகவல்கள்

2019.12.31 திகதிவரை புதிய ஆட்சேர்ப்புக்கள்

பதவி	எண்ணிக்கை
விசாரணை அதிகாரி	01
தோலை நோக்கு / புவியியல் தரவு தொகுதி ஆய்வாளர்	01
சாரதி	02

அட்டவணை 2.3: 2019.12.31 திகதிவரை புதிய ஆட்சேர்ப்புக்கள்

2019.12.31 திகதிவரை விண்ணப்பங்களை கோரல்

பதவி	எண்ணிக்கை
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற)	15

அட்டவணை 2.4: 2019.12.31 திகதிவரை விண்ணப்பங்களை கோரல்

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள்


ஒவ்வொரு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறின் பணியாட் தொகுதியிலும் உதவி பணிப்பாளர் (மாவட்ட), மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர் ஒருவர் மற்றும் சாரதியொருவர் உள்ளடங்குகின்றனர்.

மாவட்டம் அநர்த்தங்களுக்கு உள்ளாகும் தன்மைக்கு இணங்க மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் எண்ணிக்கை மாறுபடும். மொத்த எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும்போது, 25 உதவி பணிப்பாளர்கள் (மாவட்ட), மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள்,முகாமைத்துவ உதவியாளர்கள் என்ற வகையில் 113 பேர் 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கழுத்தரை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளுக்கு இராணுவ மற்றும் விமானப் படையினரும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

கழுத்தரை மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. கீழ்வரும் வரைப்படத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை கீழே 2.2 வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




குறிப்பு2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை

2.5 அனர்த்த தாக்க விளைவுகளின் பகுப்பாய்வு


2.5.1 அனர்த்தங்களின் தாக்க விளைவுகள் பற்றிய பார்வை

i. ஒட்டுமொத்த விளைவுகள் - 2019


வறட்சி, வெள்ளம், நிலச்சரிவு, பலத்த காற்று அல்லது சூறாவளி புயல் மற்றும் மின்னல் போன்ற இயற்கை பேரழிவுகளால் 2019 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட மொத்த மக்கள் தொகை சுமார் 1,6222,773 ஆக இருந்தது, 975,385 பேர் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 589,796 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இறப்பு மற்றும் காயங்களின் எண்ணிக்கை முறையே 106 மற்றும் 164 ஆகும். 2018 உடன் ஒப்பிடும்போது, காணாமல் போனவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் கணிசமான குறைப்பு காணப்பட்டது.



குறிப்பு 2.3: இறப்பு, காணாமல் போன மற்றும் காயமடைந்த நபர்களின் எண்ணிக்கை



குறிப்பு 2.4: சேதமடைந்த வீடுகள் (பகுதி / முழுமையானது)



குறிப்பு 2.5: பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை

குறிப்பு:


அனர்த்ததினால் பாதிக்கப்பட்டவர்களினை வெளிப்படுத்துவதற்கு ஒட்டுமொத்த புள்ளிவிவரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது

உதாரணம் : ஒரு வருடத்தில் ஒரு நபர் இரண்டு முறை பாதிக்கப்பட்டால், மொத்தம் இரண்டு நபர்களாக கருதப்படுகிறது.

ii. வீடுகளின் சேதம்


2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அனர்த்ததின் அடிப்படையில், பரட்டாதி மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் சேதமடைந்தன. 2019 ஆம் ஆண்டில் பலத்த காற்று மற்றும் வெள்ளத்தால் மொத்தம் 6,108 வீடுகள் சேதமடைந்துள்ளன, மேலும் மோசமான தாக்கத்தை காலி மாவட்டத்தில் வாசிகளினால் உணரப்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக மொத்தம் 1,425

வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளன, அதில் மாத்தறை மாவட்டத்தில் 43 வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன.




குறிப்பு 2.6: சேதமடைந்த வீடுகள் (பதட்டமாகவும் முழுமையானதாகவும்)

iii. 2019 ல் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக வீடுகள் ஓரளவு மற்றும் முழுமையாக சேதமடைந்தன




குறிப்பு 2.7: 2019 ஆம் ஆண்டில் பல்வேறு பேரழிவுகள் காரணமாக வீடுகள் ஓரளவு மற்றும் முற்றிலும் சேதமடைந்தன

ஏறக்குறைய 511 வீடுகள் அழிக்கப்பட்டன, மேலும் பலத்த காற்று அல்லது சூறாவளி புயல் காரணமாக 19,969 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.




குறிப்பு 2.8: வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன



குறிப்பு 2.9: வீடுகள் ஓரளவு சேதமடைந்தன


iv. இறப்புகள், காணாமல் போதல் மற்றும் காயப்பட்டுள்ளமை

நீரில் மூழ்கி மொத்தம் 32 பேர் இறந்தனர், இது 2019 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளாகும், இதில் ஒரு (1) நபர் காணமற்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. சூறாவளி புயல்கள் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை முறையே 26 மற்றும் 13 ஆகும். நுவாரெலியா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளன, பலத்த காற்று அல்லது சூறாவளி புயல் காரணமாக 16 பேர் இறந்தனர் மற்றும் 17 பேர் மின்னல் காரணமாக இறந்தனர்.




குறிப்பு 2.10: இறப்புகள் / காணவில்லை மற்றும் காயம்


பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக 2019 ஆம் ஆண்டில் பதிவான மொத்த இறப்புகளின் எண்ணிக்கை 106 நபர்கள் மற்றும் 30மூ நீரில் மூழ்கி இறந்தனர் மற்றும் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் 25மூ ஆக இருந்த சூறாவளி புயல்களால் நிகழ்ந்தன. மின்னல், வெள்ளம் மற்றும் விலங்கு தாக்குதல்கள் போன்ற பேரழிவுகள் முறையே 16மூ, 12மூ மற்றும் 8மூ இறந்தனர்.




குறிப்பு 2.11: பல்வேறு பேரழிவுகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை - 2019




குறிப்பு 2.12: பல்வேறு பேரழிவுகள் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களின் தாக்க பகுப்பாய்வு



குறிப்பு 2.13: பல்வேறு பேரழிவுகள் காரணமாக இறப்புகளின் பகுப்பாய்வு



குறிப்பு 2.14: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் பகுப்பாய்வு



குறிப்பு 2.15: வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களின் பகுப்பாய்வு

v. றறற.னநளளைநவெசய.டம தரவின் அடிப்படையில் அனர்த்தப் பாதிப்புகளின் சுருக்கம் - 2019

பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக 2019 ஆம் ஆண்டில் அதிக பாதிப்புக்குள்ளான மாவட்டங்கள் அம்பாறைஇ மட்டக்களப்புஇ கம்பாஹாஇ பதுளை மற்றும் முல்லைத்தீவு (படம் 2.8)

நுவரெலியாஇ காலிஇ ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளன

2019 ஒட்டுமொத்தமாக 2019 ஆம் ஆண்டில்இ நாட்டின் அனைத்து மாவட்டங்களும் வேறுபட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன மற்றும் வெள்ளத்தால் 23 மாவட்டங்களால் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டதுஇ 22 மாவட்டங்கள் கடுமையான வறட்சி நிலையை வெளிப்படுத்தின

3. தேசிய அளவிலான முக்கிய செயல்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் திருத்தங்கள்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தினால் நிறைவுச் செய்யப்பட்டுள்ளதோடு அதன் வரைபு அனுமதிக்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2 தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டம் (NEOP)

தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டமொன்றை வடிவமைக்கும் அவசியத்தை 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பேரிடர் முகாமைத்துவ சட்டத்தினால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டம் மூலம் நாட்டினுள் பேரிடர்கள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் விவரிக்கப் படுவதுடன் நாட்டினுள் ஏற்படும் காலநிலை, நீர், உயிரியல்,தொழில்நுட்ப மற்றும் மனிதனால் ஏற்படுத்தும் பேரழிவுகளுக்கு பதிலளிக்கும் பொறிமுறைகள் அதில் உள்ளடங்குகின்றன. தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டத்தை எளிதில் அணுகுவதற்காக, தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டம் 1-தொகுதி மற்றும் 2-தொகுதி என இரண்டு தொகுதிகளாக மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது. ஒரு நிறுவனத்தின் சாத்தியக்கூறு மற்றும் நிரந்தர பொறுப்பை மீறும் அவசரநிலை ஏற்பட்டால் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான பொறுப்புகளை ஒப்படைக்க உதவுதல்; முன் எச்சரிக்கை பொறிமுறையை செயல்படுத்துதல் மற்றும் தேசிய அவசர நிலை செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டத்தின் தொகுதி 1 இன் மூலமும்; நிறுவன பொறுப்புகள் மற்றும் பணிகள் தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டத்தின் தொகுதி 2 மூலமும் விவரிக்கப்பட்டுள்ளன.

மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டத்திற்கு எதிர்காலத்தில் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் வரை, தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டத்தின் தொகுதி 2 இணை வழிகாட்டலாகக் கொண்டு,அவசர செயல்பாடு அறையின் முலம் மேற்கொள்ளும் பனிகளுக்காக இடைக்கால முகாமைத்துவ குழுவின் இணக்கம் வழங்கப்பட்டுள்ளது.

3.3 நிறுவன அனர்த்த முன்னாயத்தத் திட்டம் (IDMP)

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின்படி, நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதன் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழுள்ள தேசிய கட்டிட அரைச்சி நிறுவனம், வானிலையியல் திணைக்களம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் என்பவற்றுடன் ஒன்றிணைந்து வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டது. அவ் வழிகாட்டல்களை செயல்படுத்துவதற்கு முன்னதாக 10 பங்காளர் நிறுவனங்களுக்கு வதிவிட செயலமர்வொன்று நிகழ்த்தப்பட்டு, அவ் வழிகாட்டல்களின் செயலாக்கம் தொடர்பாக நிறுவன மட்டத்தில் அவதானிப்புகள் பெறப்பட்டன. இறுதி வழிகாட்டல்கள் இடைக்கால முகாமைத்துவ குழுவின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டு மீண்டும் மேட்குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை மின்சார சபை, இலங்கை அணுசக்தி சபை, சுகாதார அமைச்சு, போலீஸ் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் எனும் நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக சுகாதார அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை அணுசக்தி சபை எனும் நிறுவனங்களினால் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களும் தற்போது வழிகாட்டல்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்த செயல்பாட்டில் குறைகள் மற்றும் செங்கல்கள் இருப்பின் அவற்றை திருத்தம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3.4 இடைக்கால முகாமைத்துவ குழு (IMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கும் செயட்பாட்டினை மேற்கொள்வது இடைக்கால முகாமைத்துவ குழுவினாலாகும்.அதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் 2019 ஆண்டினுள் 06 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் உள்ளடக்கம் கீழ்வருமாறு;

1) செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - தலைவர்
2) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு - பிரதிநிதி - உறுப்பினர்
3) பதிக்காப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு - பிரதிநிதி - உறுப்பினர்

4) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - பிரதிநிதி - உறுப்பினர்

5) பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - - உறுப்பினர்

6) பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - உறுப்பினர்

7) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் - செயலாளர்

3.5 கணக்காய்வு மற்றும் நிருவாகக் குழு (AMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயல்பாடுகளை கணக்காய்வுக்கு உள்ளாக்கும் செயப்படு தொடர்பாக கணக்காய்வு ஆலோசனைகள் வழங்கும் குழு கணக்காய்வு மற்றும் நிருவாகக் குழுவாகும். 2019 டிசம்பர் 31, நிலவரப்படி அதன் உறுப்பினர்களின் விபரங்கள் கீழ்வருமாறு;

திரு எ வீ ஜனாதர (தலைவர்)	-	பணிப்பாளர், திறைசேரி வரவு செலவு பிரிவு, பொது திறைசேரி
திரு டப் ஏ தர்மசிறி (உறுப்பினர்)	-	பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திரு எச் யு ஆர் பொன்சேகா (உறுப்பினர்)	-	பிரதம கணக்காளர், ணர்த்தித்த முகாமைத்துவ அமைச்சு
திருமதி கே ஏ சுபத்ரா வல்பொல (உறுப்பினர்)	-	சிரேட்ட உதவிச் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
திருமதி ஏ பீ ஆர் அமரகோன் (அவதானிப்பாளர்)	-	கணக்காய்வு உயர் அதிகாரி, கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
திரு கே ஏ நிஷாந்த (உறுப்பினர்)	-	பிரதி பணிப்பாளர் - நிதி அ.மு.நி.
திரு ஜெ எச் பீ ஜயலத் (உறுப்பினர்)	-	உள்ளக கணக்காய்வாளர், அ.மு.நி.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவினால் எழுப்பப் பட்டிருந்த கணக்காய்வு வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த அவதானிப்புகள் தொடர்பான விடயங்கள் இதில் கலந்துரையாடப் பட்டது. அதன்படி நிதி விதிமுறைகள் 133 மற்றும் 134 மூலம் காட்டப்பட்டுள்ள பணிகள், முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் விடயங்கள் கலந்தாலோசித்து உரிய திருத்தங்களை செய்துகொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிருவாகத்திற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப் பட்டுள்ளன.

அதேபோன்று கணக்காய்வு வினாக்கள் மற்றும் அறிக்கைகளில் எழுப்பப்படும் அவதானிப்புகள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகளுக்காக நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் அளவு மற்றும்தரம் குறித்தும் இதில் மேலும் ஆராயப்படும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2019 ஆண்டுக்குரியதாக நான்கு (04) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு உள்ளக நிருவாக தொகுதியினை ஒழுங்காகவும் துல்லியமாகவும் கொண்டுசெல்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் நிருவாகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அனாலும், ஆண்டுக்குரிய நான்காம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தினை நடத்த முடியாமல் போய்விட்டது.

இலங்கையின் வளங்களுக்கு முன்னுரிமை அளித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்படும் திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பணிகளின் முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்ட இலக்குகளை அடையும் குறிக்கோளுடன் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தியமையை உறுதிச் செய்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒவ்வொரு பிரிவையும் மீளாய்விச் செய்தல் மற்றும் அதன் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை செலவு செய்வதற்காக, அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட நோக்கங்களை உண்மையாகவே அடைந்துள்ளதா மற்றும் பூர்த்திச் செய்யப்பட்ட திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிகள் அத் திட்டங்களின் எதிர்பார்ப்புகளுக்கிணங்க என்பதை நிர்ணயித்தல், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளாகும். அதனை எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக நிறைவேற்ற குழுவினால் எதிர்பார்க்கப் படுகின்றது.

4. குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையம் நான்கு முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு அவற்றில் ஒரு பிரிவாகும்.

பொதுத் திறைசேரியினால் 2019 ஆண்டிற்கான கீழ்வரும் நிதி ஒதுக்கீடுகள் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவ் ஆண்டின் பௌதீக மற்றும்நிதி முன்னேற்றமும் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

2019 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற சாராம்சம்.

செலவு தலைப்பு	கருத்திட்டம்	2019 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் (ரூ.மிலி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மிலி.)		பௌதீக முன்னேற்றம் (%)
			முன்னேற்றம்	கையில் ரசீதுகள்	
3-2509	அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்டங்கள்	200	131.23	42.63	90
10-2509	அபிவிருத்திச் செயற்பாட்டினுள் அனர்த்த அபாய குறைப்பினை	10	7.17	4.4	90

	ஒன்றிணைத்தல்				
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	**15**	**9.72**	**0**	**80**

அட்டவணை 4.1: 2019 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற சாராம்சம்

4.1 அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம், அனர்த்த முன்னாயத்தங்கள், பயிர்ச்சியளித்தல், குறைத்தல்/ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி,அவசர அனர்த்த பதிலளிப்பு எனும் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அதற்கமைய அநர்த்தங்களுக்கு முன், அனர்த்தங்களின் இடையில் மற்றும் அநர்த்தங்களுக்கு பின் எனும் சந்தர்ப்பங்களின் பொது அனர்த்த அபாயங்களை முகாமைத்துவம் செய்வதற்காக மூலோபாய திட்டங்களை தயாரித்து குறுகிய காலமாக மற்றும் நீண்ட காலமாக அத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக இந்த ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் பணிகளையும் அப் பிரிவினால் நிறைவேற்றப் படுகின்றது.

25 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்களினால் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளுவதோடு அதற்கு இணங்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் கீழ்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.2 பிரிவின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

01. தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த ஆபத்துகளை குறைப்பதற்கான மூலோபாய திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்தல்

சகல தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த ஆபத்துகளை குறைப்பதற்கான மூலோபாய திட்டங்களை தயாரித்து வழங்குதல். குறைப்பு திட்டங்களை சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சின் முலம் மேற்கொள்வதற்கான நடுநிலை வகித்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனர்த்த அபாய குறைப்புக்கான ஒதிக்கீடுகளையும் பயன்படுத்தி, மாவட்ட அளவில் இனங்காணப்பட்டுள்ள அனர்த்த அபாய குறைப்பு திட்டங்களிலிருந்து திட்டங்களை தெரிவு செய்து செயல்படுத்துவதற்காக மாவட்ட உதவி பணிப்பாளர்கள் மூலம் ஒருங்கிணைப்பு செய்து அதற்கு தேவையான வழிகாட்டல் வழங்குதல்.

தேசிய அளவிலான அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் கீழ் செயப்படுத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பு வழங்கி அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்.

02. அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயற்பாட்டினுள் ஒன்றிணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயற்பாட்டினுள் ஒன்றிணைப்பதற்காக அரச மற்றும் தனியர்த் துறை நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் உரிய துறைகளை இனங்காணுதல் மற்றும் ஒவ்வொரு துறைகளில் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான வழிகாட்டல்களை தயாரிப்பதன் மூலம் தேசிய அளவில் அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டுடன் ஒன்றிணைப்பதற்கான வழிகாட்டல்களை தயாரித்தல் மற்றும் அவ்வழிகாட்டல்களை நடைமுறை ரீதியாக செயல்படுத்த பின்தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

03. காலநிலை மாற்றங்கள் தொடர்பாக உருவகப்படுதல், தழுவல் மற்றும் குறைத்தலுக்குரிய செயல்பாடுகளை ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

04. அமைச்சின் ஆலோசனைகளின் அடிப்படையில் அனர்த்தங்களின் இழப்புகள்,சேதங்கள் தொடர்பாக மதிப்பிடுதல், தொடையப்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து பின் அனர்த்த மறுசீரமைப்பு, புனரமைப்பு திட்டங்களை செயல்படுத்தல்.

05. அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல்.

06. அனர்த்தங்கள் தொடர்பான தரவு தொகுதிகளை நடத்திச் செல்லுதல் மற்றும் அவற்றை இற்றைப்படுத்துதல் .

07. அனர்த்த அபாயமுள்ள மாவட்டங்களை ஒருங்கிணைத்து, அனர்த்த அபாய மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக அனர்த்த அபாய முகாமைத்துவ வழிகாட்டல்களை வழங்குதல்.

08. மாவட்ட,பிரதேச மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டங்களில், நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கான அனர்த்த அபாய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான தரவுகளை திரட்டுதல், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்/இற்றைப்படுத்துதல் மற்றும் அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பாக உரிய தரப்பினர்களை அறிவூட்டுதல்.

4.3 பிரிவின் செயல்பாடுகள்

i. தேசிய மற்றும் மாவட்ட அளவிலான அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக மூலோபாயத் திட்டங்களை தயாரித்து செயல்படுத்துதல்

- **மாவட்ட மட்டத்தில் அனர்த்த அபாய குறைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்**

எதிர்வரும் ஆண்டிற்காக மாவட்ட உதவி பணிப்பாளர்கள் மூலம் மாவட்ட அளவில் அனர்த்த அபாய குறைப்பு நிகழ்ச்சிகளைத்தெரிவு செய்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் உரிய பரிந்துரைகளுடன் (பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்டங்களுக்கு வழங்கப் பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை அமைய) ஆரம்ப கருத்திட்ட முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளுதல்.

- எதிர்வரும் ஆண்டிற்காக, மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகள், செயல்படுத்துவதற்கான அடிப்படை தகைமைகளை பூர்த்திக் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தி கொள்ளல், அது தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மாவட்டங்களுக்கு பின்னூட்டம் வழங்குதல்.

- குறைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்காக குறைத்தல் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்க ஏற்ப மாவட்டங்களிலிருந்து போதுமான அளவு முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- எதிர்வரும் ஆண்டிற்காக மாவட்ட அளவிலான கருத்திட்ட முன்மொழிவு சாராம்சத்தினை இற்றைப்படுத்துதல் மற்றும் திட்டங்களை தெரிவு செய்வதற்காக தேசிய மட்ட குழுக்களுக்கு சமர்பிக்கத் தேவையான ஆவணங்களை தயாரித்தல்.

- தேசிய மட்டத்தில் கருத்திட்டங்கள் தெரிவு செய்த பின் (பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்டங்களுக்கு வழங்கப் பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை அமைய) அத்திட்டங்களை செய்லபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடல்.

- தெரிவுச் செய்யப்பட திட்டங்களுக்குரிய மதிப்பீடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களின் , துல்லியத்தன்மையை பரிசீலித்தல் மற்றும் அவற்றுக்குரிய கோவைகளை இற்றைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல்.

- தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை செயல்படுத்தும் போது ஏற்படுமசிக்கல்களை தீர்ப்பதற்காக தலையிடுதல் மற்றும் திட்டங்களின் முன்னேற்றத்தை துரிதப்படுத்தவதற்கு தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுதல்.

- கருத்திட்டங்களை பூர்த்திச் செய்தபின், அவற்றை வெற்றிகரமாக நிறைவுச் செய்தமைக்கான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நிதி அறிக்கைகளை சரியாக பூர்த்திச் செய்ய நடவடிக்கையெடுத்தல்.

- அனர்த்த அபாய குறப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை அறிக்கையிடல் (பௌதீக மற்றும் நிதி)

- **தேசிய மட்டத்தில் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் கீழ் செயல்படும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்கள்**

- பல்வேறு தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களால் பேரழிவு அபாயத்தைக் குறைக்கும் திட்டங்களை செயல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவற்றுக்கு தேவையான பங்களிப்பு மற்றும் தலையீடுகளை வழங்குதல்.
- அனர்த்த அபாயங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அவற்றுக்குரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிரல் அமைச்சுக்கள் மூலம் மேற்கொள்வதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களால் மேற்கொள்ளும் பேரழிவு அபாயத்தைக் குறைக்கும் திட்டங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடல்.

ii. அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயற்பாட்டினுள் ஒன்றிணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயற்பாட்டினுள் ஒன்றனைப்பது தொடர்பாக அரச மற்றும் தனியார் துறை தரப்பினர்களை ஒருங்கிணைத்தல்.
- தொழில்நுட்ப செயல்பாட்டுக்கு குழுவின் தொழில்நுட்ப பரிந்துரைகளின் மூலம் தோட்டங்களைத்தயாரித்தல்மற்றும் செயல்படுத்துதல்.
- ஒவ்வொரு துறைக்காக அனர்த்த அபாயங்களை குறைப்பது தொடர்பான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவையொன்றை தேர்ந்தெடுக்கும் நடவைக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல்.
- வழிகாட்டுதல்களைத் தயாரித்தல், பொழிபெயர்ப்புச் செய்தல் மற்றும் அச்சிடுதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பல்வேறு துறைகளினுள் தயாரிக்கப்பட்ட அனர்த்த அபாய குறைப்பு வழிகாட்டல்கள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகள், கூட்டங்கள் போன்றவற்றை ஒழுகுச் செய்வதன் மூலம் அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயற்பாட்டினுள் ஒன்றனைப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- வழிகாட்டல்களை நடைமுறையில் செயல்படுத்துவதற்கான பின்தொடரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iii. காலநிலை மாற்றங்கள் தொடர்பாக உருவகப்படுதல், தழுவல் மற்றும் குறைத்தலுக்குரிய செயல்பாடுகளை ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்

- காலநிலை மாற்றங்கள் தொடர்பாக உருவகப்படுதல், தழுவல் மற்றும் குறைத்தலுக்குரிய கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- காலநிலை மாற்றங்கள் தொடர்பாக உருவகப்படுதல், தழுவல் மற்றும் குறைத்தலுக்குரிய நிகழ்ச்சிகள், பயிற்சி, செயலமர்வுகள் போன்றவற்றை பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் அத்திட்டங்களுக்குரிய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காலநிலை மாற்றங்கள் தொடர்பாக உருவகப்படுதல், தழுவல் மற்றும் குறைத்தலுக்குரிய அறிக்கைகள் தயாரித்தல்.

iv. அனர்த்தங்களின் இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மதிப்பிடுதல்

- அமைச்சின் ஆலோசனைகளின் அடிப்படையில் அனர்த்தங்களின் இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மதிப்பிடுதல்.
- தொடையப்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து பின் அனர்த்த மறுசீரமைப்பு, புனரமைப்பு திட்டங்களை செயல்படுத்தல்.

v. அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல்.

- அனர்த்தங்கள் தொடர்பான தரவுத் தொகுதிகளை நடத்திச் செல்லுதல், இற்றை படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- அனர்த்த அபாயமுள்ள மாவட்டங்களை ஒருங்கிணைத்து, அனர்த்த அபாய மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக அனர்த்த அபாய முகாமைத்துவ வழிகாட்டல்களை வழங்குதல்.
- அனர்த்த அபாய சுயவிவரம் தொடர்பான செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்துதல்.
- அனர்த்த அபாய சுயவிவரத்தை தயாரித்தல் தொடர்பான மேற்பார்வை செய்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்.
- சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் நிறுவனங்களுக்கு அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- தேவைக்கேற்ப தகவல் அறிக்கைகள், வரைபடங்கள் போன்றவற்றை தயாரித்தல்.
- அறிக்கையிடல் மேற்கொள்ளுதல்.

4.4 பிரிவின் பொதுச் செயல்பாடுகள்

- தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்படும் அனர்த்த அபாய குறைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களுக்குரிய கோரிக்கைகள்,முன்மொழிவுகள், குற்றச்சாட்டுகள் ஆகியவற்றுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
- கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்.
- அமைச்சினால் கோரப்படும் அறிக்கைகளை தயாரித்தல்.
- அபாய குறைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்கள், கூட்டங்கள், செயலமர்வுகளில் பங்குபற்றுதல் / தகவல்களை வழங்குதல் / அறிக்கைகளை தயாரித்தல்.
- பிரிவின் ஒட்டுமொத்த முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல் (நிதி மற்றும் பௌதீக)

- பிரிவின் ஒட்டுமொத்த வருடாந்த செயற்றித்ததை தயாரித்தல்.
- கோவைகளை பராமரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- வளங்கள் முகாமைத்துவம் செய்தல் (மனித, பௌதீக மற்றும் நிதி)


4.5 2019 ஆண்டின் முன்னேற்றம்

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட மற்றும் எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டும், மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டும், குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் குறைத்தல் செயற்றிட்டங்கள் தயாரிக்கப் படுகின்றன. அத்தோடு அனர்த்த முகாமைத்துவ விடயத்திற்குரிய ஆராய்ச்சி செயல்பாடுகள், அனர்த்த அபாய மதிப்பீடு மற்றும் அபிவிருத்திச் செயல்பாட்டினுள் அனர்த்த அபாய குறைப்பினை ஒன்றிணைப்பது தொடர்பான நடவடிக்கைகளும், தொடபுடைய தொழில்நுட்ப குழுக்களினூடாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் படுகின்றது.

பொதுத் திறைச்சேரியினால் 2019 ஆண்டிற்காக கீழ்வரும் நிதி ஒதுக்கீடுகள் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு வழங்கப்பட்டது.

செலவு தலைப்பு	கருத்திட்டம்	2019 ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் (ரூ.மில்)
3-2509	அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்டங்கள்	200
10-2509	அனர்த்த அபாய குறைப்பு முறைமையை பிரதான அபிவிருத்தி செயல்பாட்டினுள் ஒன்றிணைத்தல்	10
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	15
மொத்தம்		225

அட்டவணை 4.2: பொதுத் திறைச்சேரியினால் 2019 ஆண்டிற்காக நிதி ஒதுக்கீடுகள்



குறிப்பு 4.1: 2019 ஆண்டிற்காக நிதி ஒதுக்கீடுகள்

குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் அனர்த்தங்களை குறைக்கும் திட்டங்களை செயல்படுத்தல், அநர்த்தங்களை இனங்காணுதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த சுயவிவரங்களை தயாரித்தல், அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி பங்களிப்பினை வழங்குதல் மற்றும் அனர்த்த அபாய குறைப்பு முறைமையை பிரதான அபிவிருத்தி செயல்பாட்டினுள் ஒன்றிணைத்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ள பங்களிப்பு வழங்குகின்றது.

அதற்கமைய, 2019 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தின் சாராம்சம் பின்வருமாறு.

செலவு தலைப்பு	கருத்திட்டம்	2019 ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் (ரூ.மில்)	நிதி முன்னேற்றம் (ரூ.மில்)		பௌதீக முன்னேற்றம் (%)
			முன்னேற்றம்	கைவசமுள்ள பில்கள்	
3-2509	அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்டங்கள்	200	131.23	42.63	90
10-2509	அனர்த்த அபாய குறைப்பு முறைமையை பிரதான அபிவிருத்தி செயல்பாட்டினுள் ஒன்றிணைத்தல்	10	7.17	4.4	90
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	15	9.72	0	80

அட்டவணை 4.3: 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குறைத்தல் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற சாராம்சம்

4.6 அனர்த்தங்களை குறைக்கும் திட்டங்களை செயல்படுத்தல்

இலங்கையினுள் அனர்த்தங்களை குறைக்கும் திட்டங்களை செயல்படுத்துவது இப்பிரிவின் முக்கிய செயல்பாடு ஆவதோடு ஒவ்வொரு ஆண்டிற்காகவும் பொதுத் திறைச்சேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை முகாமைத்துவம் செய்து அனர்த்தங்களை குறைக்கும் திட்ட முன்மொழிவுகளின் முன்னுரிமைப் படுத்தலுக்கு அமைய திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இதில் பல்வகையான அநர்த்தங்களைக்குறைக்கும் திட்டங்கள் அவற்றுக்குரிய நிரல் அமைச்சின் மூலம் அவ் அமைச்சின் ஒதுக்கீடுகளைக் கொண்டு மோற்கொள்ள ஊக்குவிப்பதுடன், முன்னுரிமை

அடிப்படையில் ஏனைய அனர்த்தங்களை குறைக்கும் திட்டங்களை செயல்படுத்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதில், மாவட்ட அளவில் கோரப்படும் அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்ட முன்மொழிவுகளை கவனத்தில்கொண்டு தேசிய மட்டத்தில் நியமிக்கப்படும் குழுவொன்றினால் அனர்த்த குறைப்பி கருத்திட்டங்கள் தெரிவுச் செய்யப் படுவதுடன், அதன் பின்னர் அக்கருத்திட்ட முன்மொழிவுகளை உரியதாக விரிவான மதிப்பீடு அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள்மீது கவனம் செலுத்தி மாவட்ட செயலாளர்களுக்கு ஒதுக்கீடுகளை விடுவிக்க அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினுடாக நடவடிக்கை மேற்கொள்ளும். திட்டங்களை செயல்படுத்துதல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் நேரடியாக மேற்பார்வை செய்யப் படுவதோடு, தேசிய மட்டத்திலும் கருத்திட்ட முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்படும். ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவையான பல்வேறு தொழில்நுட்ப பங்களிப்புகள் மாவட்ட மட்டத்தில் அதற்குரிய தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுவதோடு, மாவட்டச் செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகத்தை ஊடக நிதி பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். கருத்திட்டத்தினை நிறைவு செய்தபின் முறையான களப்பரிசோதனை மேற்கொண்ட பின்னர், கருத்திட்டம் வெற்றிகரமாக பூர்த்திக் செய்தமைக்குரிய தொழில்நுட்ப பரிந்துரைகளுடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிக்கை வழங்கப்படும்.

அனர்த்தங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் மாவட்ட அளவில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு, சமர்ப்பிக்கப்பட்ட குறைத்தல் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.200 மில்லியன் தொகையை 2019 ஆண்டுக்கான பொதுத் திறைச்சேரியின் மூலம் அனுமதிக்கப்பட்டது (ஆண்டின் தொடக்கத்தில் ரூ .100 மில்லியன் மற்றும் ஜூன் மாதத்தில் ரூ .100 மில்லியன் பொதுத் திறைச்சேரியினால் ஒதுக்கப்பட்டது).

2019 க்கான ஒதுக்கீடுகளிலிருந்து ரூ. 68.71 மில்லியன் தொகையை 2018 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் நிலுவைத் தொகையை செலுத்த ஒதுக்கப்பட்டது. கடந்த ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட இந்த செலுத்துதல்கள், சரியான மேற்பார்வையின் கீழ் செலுத்தப்பட வேண்டியிருந்ததால் இந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

2018 ஆண்டிலிருந்து 2019 ஆண்டுக்கு தொடர்ந்து வந்த 03 முடிவுறுத்தப்படாத கருத்திட்டங்களுக்காக ரூ.12.9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு, இத்ஹ்டிட்டங்கள் பூர்த்திக் செய்யப்பட்டு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

2019 ஆண்டுக்கான ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.100 மில்லியன் ஒதுக்கீடுகளிலிருந்து மேட்குறிப்பிட்ட நிலுவை செலுத்துதல் மற்றும் தொடர்ந்து வந்த கருத்திட்டங்களுக்காக

நிதி ஒதுக்கீடு மேற்கொண்டபின் மிகுதியிருந்த நிதியினை இரண்டு புதிய கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர் 2019 ஜூன் மாதம் ஒதுக்கப்பட்ட ரூ.100 மில்லியன் புதிய ஒதுக்கீடுகள் மூலம் 13 கருத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைகளை கவனத்தில்கொண்டு அனர்த்த பதிலளித்து முன்னாயத்தங்களுக்காக பொலிஸாக் பைகளை கொள்வனவு செய்வதற்காகவும் கண்டி பிரதேசத்தில் ஆபத்தான கற்களை அகற்றுவதற்காகவும் அனர்த்த அபாயங்களை குறைக்கும் செலவு தலைப்பின் கீழ் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

4.7 2018 ஆண்டின் முடிவுறுத்தப்படாத கருத்திட்டங்கள்

மாவட்டம்	திட்டங்கள் எண்ணிக்கை	வழங்கிய ஒதுக்கீடு	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம் (%)
பொலன்நறுவை	1	7,679,794.53	5,100,268.75	வறட்சி நிலவியதால் காரணமாக கருத்திட்டத்தின் புட்கள் நாட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை மீளக் கைப்பற்றப்பட்டது. அச்செயல்பாட்டினை தவிர்த்து திட்டம் பூர்த்திக் செய்யப்பட்டது
ஹம்பாந்தோட்டை	1	3,236,969.36	2,859,518.81	100%
நுவரேலியா	1	1,994,258.47	1,793,467.40	100%
மொத்தம்	**3**	**12,450,284.86**	**9,753,254.96**	

அட்டவணை 4.4: 2018 ஆண்டின் முடிவுறுத்தப்படாத கருத்திட்டங்கள்

4.8 2019 ஆண்டின் புதிய கருத்திட்டங்கள்

மாவட்டம்	பிரதேச செயலகம்	ஒதுக்கீட்டுத் தொகை	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம் (%)
மொனராகலை	மேதகம	12,400,000.00	5,588,007.60	85
	புத்தள	10,000,000.00	-	100
	மடுல்ல	1,997,264.59	1,664,043.24	100
	பொது கிணறுகள் அமைத்தல் (மேதகம,புத்தள மடுல்ல, சியம்பலாண்டுவ)	26,938,468.20	3,165,089.17	100
மட்டக்களப்பு	செட்டிபாளையம் தெற்கு	4,300,000.00	1,119,229.16	100
கழுத்தரை	பேருவளை	10,000,000.00	1,507,369.70	100
அம்பாறை	அடடாளைச்சேனை	5,500,000.00	5,323,473.34	100
திருகோணமலை	கந்தளாய்	1,000,000.00	970,000.00	100
	சேருவில	6,000,000.00	5,820,000.00	100
கண்டி	கண்கவடகோரலே	9,800,000.00	6,178,670.00	100
	கண்கவடகோரலே	3,229,640.40	2,414,910.00	100
	அக்குறணை	956,091.75	950,000.00	100
வவுனியா	வவுனியா	6,700,000.00	-	100
ஹம்பாந்தோட்டை	ஹம்பாந்தோட்டை	8,838,634.17	6,677,799.90	100
மாத்தளை	யடவத்த	2,581,752.57	-	100
பொலன்நறுவை	லங்காபுர	7,418,514.12	-	100
அவசர அனர்த்த நிலைகளில் பொலிஸாக் பைகளை கொள்வனவு செய்தல்		2,500,000.00	2,5000,000.00	100

அட்டவணை 4.5: 2019 ஆண்டின் புதிய கருத்திட்டங்கள்

கருத்திட்டங்கள் பூர்த்திக் செய்யப்பட்டு பற்றுசீட்டுக்கள் சமர்பிக்கப் பட்டிருந்தாலும், 2019 ஆண்டிற்குள் அவற்றை கணக்குத்தீர்க்க இயலாமல் போனதால் கருத்திட்டங்கள் சிலவற்றின் பௌதீக முன்னேற்றம் 100% காணப்பட்டாலும் நிதி முன்னேற்றம் குறைவாகவே காணப்படுகிறது. அத்துடன் அப் பற்றுசீட்டுகள் கைவசமுள்ளவைகளாக மாவட்ட உதவி பணிப்பாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக நிதிமுன்னேற்றம் ரூ.117.57 மில்லியன் ஆவதோடு, கைவசமுள்ள பற்றுசீட்டுக்களின் பெறுமதி ரூ.51 மில்லியன் ஆகும். ஒரு கருத்திட்டம் மாத்திரம் முடிவுறுத்தப்படாத ஒன்றாக எதிர்வரும் ஆண்டுக்கு நீடிக்கப்படவுள்ளது.



ஹம்பாந்தோட்டை உஹப்பிடகொட மழைநீர் வடிகாலமைப்பு



பொலன்நறுவை கந்தேகம சத்தாதிஸ்ஸ குளத்தின் புனரமைப்பு



நுவரா எலியா - நோர்வூட் கால்வாய் விரிவாக்கம்

<u>அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டினுள் ஒன்றனைத்தல்</u>

அனர்த்த முகாமைத்துவ விடயமானது ஒரு கூட்டு செயல்பட்டாகவேண்டிதொடு இதற்காக சகல துறைகளினதும் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்கள் நாட்டின் எந்தவொரு இடத்திலும் நிகழக்கூடிய அபாயமுள்ளதினால் நீர்,தரை ஆகாயம் எனும் சகல துறைகளின் செயட்பாடுகளுடன் அனர்த்த அபாய குறைத்தல் ஒன்றிணைக்கப்பட வேண்டியுள்ளது. நடைமுறைத்தன்மையை கவனத்தில்கொண்டு நேரடியாகவே அனர்த்த அபாய முகாமைத்துவத்துக்கு பங்களிப்பினை பெற்றுக்கொள்ளவேண்டிய 10 துறைகளை

இனங்கண்டு, அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டினுள் ஒன்றனைக்கும் கருத்திட்டம் அத்துறைகளினுள் செயல்படுத்தப் படுகின்றது.

இத்திட்டம் அரச மற்றும்தனியார் எனுமிரு துறைகளையும் ஒன்றிணைத்து செயட்படுத்தப் படுவதோடு இத்துறைகளினுள் அனர்த்த அபாய குறைப்பது தொடர்பாக விவான கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டினுள் ஒன்றனைப்பது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் அநர்த்தங்காணிகளும் தன்மையை மிக வேகமாக குறைத்துக்கொள்ள கூடியதோடு அதனுடாக மனித, பௌதீக மற்றும் பொருளாதார வளங்களை பாதுகாத்துக்கொண்டு நிலையான அபிவிருத்தியினை நோக்கி நாட்டை கொண்டுசெல்வதற்கு பங்களிப்பினை வழங்கலாம்.

அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தியின் பிரதான செயல்பாட்டுடன் ஒன்றிணைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தொழில்நுட்ப செயல்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, பல்வேறு துறைகளின் நிபுணர்கள் இத் தொழில்நுட்ப குழுவை பிரதிநிதித்துவ படுத்துகின்றனர். இக் குழு ஒன்றுகூடி கருத்திட்டத்திற்குரிய எதிர்கால செயட்பாடுகளை திட்டமிடல் மற்றும் மெற்பார்வை மேற்கொள்ளப்படும்.

2019 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப குழு கூட்டம் இடம்பெற்றதோடு, அதன்போது கண்டறியப்பட்ட 10 துறைகளினுள் அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டினுள் ஒன்றனைப்பதற்கான வழிகாட்டல்களை தயாரிப்பதற்குரிய மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் வழிகாட்டல்களை தயாரிக்கும் முறைமை தொடர்பாக ஆலோசக நிறுவனத்தினால் தொழில்நுட்பக் குழு அறிவூட்டப்பட்டதுடன், அதன்போது தொழில்நுட்ப குழுவின் கருத்துக்கள் மற்றும் இணக்கங்களின் கீழ் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன. அதன்பின்னர் முதல் வரைபு தொழில்நுட்ப செயல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு மூன்று சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப செயல்குழுவுடன் இது தொடர்பாக கலந்தாலோசித்து அக் கருத்துக்களுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்ட இறுதி வரைபினையும் தொழில்நுட்ப குழுவிடம் சமர்பிக்கப்பட்டதன் பின்னர் ஆலோசக நிறுவனத்தினால் அவ் இருந்து வெளியீட்டினை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கையளிக்கப் பட்டது.

அதற்கமைய, கீழ்வரும் துறைகளில் அனர்த்த அபாய குறைப்பினை பிரதான அபிவிருத்திச் செயல்பாட்டினுள் ஒன்றனைப்பதற்கான வழிகாட்டல்கள் தயாரித்தல் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

01. தேசிய திட்டமிடல்
02. நகர அபிவிருத்தி
03. தேசிய மற்றும் மாகாண நெடுஞ்சாலைகள் அமைத்தல் மற்றும் அபிவிருத்தி
04. உள்ளூராட்சி
05. சுற்றுலாத்துறை
06. தனியர்த் துறை
07. சுகாதாரம்
08. நீர் மற்றும் சுகாதாரம்
09. சுற்றாடல் பாதிப்பு ஆய்வுகள்
10. தேசிய அனர்த்த முகாமைத்துவ மூலோபாயங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இவ் வழிகாட்டகள் அச்சிடப்பட்டு தொடர்புடைய துறைகளுக்கு வழங்க உத்தேசிக்க படுவதோடு அவ்வழிகாட்டல்களை ஒவ்வொரு துறைகளிலும் செயல்படுத்துவதற்கு இலகுவாக்க எதிர்பார்க்கப் படுகின்றது. அதன்போது தொழில்நுட்ப செயல் குழு உறுப்பினர்களின் தலைமையில் அத்துறைகளுக்குரிய நிறுவனங்களினுள் அனர்த்த ஆபத்து முகாமைத்துவதை ஒன்றிணைப்பதற்கான குழுக்களை உருவாக்கி அதன் மூலம் மேற்போந்த வழிகாட்டல்களை செய்லபடுத்துவதை ஊக்குவிப்பதற்கும் திட்டத்தின் பின்தொடரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது.

<u>கல்வித் துறையினுள் அனர்த்த அபாயக் குறைப்பை ஒன்றிணைத்தல்</u>

அனர்த்த அபாய குறைத்தலை சமூகமயப் படுத்துவதற்கான மிக பொருத்தமான துறையாக பாடசாலை தொகுதியினை குறிப்பிடலாம் என்பதோடு சிறு பருவத்திலிருந்தே அனர்த்த அபாய முகாமைத்துவத்தை சிறுவர் மனதில் நிலைநாட்டுவது அனர்த்த அபாயங்களை குறைத்தலை நடத்தை மாற்றமாக மனித சமுதாயத்தில் தப்பிக்கும் சந்தர்ப்பமாக அமையும்.

அனர்த்த அபாயங்களை குறைத்தல் ஒரு வாழ்க்கை பழக்கமாக மாறுவதன் மூலம் நாத்தின் ஒட்டுமொத்த துறைகளிலும் அனர்த்த அபாயங்களை குறைத்தலை செயல்படுத்துவது இலகுவாகும். பல்வேறு துறைகளினுள் அனர்த்த அபாய குறைத்தலை ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதேநேரம் மேற்குறிப்பிட்ட திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அனர்த்த அபாயங்களை குறைக்கும் நிலையான கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவது இதன் நீண்டகால நோக்கமாகும்.

அதற்கமைய பாடசாலை சிறுவர்களுக்காக அடிப்படை அனர்த்த முகாமைத்துவ கருபொருகள் தொடர்பான விழிப்புணர்வை பெற்று, அனர்த்த அபாய மதிப்பீட்டினை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வதற்காக கைநூல் ஒன்றினை வடிவமைத்தல் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதோடு இது பல்வேறு தொழில்நுட்ப மூலங்கள் பயன்படுத்தப்பட்டு கல்வி அமைச்சின் பூரண பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

வடிவமைக்கப்பட்ட கைநூலின் 10000 பிரதிகள் சிங்கள மொழியிலும், 3000 பிரதிகள் தமிழ் மொழியிலும் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு இக் கைநூலை பயன்படுத்தி இலங்கையின் சகல பாடசாலைகளும் உள்ளடங்கும் வகையில் பாடசாலை தொகுதியினுள் அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பான இயலளவை மேம்படுத்துவதற்கு எதிர்வரும் ஆண்டில் செயலாற்ற எதிர்பார்க்கப் படுகின்றது.

<u>அனர்த்த அபாய மதிப்பீடு</u>

நாட்டினுள் இடம்பெற்ற அனர்த்தங்கள், வானிலை மற்றும் காலநிலை வடிவங்கள், இடவியல், பொருளாதார, சமூக மற்றும் பௌதீக பின்னணி போன்ற பல்வேறு விடயங்களை அடிப்படையாகக்கொண்டு அனர்த்த அபாய நிலைகள் தொடர்பான விஞ்ஞான ரீதியாக ஒரு கணிப்பை மேற்கொள்ளும் சாத்தியம் உள்ளதோடு இதற்காக பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள், அறிக்கைகள்

போன்றவையும் ஆதாரமாகும். அத்தோடு அனர்த்த நிலையொன்று ஏற்படும்போது ஒவ்வொரு அனர்த்தத்தின் தன்மைக்கு அமைவாக பாதிக்கக்கூடிய பிரதேசங்கள், பாதுகாப்பான இடங்கள் போன்ற பல்வேறு தகவல்களை முறையாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு பரிசீலனை செய்ய கூடியதாக தயாரிப்பதும் மிக முக்கியமானதொரு விடயமாகும். அத்துடன் அனர்த்த அபாய மதிப்பீட்டுத் தகவல்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பல்வேறுதீர்மானம் எடுப்பது மற்றும் நிகழ்ச்சிகளை திட்டமிடுவது இலகுவாக்கப்படும்.

மாவட்ட அளவில் தரவுகளை ஒன்றுதிரட்டுதல் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தேசிய மட்டத்தில் தொடர்புடைய பங்காளர் நிறுவனங்கள் மூலம் தேவையான தரவுகளை ஒன்றுதிரட்டலும் மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தை செயல்படுத்தல் கீழ்வரும் கட்டங்களை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டதோடு தற்போது அனர்த்த அபாய குறிகாட்டி நூல் அச்சிடப்பட்டு நிறைவுச் செய்யப்பட்டுள்ளது.

- தரவுகளை ஒன்றுதிரட்டுதல் - மாவட்ட மட்டத்தில் மற்றும் பல்வேறு தரவு மூலங்களினுடாக தரவுகள் ஒன்றுதிரட்டப்பட்டன .
- தரவுகளை களஞ்சியப்படுத்தல் (database ஒன்றினை நிர்மாணித்தல்)
- தரவுகளை ஒழுங்குபடுத்தல் (data processing)
- தரவு பகுப்பாய்வு (data analyzing) - ஒவ்வொரு பேரழிவுக்கு அமைவாக தனித்தனியாக பின்வரும் துறைகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.
  - ஆபத்து / பாதிப்பு மதிப்பீடு
  - பாதிக்கப்படக்கூடிய இயலளவு மதிப்பீடு
  - கொள்ளளவு மதிப்பீடு
- ஆபத்து குறிகாட்டியினை கணித்தல் (risk index calculation)
- செல்லுபடியாக்குதல் (Validation)
- வரைபடங்கள் தயாரித்தல் (mapping)
- அச்சிடுதல்

அச்சிடப்பட்ட வரைப்பட புத்தகங்களை உரிய நிறுவனங்களுக்கு விநியோகித்தல் மற்றும் அறிவூட்டல்களை மேற்கொள்ளுதல் 2020 ஆண்டில் மேற்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது. அவ் அபாய குறிகாட்டியினை ஆண்டுதோறும் இற்றைப்படுத்தி அதன் மாற்றங்கள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதோடு அதற்கான செயட்பாடுகளை எதிர்காலத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வித் துறையினுள் அனர்த்த அபாய மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல்

தேசிய அளவில் கல்வித் துறையினுள் அனர்த்த அபாய மதிப்பீடொன்றினை மேற்கொள்ளும் தேவை கல்வித் துறையினுளிருந்தே பலசந்தர்பங்களில் மேலோங்கியதோடு, அது காலத்தின் தேவையாகவும் இருந்தது. அதற்கமைய, 2019 ஆண்டில் இலங்கையின் பாடசாலைகளுக்கான அபாய குறிகாட்டி ஒன்றினை நிர்மாணிக்க தேவையான ஆரம்ப தலையீடுகள் மேற்கொள்வதற்கு இப்பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கல்வி அமைச்சுடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் நடத்திய பின்னர் வளைய கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் அறிவூட்டப்பட்டு மேற்குறிப்பிட்ட அபாய குறிகாட்டியினை தயாரிப்பதற்கான தரவுகளை திரட்டுவதற்குரிய படிவங்கள் விநியோகம் முடிவுத்தப்பட்டுள்ளதோடு அது தரவுகள் ஒன்றுசேர்த்தல் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது.தரவுகள் ஒன்றுதிரட்டப்பட்ட பின்னர் அவற்றை கணினிமயமாக்கப்பட்டு,2020 ஆண்டின் முதலாம் காலாண்டில் இந்த மதிப்பிடுதலுக்குரிய அறிக்கையினை பூர்த்திக் செய்ய எதிர்பார்க்கப் படுகின்றது. பாடசாலைகளினுள் அனர்த்த அபாய குறைத்தல் தெடர்பான தீர்மானங்கள் எடுக்கும்போது இம்மூலம் முக்கியமாவதோடு அனர்த்த அபாய குறைத்தல் தொடர்பான தொழில்நுட்ப அணுகுமுறைகளும் துணையாகவிருக்கும்.

அனர்த்தங்களின் இழப்புக்கள் மற்றும் செதங்கள் தொடர்பாக மதிப்பிடுதல்

அனர்த்தங்களின் இழப்புக்கள் மற்றும் செதங்கள் தொடர்பாக மதிப்பிடுதலுக்கான செயட்பாடுகள் இப் பிரிவின் மூலம் நிகழ்த்தப்படுவதோடு, அதற்காக தரவுகளை இற்றப்படுத்தும் முறைமைகளை உருவாக்குவதற்காக இனங்காணப்பட்ட துறைகளின் கொள்ளளவு மேம்பாட்டினையும் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2019 ஆண்டில் கல்வித் துறையில் மேற்போந்த செயல்பாட்டிற்காக கொள்ளளவை மேம்படுத்துவதற்கு தேசிய அளவிலான நான்கு செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

கல்வி அமைச்சுடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் நடாத்தி ஏற்படுத்திக்கொண்ட இணக்கங்களுக்கு அமைவாக இந்த நிகழ்ச்சிகள் ஒலுன்னுசெய்யப்பட்டன. கல்வி அமைச்சு மற்றும் நாட்டின் சகல கல்வி வலயங்களை பிரதிநிதித்துவ படுத்தி சுமார் 150 உத்தியோகத்தர்கள் இதில் பங்குபற்றினர்.



அனர்த்தங்களின் இழப்புக்கள் மற்றும் செதங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யும் தேசிய மட்ட

Desinventar தரவுத்தளம்

அனர்த்த அபாயங்களை குறைத்துக்கொண்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சிகள் நடத்துவது முக்கியமான விடயமொன்று ஆவதோடு இவ் ஆராய்ச்சி நடவடிக்கைகள் படிப்படியாக நீண்ட காலத்துக்கு விரிவான பரப்பெல்லைக்குள் பரவும் வகையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்த வேண்டும். இதில் அனர்த்த அபாயங்களை குறைத்தல் தொடர்பான ஆய்வுகளுக்கு அடித்தளமாக்கிக் கொள்வதற்கு துல்லியமாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுத்தளமொன்று முக்கிய அம்சமாவதோடு இந்த தேவையை அடையாளங்கண்டு குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் 2008 ஆண்டிலிருந்து Desinventara தரவுத்தளம் நடத்திச் செல்லப் படுகின்றது. அத்துடன் riskinfo இணையப்பக்கமும் இற்றைப்படுத்தப் படுகின்றது. இச் சகல தரவுகளும் இணையத்தளத்தில் திறந்த நிலையில் காணப்படுவதோடு எந்த ஒருவருக்கும் தேவைப்படும் தரவுகளை இணையத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் தொடர்பான கடந்தகால தகவல்கள் அனைத்தும் உள்ளடங்கிய தரவு வங்கி www.desinventar.lk என இணையதளத்தில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு நிகழ்வுக்கு உரித்தானதாக மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அமைய குறிப்பிட்ட அநர்த்தத்தினால் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், சேதமடைந்த சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் எண்ணியல் ரீதியாக இத்தரவு தொகுதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயல்பட்டு பிரிவினால் வெளியிடும் நிலை அறிக்கைகள் போலவே சுகாதார, வனப்பாதுகாப்பு, நீர்ப்பாசன மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பான போலீஸ் அறிக்கைகள் (www.police.lk) போன்ற துறைகளில் பெற்றுக்கொள்ளும் தகவல்களும் இத் தரவு தொகுதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத் தரவு தொகுதி செயல்முறையாக இற்றைப்படுத்தப் படுவதோடு புதிய தரவு மூலங்களை இனங்கண்டு இதனை மேலும் துல்லிமானதொரு தரவு தொகுதியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை இனங்கண்டு செயல்படுத்தப் படுகின்றது.

தரவுத் தொகுதியினை இற்றைப்படுத்தல் தொடர்பாகவும் அதனை மேம்படுத்தல் தொடர்பாகவும் உரிய தரப்பினர் நிறுவனங்களை பிரதிநிதித்துவ படுத்தி 40 தரப்பினர்களின் பங்களிப்பில் செயலமர்வொன்று 2019.06.25 திகதி நடத்தப்பட்டதோடு, அதில் ஏற்படுத்திக்கொண்ட இனக்கண்கள் செயல்படுத்தப்பட்டன.

2019 ஆண்டில் பல்வேறு துறைகளை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களினால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் மூலமும் அதேபோன்று இணையத்தளத்தின் மூலமும் இத் தரவுத் தொகுதியிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபை, கேலனிய பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, விவசாய மற்றும் கமநல காப்புறுத்துச் சபை, மகாவலி

அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வ.ப. சுற்றாடல் மன்றம், JICA நிறுவனம், MAS CAPITAL போன்ற தனியார் நிறுவனங்கள் போலவே முப்படையினர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் இத் தரவு தொகுதியிலிருந்து தரவுகளை பெற்று பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தீர்மானங்களுக்காக பயன்படுத்தியுள்ளனர்.

Riskinfo அபாய தகவல் இணையத்தளம் (riskinfo web potal)

புவியியல் தரவுகளை (Geospatial Data) இந்த இணையத்தளத்தில் உள்ளடக்குவது (upload) இதன்கீழ் மேற்கொள்ளப் படுகின்றது. இப் புவியியல் தரவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப் படுவதோடு அதன் மூலம் அனர்த்தங்கள் இடம்பெறும், இடம்பெறக்கூடிய பிரதேசங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல், தீர்மானங்கள் எடுத்தல் மற்றும் எதிர்கால திட்டங்களை தயாரித்தல் மேற்கொள்ளப் படுகின்றது.

எந்தவொரு கட்டணமும் இல்லாது இணையத்தளத்தின் மூலம் இத் தரவுகள் பெற்றுக்கொள்ளக் கூடியதோடு அதன் மூலம் அனர்த்த முகாமைத்துவம்தொடர்பாக பணியாற்றும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு ஆதரவு வழங்குவதும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் மேற்கொள்ளப் படுகின்றது. பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு தேவையான பயிச்சி வழங்குவதும் இதனூடாக குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன்மூலம் அனர்த்த முகாமைத்துவ துறைக்காக புதிய மனித வளங்கள் உருவாகுவது இதன் பக்க விளைவாக குறிப்பிடலாம்.

செயற்கைக்கோள் (சட்டலைட்) புகைப்படங்களை பயன்படுத்தி அனர்த்தங்களை உள்ளாகிய பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்தல்

அனர்த்த முன்னாயத்தங்களுக்காக போலவே அவசர அனர்த்த பதிலளிப்புகளுக்காகவும், அனர்த்தங்கள் இடம்பெறக்கூடிய மற்றும் இடம்பெற்றுள்ள பிரதேசங்கள் அதேபோன்று ஆபத்துக்குள்ளாகிய மக்கள் தொடர்பான தரவுகள் மிகவும் முக்கியமானதொரு காரணியாகும். இத் தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தகவல்களை வெளிப்படுத்திக்கொள்வது குறைத்தல்,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. காலநிலை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் அனர்த்தம் ஏற்படமுன் மற்றும் ஏற்பட்ட பின் சட்டலைட் புகைப்படங்களை பெற்றுக்கொண்டு அவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் தற்போதைய இரண்டாம்நிலை தகவல்களை அடிப்படையாகக்கொண்டு மேற்குறிப்பிட்ட தகவல்களை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

இந்த புகைப்படங்கள் சர்வதேச செயற்கைக்கோள் தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப் படுவதோடு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அதற்கான விசேட சந்தர்ப்பமொன்று "இன்டர்நேஷனல் சார்ட்டர்" (International Charter) மற்றும் "செண்ட்டியல் ஏஷியா" (Sentiual Asia) எனும் நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதோடு அநர்த்தமொன்றுக்கு முன் முறையான வழிமுறைகளினூடாக

இந்த நிறுவனங்களுக்கு அறிவித்ததன் பின்அவ் அனர்த்த அபாய பிரதேசங்கள் உள்ளடங்குமாறு புகைப்படங்களை பெற்றுக்கொள்ளப்படுவதுடன் அநர்த்தத்திற்கு முன்னும் பின்னும் புகைப்படங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி இப்புகைப்படைகளை பகுப்பாய்வு செய்தல் அதன் பின் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட அளவிலான பொது மக்கள் புகார்கள், கோரிக்கைகள், முன்மொழிவுகள் மற்றும் விசாரணைகளுக்கு பதிலளித்தல்

அனர்த்தங்களை குறைப்பதற்கு உரியதாக பொது மக்களினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் புகார்கள், கோரிக்கைகள், முன்மொழிவுகள் மற்றும் விசாரணைகள் என்பவற்றுக்கு பதிலளித்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு சமர்ப்பித்துள்ள கோரிக்கையின்படி அதற்கு பதிலளித்தல் தீர்மானிக்கப்படும். இக் கடிதங்களுக்காக தீர்வு வழங்கும் இயலுமை மீது கவனம் செலுத்தி அமுலிலுள்ள சட்ட வித்திமுறைகள் மற்றும் இயலளவுக்கு அமைவாக தொழில்நுட்ப பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டு மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு பங்களித்தல் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் குறிக்கோளாகும்.

அனர்த்த முகாமைத்துவ விடய எல்லைக்குட்பட்ட கோரிக்கைகளுக்காக தேசிய அளவில் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கூறினுடாக தேவையான பரிசோதனைகள் மேற்கொண்டு அவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முறையான நடைமுறைகளின்படி தீர்மானங்களை பெற்று தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு விடயத்திற்கு அமைய தொடர்புடைய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நிரல் அமைச்சுக்கு குறிப்பிட்ட கோரிக்கைகளை சமர்ப்பித்தலும் மேற்கொள்வதோடு ஒவ்வொரு கடித பரிமாற்றத்தின்போதும் விண்ணப்பதாரருக்கு ஒரு பிரதியை அனுப்பி அவருக்கு அறிவூட்டல் வழங்கப்படும்.

அனுப்பப்பட்ட ஒவ்வொரு கடிதத்திற்கும் எழுத்துமூல பதிலளித்தல் வழங்கப்பட்டுள்ளதோடு நேரடியாக மேற்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவூட்டல்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆண்டில் இவ்வாறான 266 கடிதங்கள் கிடைத்துள்ளதோடு சகல கடிதங்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

தொடர் இல.	மாவட்டம்	கோரிக்கை கடிதங்கள் எண்ணிக்கை												
		மாதம்												
		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	மொத்தம்
1	மாத்தரை	1	-	2	1	-	-	2	-	-	2	2	-	10
2	கழுத்தரை	-	2	3	-	1	2	2	2	2	3	2	2	21
3	கம்பஹா	2	2	-	2	-	6	1	3	2	1	1	1	21
4	அம்பாறை	-	-	-	-	-	-	-	1	-	-	1	1	03
5	புத்தளம்	1	-	-	2	-	1	1	-	-	-	2	-	07
6	ஹம்பாந்தோட்டை	-	-	-	1	-	-	-	-	-	-	2	-	03
7	குருநாகல்	1	1	-	1	2	1	1	-	2	1	2	-	12
8	நுவரேலியா	2	2	1	-	-	-	3	-	1	3	1	2	15
9	மொனராகலை	-	2	2	-	-	2	1	-	-	-	-	-	07
10	மாத்தளை	1	2	-	-	1	3	1	-	1	-	2	2	13
11	வவுனியா	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	00
12	திருகோணமலை	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	01
13	பொலன்நறுவை	-	-	-	-	1	1	-	1	-	-	-	-	03
14	கேக்கல்ல	2	1	1	-	-	3	1	-	2	-	1	2	13
15	இரத்தினபுரி	3	2	1	1	-	1	1	2	1	4	3	-	19
16	கண்டி	5	4	3	3	1	2	3	2	2	6	2	2	35
17	காலி	3	-	-	1	2	-	1	1	1	1	2	1	13
18	கொழும்பு	1	9	4	4	4	4	3	6	1	7	2	4	49
19	பதுளை	-	-	1	-	-	1	2	1	5	1	4	1	16
20	அனுராதபுர	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	01
21	யாழ்ப்பாணம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	00
22	கிளிநொச்சி	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	01
23	மன்னார்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	00
24	முல்லைத்தீவு	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	00
25	மட்டக்களப்பு	1	-	-	-	-	1	-	-	1		-		03
மொத்தம்		23	28	18	16	12	28	24	19	21	29	30	18	266

அட்டவணை 4.6: மாவட்ட அளவிலான பொது மக்கள் புகார்கள், கோரிக்கைகள், முன்மொழிவுகள் மற்றும் விசாரணைகளுக்கு பதிலளித்தல்

4.9 ஏனைய கருத்திட்டங்கள்

➢ **JICA கருத்திட்டம்**

காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் ஆபத்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கெலனி நதி வடிநிலத்தினுள் நிலவும் ஆபத்து நிலையை குறைப்பதற்காக JICA நிறுவனத்துடன் விசேட கருத்திட்டமொன்றை செயல்படுத்துவதற்காக தற்போது இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு இந்த ஆண்டில் தொடர்புடைய ஒப்பந்தங்களில் உள்நுழைய முடிந்தது.

அதற்கமைய 2020 ஆண்டில் கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப் படுவதுடன் எதிர்வரும் நான்கு ஆண்டு காலத்திற்குள் கருத்திட்ட இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

5. முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு

5.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் படி மாவட்ட/பிரதேச செயலக பிரிவுகள், ஆபத்துக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் அரச துறை நிறுவனங்கள் போன்றவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயாரித்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். வெள்ளம், நிலச்சரிவு, சுனாமி, சூறாவளி போன்ற இலங்கையில் அடிக்கடி ஏற்படும் ஆபத்துகளுக்கு அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளை திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவின் திட்டமிடல் பணிகளில் ஒன்றாகும்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது அதற்கு பதிலளிப்பதற்காக மாவட்ட அளவிலான ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கான ஒரு துணை செயல்பாட்டு ஆவணமாக அனர்த்த முன்னாயத்த திட்டத்தை குறிப்பிடலாம். மாவட்டங்களினுள் ஏற்படும் அநர்த்தங்களுக்காக பதிலளிக்கும் அதி உயரிய முகாமைத்துவ நிறுவனமாவது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவேயாகும். குழுவின் அங்கத்துவம், துணைக் குழுக்கள் மற்றும் அவர்களின் பணிகளும் பொறுப்புக்களும் யாவனவென்று திட்டத்தினுள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. நிருவாக பிரதேசங்கள் தொடர்பான தகவல்கள், நிலவும் ஆபத்துகள், ஆபத்து நிலைகளின் விளைவுகள், மேற்கொள்ளப்பட்ட ஆபத்து நிலை மதிப்பீடுகள், பிரதான நிலையங்கள் தொடர்பான தகவல்கள், பிரதேசத்திலுள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் பேரழிவு பதிலளித்து பொறிமுறையுடன் தொடர்புடைய தரப்பினர்களின் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் இத் திட்டங்களில் உள்ளடங்குகின்றது.


5.2 மாவட்ட அளவிலான முன்னாயத்த திட்டங்கள்

2019 ஆண்டில் பெறப்பட்ட ரூ.18 மில்லியன் நிதியை கொண்டு மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கூறுகளினுடாக செயல்படுத்தப் பட்டத்துடன் அதன் நிதிமுன்னேற்றம் 99.51% ஆகவும், பௌதீக முன்னேற்றம் 100% ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆண்டில் 25 மாவட்டங்களில் பேரழிவு முன்னாயத்த திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அது தொடர்பான மீளவுகளுக்காக ரூ.18 மில்லியன் நிதியினை ஒதுக்கீடு செய்யப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமையை மற்றும் பேரழிவுகளினால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகளை கவனத்தில்கொண்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படும். மாவட்டங்களிடையே நிதி ஒதுக்கீடுகள் வியோகிக்கப்பட்ட முறை மற்றும் அவற்றின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழ்வருமாறு.

ஆண்டு	பொது திறைச்சேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்	செலவு
2017	19.8	19.5
2018	25.0	24.93
2019	18.0	16.8

அட்டவணை 5.1: மாவட்டங்களிடையே ஒதுக்கீடுகள் விநியோகித்தல் மற்றும் செலவுகள் 2017 - 2019



அட்டவணை 5.1: மாவட்டங்களிடையே ஒதுக்கீடுகள் விநியோகித்தல் மற்றும் செலவுகள் 2017 - 2019

மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் பேரழிவு முகாமைத்துவ சாத்தியவளத்தை வலுவூட்டுவதற்கான பல்வேறு முன்னாயத்த திட்டமிடல் செயல்பாடுகளுக்காக 2019 ஆம் ஆண்டில் முன்னாயத்த திட்டமிடல் பிரிவின் மூலம் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டது. பேரழிவு முகாமைத்துவ திட்டங்கள் அச்சிடுதல் மற்றும் தயார் செய்தல் / மீளவுச் செய்தல் என்பவற்றுக்காக தரப்பினர்களின் கூட்டங்கள், செயலமர்வுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் மட்டத்தில்

ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. சுனாமி, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்துதல், ஆபத்துக்கள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தல், ஆபத்து நிலை பகுப்பாய்வு, கிராமீய மட்டத்தில் பேரழிவு முகாமைத்துவ குழுக்களை தப்பித்தல் போன்ற சமூக மட்டத்தின் பேரழிவு பதிலளிப்பு நிகழ்ச்சிகளை நடத்துதல், நீர்த்தேக்க அணைகள் உடைவதற்கு முன்னாயத்தமாக, நீர்த்தேக்க அணைகளின் கீழ் பிரதேசங்களில் வாழும் மக்களுக்காக அவசர நிலைய பதிலளிப்பு முன்னாயத்த திட்டங்களை சமூக பங்களிப்புடன் உருவாக்குதல் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துவதற்காகவும் இப் பிரிவினால் ஒதுக்கீடுகள் வழங்கப்படும்.

5.3 சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை அறிவூட்டும் திட்டம்

சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப் படுவதோடு ரூ.0.38 மில்லியன் ஒதுக்கீடுகளைக்கொண்டு நடத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சிகள் நடத்தியதுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

5.4 மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டம்

31 டிசம்பர் 2019 நிலவரப்படி, 16 மாவட்டங்களில் மாத்திரம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரித்து நிறைவுச் செய்யப்பட்டது. இதற்காக ரூ.2.21 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

5.5 மாவட்ட அளவிலான ஒத்திகை நிகழ்ச்சிகள்

- **வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஒத்திகை மாவட்ட நிகழ்ச்சி**

இந்த நிகழ்ச்சிகள் கழுத்தரை, காலி, மாத்தறை, இரத்தினப்புரி, திருகோணமலை, அம்பாறை மற்றும் கிளிநொச்சி எனும் மாவட்டங்களில் நடத்தப பட்டது. இதற்காக முன்னாயத்த பிரிவினால் ரூ.1.73 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அநர்த்தங்களுக்கு உள்ளாகும் மாவட்டங்களில் நடத்தப்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஒத்திகை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்கள் மற்றும் அதற்கான செலவுகள் கீழ்வருமாறு.

	மாவட்டம்	செலவு செய்த தொகை (ரூ.)	பங்குபற்றியவர்கள்
1	கழுத்தரை	260,625.00	1825
2	காலி	324,040.00	2353
3	மாத்தறை	353,980.00	2160
4	இரத்தினப்புரி	388,805.00	3476

5	திருகோணமலை	302,070.00	3021
6	அம்பாறை	198,585.00	983
7	கிளிநொச்சி	58,498.00	581
		1,886,603.00	**14399**

அட்டவணை 5.2: மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள் தொடர்பான சாராம்சம்

அனர்த்த பதிலளிப்பு செயல்பாடுகளில் ஈடுபடும் தரப்பினர்களை அடையாளம் காணுதல், அனர்த்த பதிலளிப்பு செயல்பாடுகளில் ஈடுபடும் தரப்பினர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், அனர்த்த பதிலளிப்பு செயல்பாடுகளில் ஈடுபடும் தரப்பினர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை உறுதிச் செய்தல் மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துதல், அனர்த்த பதிலளிப்புச் செயல்பாடுகளுக்கான மாவட்ட இயலளவுகள் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணுதல், ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட ஒத்திகை திட்டத்தினை மற்றும் பொறிமுறையை பரிசோதித்தல், மாவட்ட செயலகங்கள் அரச பொறிமுறை மற்றும் உள்ளூராட்சி பொறிமுறை என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினை மற்றும் அரசியல் தலையீட்டினை அனர்த்த பதிலளிப்பு செயல்பாடுகளுடன் ஒத்திசையாக்குதல், ஆபத்து வலயங்களில் வாழும் சமூகத்தினருக்கு தேவையான அனர்த்த பதிலளிப்பு செயல்பாட்டினை வினைத்திறனாக்குதல், ஆபத்து வலயங்களில் வாழும் சமூகத்தினர் மற்றும் வெளி தரப்பினர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை உறுதிச் செய்தல், மேலும் தரமான மற்றும் வினைத்திறனான அனர்த்த பதிலளிப்பு பொறிமுறை ஒன்றினை சகல தரப்பினர்கள் மற்றும் சமூகத்தினர்களுக்கிடையே உறுதி படுத்துதல், பேரழிவு தயாரிப்பு கலாச்சாரமொன்று மற்றும் பாதுகாப்பான கலாச்சாரமொன்று குறித்து சமூகத்தை பழக்கப்படுத்துதல்.




வெள்ள ஒத்திகை நிகழ்ச்சி - நாகொட பி.சே. பிரிவு

5.6 பாரிய நீர்த்தேக்க அணைகள் சார்ந்த பேரழிவுகள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள்

புயல் காற்று அல்லது நிலநடுக்கம் ஏற்படும் சந்தர்ப்பமொன்றில் நீர்த்தேக்க அணைகளை சார்ந்து பேரழிவுகள் இடம்பெறவுள்ள வாய்ப்பை கவனத்தில் கொண்டு,தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய நீர்த்தேக்க அணைகளின் கீழ் பகுதிகளில் வாழும் சமூகத்தினரின் முன்னாயத்த திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்

ஆரம்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டினுள் 19 அணைகள் சார்ந்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை நிகழ்ச்சித் திட்டங்கள் ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, குருநாகல், அனுராதபுரம், பொலன்நறுவை, அம்பாறை, கிளிநொச்சி கண்டி மற்றும் நுவரேலியா மாவட்டங்களில் நடத்தப்பட்டது. சோதனை மற்றும் மீட்பு, முதலுதவி முகாம் முகாமைத்துவம் மற்றும் கிராமங்களின் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள், துணை குழுக்களை உருவாக்குதல், முன்னெச்சரிக்கை பிரச்சார பொறிமுறையொன்றை உருவாக்குதல், அடையாள குறிப்பு பலகைகளை காட்சிப்படுத்தல் மற்றும் இறுதி கட்டமாக பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை கொண்டுச்செல்லல் தொடர்பாக ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் நீர்த்தேக்க அணைகளின் கீழ் பகுதிகளில் வாழும் சமூகத்தினரை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் இத்திட்டத்தில் உள்ளடக்கியது.

5.7 நாட்டினுள் நீரில் மூழ்கி இறக்கும் எண்ணிக்கையை குறைத்தல்

நாட்டினுள் நீரில் மூழ்கியதால் ஏற்பட்டதென அறிவிக்கப்படும் இறப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் தன்மை கடந்த பல ஆண்டுகளாக காணப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாவது, ஆபத்தான பிரதேசங்களில் அடையாள பலகைகளை தாபித்தல் மற்றும் குளங்கள், ஆறுகள் தொட்டிகள் போன்றவற்றில் குளிக்க கூடாதென மக்களை அறிவுறுத்தல் ஆகும். மாத்தரை, பதுளை, மாத்தளை, கேகாலை, இரத்தினப்புரி, குருநாகல், அனுராதபுரம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் நீரில் மூல்குதல் தொடர்பான 215 அடையாள பலகைகள் தாபிக்கப்பட்டன.

மாவட்டம்	அடையாள பலகை எண்ணிக்கை
மாத்தரை	10
பதுளை	10
மாத்தளை	30
கேகாலை	55
இரத்தினப்புரி	30
குருநாகல்	10
அனுராதபுரம்	10
யாழ்ப்பாணம்	30
முல்லைத்தீவு	10
மன்னார்	20
மொத்தம்	**215**

அட்டவணை 5.3: ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்ட அடையாள பலகைகள் எண்ணிக்கை

5.8 வைத்தியசாலை அவசர நிலை முன்னாயத்த திட்டங்களைத் தயாரித்தல்

வைத்தியசாலை அவசர நிலை முன்னாயத்த திட்டங்களைத் தயாரிப்பதன் முக்கிய நோக்கமாவது வைத்தியசாலை பணியாளர்களின் பாதுகாப்பு, நோயாளிகளின் பாதுகாப்பு, அவசர பேரழிவு நிலைமைகளில் வைத்தியசாலைகளை நோக்கி வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் அதற்க்கு பதிலளிப்பதற்கான திட்டங்களை

வகுத்தலாகும். இந் நிகழ்ச்சியின்போது வைத்தியசாலையினுள் மற்றும் சுற்றுப்புற பிரதேசங்களின் இயற்கை மற்றும் ஏனைய அனர்த்தங்களை அடையாளம் கண்டு, அத் தகவல்களின் வரைபடங்களை உருவாக்கி, அதற்கமைய அனர்த்தங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அறிவூட்டுதல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்துதல் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய திட்டமொன்றாகும். இத் திட்டம் 22 மாவட்டங்களில் நடாத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது.



வைத்தியசாலை பாதுகாப்பு நிகழ்ச்சித் த்திட்டம் - மஹாமோதர, காலி

5.9 பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்றிணைந்து அனர்த்த அபாயமுள்ள பாடசாலைகளின் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிச் செய்வதற்காக இந் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப் படுகின்றது. 25 மாவட்டங்களிலும் இவ்வாறான 79 நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து அப் பாடசாலையின் அனர்த்த அபாய வரைபடத்தை தயாரித்தல், அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டுதல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்துதல் இதன் நோக்கங்களாகும்.



ஹிக்கடுவை ரத்னசார கல்லூரி மற்றும் சீனிகம ஸ்ரீ விமலபுத்தி கல்லூரி பாடசாலை பாதுகாப்பு நிகம்ச்சிகள்

5.10 பிரதேச மட்டத்தில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சமூக வலுவூட்டல்கள், நலனோம்பு மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சடன் ஒன்றிணைந்து மாவட்ட மட்டத்திலிருந்து கிராமீய மட்டம்வரையிலான அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வலுவூட்டுவதற்காக பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாதுகாப்பான இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அனர்த்த அபாய வரைபடங்களை தயாரித்து அவசர அனர்த்த நிலைகளின்போது கிராமீய மக்களுக்கு அறிவித்தல் வழங்கும் முறைமையொன்று தயாரிக்கப் படுகின்றது. இதுவரை 10 மாவட்டங்களில் 87 பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டில் நடத்தி நிறைவுச் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ. நிதி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

	மாவட்டம்	நிகழ்ச்சிகள் எண்ணிக்கை	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
01	கொழும்பு	13	12200
02	மாத்தரை	04	
03	பதுளை	04	
04	குருநாகல்	09	
05	அனுராதபுரம்	13	
06	திருகோணமலை	05	
07	மட்டக்களப்பு	09	
08	அம்பாறை	18	
09	மொனராகலை	06	
10	புத்தளம்	06	

அட்டவணை 5.4: 2019 ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் எண்ணிக்கை மற்றும் பங்குபற்றியோரின் எண்ணிக்கை

5.11 பருவமழைக்கால முன்னாயத்த திட்டம் - தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை அழுத்தமுள்ள மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களுடன் மேற்கொண்ட முன்னாயத்த செயட்பாடுகளாக முன்னெச்சரிக்கை வழங்கும் முறைமை, அவசர நிலைப்படுத்தல், குழுக்களாக நிலைப்படுத்தல் மற்றும் நிவாரண சேவைகள், மற்றும் முகாம்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக கலந்துரையாட படுகின்றது. அதனுடாக ஏற்படக்கூடிய உயிர்கள் மற்றும் சொத்துக்கள் சேதங்களை குறைத்துக்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது. தேசிய மட்டத்தின் காலநிலை நிறுவனங்களாகிய வானிலையியல் திணைக்களத்தினால் கடும் மழை மற்றும் புயல்காற்று தொடர்பாகவும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் நிலச்சரிவுகள்

தொடர்பாகவும், நீர்ப்பாசன திணைக்களத்தினால் வெள்ளம் தொடர்பாகவும் கணிப்புகள் மற்றும் முன்னறிவித்தல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய அளவின் பணகளர் நிறுவனங்கள் மற்றும் பதிலளிப்பு குழுக்களாக முப்படைகள், போலீஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் ஆரம்ப கலந்துரையாடல்களை நடத்துவதோடு மாவட்ட,பிரதேச மற்றும்கிராமீய அளவுவரை அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் மக்கள் அவற்றை எதிர்நோக்கி உயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைத்துக்கொள்வதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது..

இத்திட்டத்தின் மூலம் வருடாந்தம் நாட்டை பாதிக்கும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலகட்டத்தில் நாட்டில் ஏற்படும் கடும் மழை மற்றும் புயல்காற்று நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றினால் பாதிக்கும் மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவ குழுக்களை அழைத்து ஏற்படக்கூடிய நிலைமைகளுக்காக (வெள்ளம், நிலச்சரிவு, புயல்காற்று) உரிய மாவட்டங்களை தயார்நிலைப் படுத்துவது நோக்கமாகும்.

2019 ஆண்டானுள் பருவமழை முன்னாயத்த நிகழ்ச்சித் திட்டங்கள், தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச என்ற வகையில் 25 மாவட்டங்களிலும் 152 நிகழ்ச்சிகள் நடத்தி ,உடைக்கப்பட்டன.



மாவட்ட மற்றும் பிரதேச பேருவளை முன்னாயத்த நிகழ்ச்சிகள் - காலி மாவட்டம்

5.12 தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018 – 2030

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் படி தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய சகல திட்டங்களையும் தயாரிக்க வேண்டியுள்ளது. தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம், இலங்கையின் அனர்த்த முகாமைத்தும் தொடர்பான விரிவான கட்டமைப்பை குறிப்பதோடு அதில் நாட்டின் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான ஐந்து வருட திட்டம் உள்ளடங்குகின்றது. அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு அமைவாக அத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு தேசிய அவசர நிலை செயல்பாட்டுத் திட்டம், நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் ஏனைய அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் உருவாக்கப் படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான சென்டாய் கட்டமைப்புக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட 2018 – 2030 கால பகுதிக்கான தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் தற்போது வெளியிடப் பட்டுள்ளதோடு, அதன்

முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதி (செயல்பாடுகளின் பட்டியல்) அனர்த்த முகாமைத்துவ விடயத்துடன் தொடர்புடைய சகல பங்காளர் நிறுவனங்களுக்கும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் பெறுவதற்காக சமர்பிக்கப் பட்டுள்ளது.

5.13 ஒன்றிணைந்த திட்டம் (2020 – 2024) மற்றும் முக்கிய செயல்பாட்டுக் குறிகாட்டிகளை தயாரித்தல் (KPI)

ஒன்றிணைந்த திட்டமொன்றை தயாரிப்பதன் அவசியம் பல ஆண்டு காலமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேவையாக இருந்தது. நிறுவனத்திற்கு விளைவுகள் அடிப்படையிலான முகாமைத்துவ செயல்முறையொன்றை உருவாக்குவதற்காக (Results Based Management) இத்திட்டத்தின் மூலம் செயல்பட முயற்சிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய முக்கிய செயல்பாட்டுக் குறிகாட்டிகளை தயாரித்தல் (KPI) அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு ஒன்றை 2020 - 2024 கால பகுதிக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பணி கோப்பு (Work Basket) மற்றும் பல்வேறு பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட பணி கோப்புகளை (Divisions Work Basket) குறிப்பிட்ட ஆண்டுகளினுள் நிறைவேற்றும் முறை தொடர்பாக விவரிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய இதன் மூலம் எதிர்பார்க்கப் படுவதாவது, வினைத்திறனான முகாமைத்துவ கட்டமைப்புடன் எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப் பகுதியினுள் நிறுவனத்தை முன்கொண்டுச் செல்வதாகும்.

இதன் எதிர்கால நடவடிக்கைகளாக ஆண்டில் புதிதாக மாற்றமடையும் உலக போக்குகள் மீதும் அதேபோன்று உலகளாவிய அனர்த்த அபாய முகாமைத்துவ சமவாயன்கள் வழியான புதிய செயல்பாடுகளுக்காக ஒவ்வொரு பிரிவுக்கும் அதேபோன்று அவற்றின் உத்தியோகத்தர்களுக்காகவும் தொழில் இணக்கப்பாட்டு ஒப்பந்தங்கள் (Work Agreements) ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் உயர் நிறுவனத்திற்கு நிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியரினாலும் மேற்கொள்ளும் சகல செயப்பாடுகளினதும் வினைத்திறனையும், செயல்திறனையும் நன்றாக மதிப்பீடு செய்ய முடியுமானதோடு அது ஒட்டுமொத்த நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு உதவியாக அமையும் அதனால் அரசின் அரச சேவையில் எதிர்பார்க்கும் விளைவுகள் அடிப்படையிலான சேவையை பெற்றுக்கொள்வதற்கு இத்திட்டம் வழிவகுக்கும்.




2019 டிசம்பர் 31 ஒன்றிணைந்த திட்டத்தினை வெளியிடுதல்

06. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவு

6.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் இலங்கையின் அனர்த்த ,முகாமைத்துவ பணிபொறுப்புகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நாட்டினுள் செயல்படுத்துவதற்கு தேவையான ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலயத்திற்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு அதற்கமைவாக அனர்த்த முகாமைத்துவ நிலைய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவு அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களுக்கு பயிற்சியளிக்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2019 ஆம் ஆண்டில், தேசிய, மாவட்ட, பிரதேச செயலக பிரிவு மட்டங்களில் போன்று கிராமீய மட்டம் வரை நாட்டின் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டங்களில் நிலவும் அனர்த்த அபாய நிலைமைகளை புரிந்துகொண்ட அவற்றுக்கு அமைவாக 24 மாவட்டங்கள் பூராகவும் முன்னுரிமை அடிப்படையில் பயிற்சியளிக்கும் மற்றும் விழிப்புணவை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் விரிவான முறையில் செயல்படுத்தப்பட்டன. இவற்றில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 29,403 ஆகும். பயிற்சி வழங்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக தேசிய மற்றும் மாவட்ட அளவிலான கண்காட்ச்சிகள் மூலமாகவும் அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அறிவூட்டப்பட்டனர். கண்காட்ச்சிகளை பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 61,000 ஆகும். இந்நிகழ்ச்சிகளை செயல்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் பொது திறைசேரியிலிருந்து ரூ.19.5 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதோடு அதன் நிதி முன்னேற்றம் 98% எனவும் பௌதீக முன்னேற்றம் 100% எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2013 முதல் 2019 வரை பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகைகள் கீழ்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.



குறிப்பு 6.1 - பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவுக்கு 2013 முதல் 2019 வரை வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தேசிய அளவிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் மூலம் நடத்தப்பட்டதோடு மாவட்ட. பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராமீய அளவிலான நிகழ்ச்சிகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள் மூலம் செயல்படுத்தப் பட்டன. இந்நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தல், பணிப்பாளர் - பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, மூலம் மேற்கொள்ளப்பட்டது.அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட தேசிய அளவிலிருந்து கிராமீய மட்டம் வரையிலான நிகழ்ச்சிகள் தொடர்பான விரிவான விவரங்கள் கீழே வாங்கப்பட்டுள்ளன.

1. **அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் படையணியுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒன்றிணைந்து அனர்த்த முகாமைத்துவ செயல்பாட்டிற்காக இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம்.**

அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவை மேம்படுத்தி அனர்த்த முகாமைத்துவ செயல்பாடுகள் தொடர்பாக இளைஞர் படையணியில் பயிற்சிபெறும் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை அனர்த்த முகாமைத்துவ செயல்பாட்டிற்காக பெற்றுக்கொள்வது இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

அதற்கமைய, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் படையணி ஒன்றிணைந்து 48 இளைஞர் படையணி நிலையங்களில் பயிற்சிபெறும் இளைஞர் யுவதிகளுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான அறிவையும் புரிதலையும் வழங்கப்பட்டு அவர்களை மாவட்ட அளவில் அவசர நிலைமைகளிலும் அதேபோன்று அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டங்களிலும் பங்களிப்பு வழங்கச் செய்யும் முறைமையின் கீழ் இவ் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களிலும் அவ்வாறான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு அவற்றில் 6,831 இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். இதற்க்கு மேலதிகமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தோடு ஒன்றிணைந்து பிரதேச மட்டத்தின் இளைஞர் சமூகத்தினரை அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டதோடு அவற்றில் 668 இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

தொடர் இல.	நிகழ்ச்சி	மாவட்டம்	கலந்துக் கொண்ட எண்ணிக்கை
01	இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிர்ச்சியளித்தல்	அம்பாறை (கல்முனை பி.செ. பிரிவு)	65
02	இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிர்ச்சியளித்தல்	அம்பாறை (ஆலையடிவேம்பு பி.செ. பிரிவு)	69
03	இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிர்ச்சியளித்தல்	பதுளை	126
04	இளைஞர் தன்னார்வ	யாழ்ப்பாணம்	35

	உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி	(கோப்பாய் பி.செ. பிரிவு)	
05	இளைஞர் தன்னார்வ உத்தியோகத்தர்களுக்கான உயிர்காப்பு பயிற்சி	கண்டி (கண்கவட்ட கோர்லே மற்றும் பூஜாபிட்டிய பி.செ. பிரிவு)	134
06	தோட்டத்துறை சார்ந்த இளைஞர் சமூகத்தை அறிவூட்டும் நிகழ்ச்சி	கேகாலை (யாட்டியாந்தோட்டை, புலத்தகோகூப்பிட்டிய, ருவன்வெல்ல, தெரணியகல பி.செ.பிரிவு)	132
07	இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி	நுவரேலியா	50
08	இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிர்ச்சியளித்தல்	பதுளை	57
மொத்தம்			668

அட்டவணை 6.1: அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் படையணியுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒன்றிணைந்து அனர்த்த முகாமைத்துவ செயல்பாட்டிற்காக இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை



அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிற்சயளித்தல் - கேகாலை மாவட்டம்



அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இளைஞர் தன்னார்வ குழுக்களுக்கு பயிற்சயளித்தல் – கம்பஹா மாவட்டம்

2. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களை அறிவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்.

அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பாடசாலை மாணவர்களின் உயிர்களும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்று 2018 ஆம் ஆண்டிலிருந்து அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கல்வி அமைச்சு ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கல்வி அமைச்சு உத்தியோகத்தர்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், பாடசாலை அனர்த்த பாதுகாப்பு வழிகாட்டல்கள் தொடர்பாக பாடசாலை அதிபர்,ஆசிரியர்களின் அறிவையும் புரிதலையும் மேம்படுத்தி சகல பாடசாலைகளுக்குமான பாடசாலை அனர்த்த பாதுகாப்பு திட்டங்களை தயாரிப்பதற்கான பின்னணியினை உருவாக்குதல் என்பன திட்டமிடப்பட்டது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

தொடர் இல.	நிகழ்ச்சி	மாவட்டம்	கலந்துக்கொண்ட எண்ணிக்கை
1	பாடசாலை பாதுகாப்பு தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் நாயகம் அவர்கள் உட்பட்ட அதிகாரிகள் இணைந்து கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் திட்டத்தின் கொள்கைகள் தொடர்பாக நடத்திய கலந்துரையாடல்	அனர்த்த முகாமைத்துவ நிலையம் - கொழும்பு	13
2	பாடசாலை பாதுகாப்பு திட்டம் தொடர்பாக கல்வி வலைய உதவி பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட உதவி பணிப்பாளர்களை அறிவூட்டல்	கொழும்பு, கம்பஹா, கழுத்தரை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி	50
3	பாடசாலை பாதுகாப்பு திட்டம் தொடர்பாக கல்வி வலைய உதவி பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட உதவி பணிப்பாளர்களை அறிவூட்டல்	பதுளை, மொனராகலை, அனுராதபுரம், பொலன்நறுவை, புத்தளம், குருநாகல், மாத்தளை, நுவரேலியா, கழுத்தரை	50
4	பாடசாலை பாதுகாப்பு திட்டம் தொடர்பாக கல்வி வலைய உதவி பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளின் உதவி பணிப்பாளர்களை அறிவூட்டல்	யாழ்ப்பாணம், மன்னார்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு	45
5	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கொழும்பு - ஸ்ரீ ஜெயவர்தனபுர வலயம்	70

6	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கொழும்பு - ஹோமாகம வலயம்	80
7	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கம்பஹா - களனி வலயம்	120
8	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கொழும்பு - கொழும்பு வலயம்	120
9	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கேகாலை - கேகாலை வலயம்	150
10	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	காலி - காலி வலயம்	150
11	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான ஐந்து வருட திட்டத்தை அறிமுக படுத்துதல்	காலி - அம்பலாங்கொட, அல்பிட்டிய, உடுகம வலயங்கள்	250
12	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	நுவரேலியா - ஹட்டன் கல்வி வலயம்	121
13	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபர்களை அறிவூட்டல்	கொத்மலை கல்வி வலயம்	57
14	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக ஆசிரியர் ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்குதல்	கழுத்தரை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, கண்டி	25
15	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக ஆசிரியர் ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்குதல்	அனுராதபுரம், பொலன்நறுவை, குருநாகல், புத்தளம், நுவரேலியா, மாத்தளை, பதுளை, மொனராகலை	35
16	கல்வி வலயங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அபாய முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சி	பதுளை	55
14	அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக ஆசிரியர் ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்குதல்	கழுத்தரை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, கண்டி	25
மொத்தம்			**1391**

அட்டவணை 6.2: 2019 ஆண்டில் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்

3. தேசிய மற்றும் பிரதேச அளவிலான கண்காட்சிகளினூடாக பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

அனர்த்த முகாமைத்துவ செயல்பாடு தொடர்பாகவும் அவசர நிலைமைகளின்போது பதிலளித்தல் தொடர்பாகவும் தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் காட்சிப்பொருட்கள் வடிவமைக்கப் பட்டுள்ளதோடு அவற்றை பயன்படுத்தி பாடசாலை மனவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தேசிய மற்றும் மாவட்ட அளவில் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றது. இத்திட்டம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

2019 ஆண்டில் அக்கண்காட்சிகள் அம்பாறை, கழுத்தரை, கண்டி, அனுராதபுரம், பொலன்நறுவை மற்றும் காலி எனும் மாவட்டங்களில் நடத்தப்பட்டதோடு சுமார் 61000 பேர் காட்சிக்கூடத்திற்கு வருகைதந்து அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக் கொண்டனர்.



பாடசாலை பாதுகாப்பு தொடர்பாக கல்வி வலய உதவி பணிப்பாளர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவி பணிப்பாளர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு மற்றும் நிகழ்ச்சிகளை செயல்படுத்தும் முறைமையை உருவாக்குவதற்கான நிகழ்ச்சி

2019 ஆம் ஆண்டு பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக நடத்தப்பட்ட கண்காட்சிகளின் விவரங்கள்.

தொடர் இல.	கண்காட்சி நடைபெற்ற இடம்	மாவட்டம்	கலந்துகொண்டவர்கள்	கலந்து கொண்ட எண்ணிக்கை
1	டி எஸ் சேனாநாயக கல்லூரியின் கண்காட்சி	அம்பாறை	மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்	5000
2	கழுத்தரை முஸ்லீம் கல்லூரியின் கண்காட்சி	கழுத்தரை	மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்	20000
3	கண்டி கேட்வெ கல்லூரியின் கண்காட்சி	கண்டி	மாணவர்கள்	1500
4	ரஜரட்ட வசந்தய கண்காட்சி	அனுராதபுரம்	பொதுமக்கள்	3500
5	V-2025 Enterprise Sri Lanka வர்த்தக கண்காட்சி	அனுராதபுரம்	பொதுமக்கள்	16500
6	V-2025 Enterprise Sri Lanka வர்த்தக கண்காட்சி	யாழ்ப்பாணம்	பொதுமக்கள்	2500
7	ஷில்பஸேனா தொழில்நுட்ப கண்காட்சி	பொலன்நறுவை	பொதுமக்கள்	10000
8	மஹிந்த கல்லூரியின் கல்வி கண்காட்சி	காலி	மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்	2000
மொத்தம்				**61000**

அட்டவணை 6.3: 2019 ஆண்டில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்காக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் விபரங்கள்



கண்டி கேட்வெ கல்லூரியின் கண்காட்சி



V-2025 Enterprise Sri Lanka வர்த்தக கண்காட்சி - அனுராதபுரம்

4. நிருவாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கும் அதற்காக சமூகத்திற்கு பயிற்சியளித்து சமூகத்தை வழிநடத்தும் செயல்பாட்டிற்கு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கும் இந்த நிகழ்ச்சியினை நிருவாக

கிராம உத்தியோகத்தர்களுக்கு பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்றிணைந்து 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அனர்த்த அபாயங்களை குறைப்பதற்குரிய தொழில்நுட்ப பயன்பாடுகள் ஊடாக நிருவாக கிராம உத்தியோகத்தர்களின் அறிவை மேம்படுத்தி அவர்களின் சேவையை மேலும் வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பெற்றுக்கொள்வதும், அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கு உரிய பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களை மற்றும் அந்த நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை கட்டியெழுப்புவதும் இதன் முக்கிய நோக்கமாகும். அதன்படி 2019 ஆண்டில் மேற்கு, சபராகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்கு ஒரு மாகாணத்திற்கு ஒரு நிகழ்ச்சி என்ற வகையில் 05 மாகாணங்களில் 02 நாள் பயிற்சி திட்டமொன்றினை தொழில்நுட்ப நிவந்தங்கள் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது.

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம்	மாவட்டம்	கலந்துகொண்ட எண்ணிக்கை
1	நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - மேல் மாகாணம்	கம்பஹா, கழுத்தரை, கொழும்பு	50
2	நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - சப்ரகமுவ மாகாணம்	இரத்தினபுரி,கேகாலை	40
3	நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - மத்திய மாகாணம்	கண்டி, மாத்தளை, நுவரேலியா	58
4	நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - வடமேற்கு மாகாணம்	குருநாகல், புத்தளம்	60
5	நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - தென் மாகாணம்	காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை	60
மொத்தம்			**268**

அட்டவணை 6.4: நிருவாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்



நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - தென் மாகாணம்



நிருவாக கிராம உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சி - மேல் மாகாணம், வடமேற்கு மாகாணம்

5. மாவட்ட பேரிடர் முகாமைத்துவ செயல்பாடு தொடர்பாக மாவட்ட அளவிலான ஊடகவியலாளர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

தற்போதைய காலங்களிலே அதிகரித்து வரும் அனர்த்த அபாய நிலைமைகளினால் அவசர அனர்த்த நிகழ்வுகளின்போது மக்கள் வாழ்கை சீர்குலைவதோடு உயிர் மற்றும் சொத்துத் சேதங்களும் ஏற்படுகின்றன. அது மாத்திரமின்றி பாதிப்புகளுக்கு உள்ளாகும் மக்களின் மன அழுத்தங்களும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஆகவே, அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பான தகவல்களை மக்களுக்கு உடனடியாக வழங்குவது அத்தியாவசியமாகும். விசேடமாக, தற்போதைய காலங்களிலே ஏற்படும் அனர்த்தங்களின் தன்மையை பொறுத்து மிக குறுகிய காலத்துக்குள் அத்தகவல்களை மக்களுக்கு வழங்கி அவர்களின் உயிர்களின் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ செயல்பாடு தொடர்பான அறிவு, புரிந்துணர்வு மற்றும் அனுபவமின்றி அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பான தகவல்களை மிக சரளமாகவும், மக்கள் உணரும் வகையிலும் ஊடகங்கள் மூலம் வழங்குவது மிக கடினமானதாகும். இந்த நிலைமை காரணமாக அனர்த்த முகாமைத்துவ செயல்பாடு தொடர்பாக மாவட்ட அளவில் ஊடகவியலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ செயல்பாட்டில் பங்களிப்பு வழங்கும் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை பெற்று மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ செயல்பாடு தொடர்பான புரிந்துணர்வு, அறிவு மற்றும் அனுபவங்களை வழங்கி பயிற்சி வழங்கும் செயல்திட்டங்கள் நடைமுறை படுத்தப்பட்டன. இதன் மூலம் எதிர்பார்க்கப் படுவதாவது, ஊடகவியலாளர்களினால் தமது ஊடக நிறுவனங்களின் மூலம் அவசர நிலைமைகள் தொடர்பான தகவல்களை துல்லியமாகவும் துரிதமாகவும் வழங்கி மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாத்து, அவசர அனர்த்த நிலைமைகளுக்கு பதிலளிப்பதற்க்கான உணர்வுமிக்க சூழலொன்றை ஏற்படுத்துவதும், மிக சரளமாக ஊடகங்களின் வழியாக தகவல்களை மக்களுக்கு குறுகிய காலத்தினுள் வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பதும் ஆகும்.

2019 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பூரண வழிநடத்துதலின் கீழ் நடாத்தப்பட்டதோடு, வானிலையியல் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள் அந்தந்த துறைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கு பங்களித்தனர்.

2019 ஆண்டில் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் விழிப்புணர்வு செயலமர்வுகள்

தொடர் இல.	மாவட்டம்	கலந்துகொண்ட பிரதேச ஊடகவியலாளர்கள்
1	யாழ்ப்பாணம்	15
2	பதுளை	80
3	ஹம்பாந்தோட்டை	30
4	கம்பஹா	82
மொத்தம்		**207**

அட்டவணை 6.5: 2019 ஆண்டில் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் விழிப்புணர்வு



ஊடகவியலாளர் அறிவூட்டல் நிகழ்ச்சி - கம்ப



ஊடகவியலாளர் அறிவூட்டல் நிகழ்ச்சி - பதுளை

6.2 ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்

நிலவும் அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்காக பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களை தொடர்பு படுத்தி ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் அனர்த்த முகாமைத்துவ நிலயத்தினல் மேற்கொள்ளப் படுகின்றது. அதன்படி, 2019 ஆம் ஆண்டின் தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்ட பேரழிவு நிலைமை குறித்து அறிவூட்டுதல் மற்றும் நிலவும் வறட்சி நிலைமை குறித்து பொதுமக்களை அறிவூட்டும் ஊடக சந்திப்புகள் தேவைக்கேற்ப ஆண்டு பூராகவும் மேற்கொள்ளப்பட்டது.



இடம்பெற்ற அனர்த்த நிலைகள் தொடர்பாக ஊடகங்களை அறிவூட்டுதல்

6.3 துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவூட்டுதல்


அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளின்போது ஒவ்வொரு அனர்த்தம் தொடர்பாகவும் மிக சரளமான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப் படுகின்றது. அதற்கமைவாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒட்டுமொத்த செயல்பாடு தொடர்பாகவும்,வெள்ளம், வறட்சி, சுனாமி, நிலநடுக்கம் போன்ற அனர்த்தங்கள் தொடர்பாகவும் மிக சரளமான துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, பொதுமக்களுக்கு ஒவ்வொரு அனர்த்தம் தொடர்பாகவும் அறிவு மற்றும் புரிந்துணர்வு ஏற்படும்வகையில் மற்றும் அவசர நிலைமைகளின்போது செயட்பட வேண்டிய முறை தொடர்பான புரிந்துணர்வு ஏற்படும்வகையில் இத்துண்டுப்பிரசுரங்கள் மூன்று மொழிகளிலும் வடிவமைக்கப் பட்டுள்ளது. வெள்ளம், வறட்சி, சுனாமி, நிலநடுக்கம் போன்ற அனர்த்தங்கள் தொடர்பாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒட்டுமொத்த சேவைகள் உள்ளடக்கியதாக 5 வகையான துண்டுப்பிரசுரங்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்களிப்புடன் வடிவமைத்து 644,000 பிரதிகள் அச்சிடப்பட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கூறுகள் மூலம் நாடு முழுவதும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.





6.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்பை இற்றப்படுத்துதல்

அநர்த்தங்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை மற்றும் பொதுமக்களை அறிவூட்டல் தொடர்பான முன்னறிவித்தல்கள் மற்றும் தகவல்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக வழங்கப்படுகின்றது. அதற்க்கு மேலதிகமாக, பிரபல்யமான சமூக வலையமைப்புகளை இற்றப்படுத்துதல் விழிப்புணர்வு பிரிவின் கீழுள்ள ஊடக பிரிவின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. முக்கியமாக அவசர அனர்த்த நிலைமையொன்றின்போது தரவுகள் மற்றும் தகவல்களை துரிதமாக ஊடகங்களுக்கு வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு தேவையான தரவுகளை இற்றைப்படுத்துதல் நாளாந்தம் மேற்கொள்ளப் படுகின்றது.



அனர்த்த முகாமைத்துவ உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் முகநூல் (Facebook) பக்கம்


6.5 அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான மாவட்ட மட்டத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

2019 ஆண்டிற்கான அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான மாவட்ட மட்டத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.7.9 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளை பயன்பத்தி, 25 மாவட்டங்களிலும் 347 நிகழ்ச்சித் திட்டங்கள் செயட்படுத்தப் பட்டன. இத்திட்டங்கள் பிரதேச மட்டத்திலும் கிராமீய மட்டத்திலும் அந்தந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகள் மூலம் செயட்படுத்த பட்டன. அவ் அரச உத்தியோகத்தர்களுக்காக 75 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தபட்டதோடு, அவற்றில் 5216 அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.முப்படைகளை சார்ந்த 3228 அதிகாரிகளுக்காக 33 நிகழ்ச்சிகள் மற்றும் கிராமீய சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்

நிகழ்ச்சிகளுக்காக 17422 கிராமீய மக்களை இணைத்துக்கொண்டு 239 நிகழச்சிகள் நடத்தப்பட்டது.

தொடர் இல.	நிகழ்ச்சியின் தலைப்பு	திட்டங்கள் எண்ணிக்கை	கலந்துகொண்ட எண்ணிக்கை
01	முப்படை, போலீஸ், சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி	29	3011
02	அரச அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி - அனர்த்த அபாய குறைப்பு	57	4137
03	கிராமீய சமூகத்தை அறிவூட்டல்	74	6991
04	மீன்பிடி சமூகத்தை அறிவூட்டல்	16	960
05	உயிர்காப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	26	1663
06	தேடுதல் மாத்தும் மீட்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	02	136
07	தீ பாதுகாப்பு நிகழ்ச்சிகள்	35	2431
08	இளைஞர் குழுக்கள் பயிற்சித் திட்டங்கள்	18	1266
09	முதலுதவி / முகாம்கள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	74	4195
10	தோட்ட அதிகாரிகளை அறிவூட்டல்	04	215
11	சுகாதார அதிகாரிகளை அறிவூட்டல்	05	349
12	அறநெறி பள்ளி ஆசிரியர்களை அறிவூட்டல்	07	512
மொத்தம்		**347**	**25866**

அட்டவணை 6.6 : மாவட்ட மட்டத்தில் நடாத்திய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்



அட்டவணை 6.2 : ஒவ்வொரு மாவட்டத்திற்க்கான நிதி ஒதுக்கீடு வழங்குதல் - 2019

2019 ஆண்டில் மாவட்ட அளவில் நடாத்திய மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.



அரச நிறுவன அதிகாரிகளுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி - அம்பாறை மாவட்டம்



அரச நிறுவன அதிகாரிகளுக்கு முதலுதவி பயிற்சி வழங்குதல் - பதுளை மாவட்டம்



அரச நிறுவன அதிகாரிகளுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி - அம்பாறை மாவட்டம்



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பாக முப்படையினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி - ஹம்பாந்கோட்டை மாவட்டம்

6.6 அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் தொகுதியின் இயலளவு மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டங்கள்

அனர்த்த அபாய செயட்பாட்டினை வினைத்திறனாகவும் செயல்திறனாகவும் நாட்டினுள் செயல்படுத்தி ஏற்படும் சவால்களை வெற்றிக்கொள்வது அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் தொகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பாகும். இதற்காக, அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் தொகுதியினரின் நவீன தொழில்நுட்ப அறிவையும் துறைசார் விடயங்கள் தொடர்பான புரிந்துணர்வையும் மேம்படுத்திக் கொள்வதற்காக ரூ.03 மில்லியன் தொகையை முதலீடு செய்து இயலளவிய மேம்பாட்டு நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டன. இதன் கீழ் மாவட்ட

அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளில் பணிபுரியும் அதிகாரிகள், மாவட்ட அளவில் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளும்போது அவர்களின் பொருள் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக அனர்த்த அபாயங்களை குறைத்தல் தொடர்பான நான்குநாள் வதிவிட நிகழ்ச்சிகள் 03 இணை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது. சிங்கள மொழியில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் 102 மாவட்ட முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர்.



அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான கிராமீய மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் - பொலன்நறுவை மாவட்டம்

ஆண்டிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளின் பட்ட பின் படிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து ரூ.531,000/- தொகையினை இரண்டு அதிகாரிகளின் அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பான முதுமாணி மற்றும் கலாநிதி பட்டபடிப்புகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட் தொகுதியினருக்கான அவர்களின் கடமைகளுடன் நேரடியாக தொடர்புடைய 19 குறுகிய கால கற்கைநெறிகளில் 62 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். ஊழியர்களின் அடையாளம் காணப்பட்ட தேவைகளுக்கு அமைவாக கணினி மூலம் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தலுக்காக ரூ.500000- நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

அதற்கமைய, அரச தொழில் முகாமைத்துவ நிறுவனத்துடன் (NIBM) ஒன்றிணைந்து அலுவலக உள்ளீடுகள் தொடர்பான 03 நாள் செயல்முறை கணினி நகழ்ச்சிகள் இரண்டு நடாத்தப்பட்டதோடு தொடர்பாடல் அறிவை மேம்படுத்துவதற்காக தொடர்பாடல் பிரிவின் இரண்டு தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்கள் ஸ்ரீ லங்கா டெலிகொம் பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு பயிற்சி நெறியொன்றில் கலந்துகொள்வதற்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட கற்கைநெறிகள் தொடர்பான தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

தொடர் இல.	கற்கைநெறி வகைப்படுத்தல்	கற்கை நெறிகள் எண்ணிக்கை	கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை
01	பட்ட பின் படிப்புக்கான நிதி ஒதுக்கீடுகள்	02	02
02	விடய ஹதொடர்பான கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிகள் (கணக்கு / மனித வள / நிர்வாக))	19	62
03	தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிகள்	03	53
04	மாவட்ட முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளின் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த அபாய முகாமைத்துவ பயிற்சி	03	102
மொத்தம்		**27**	**219**

அட்டவணை 6.7: கற்கைநெறிகளில் கந்துகொண்ட எண்ணிக்கை



தேசிய தொழில் முகாமைத்துவ நிறுவனத்தில் நடாத்தப்பட்ட மூன்றுநாள் தகவல் தொழில்நுட்ப பயிற்சி



அனர்த்த அபாய குறைத்தல் தொடர்பாக தேசிய அபிவிருத்தி நிருவாக நிலையத்தில் நடாத்தப்பட்ட நான்குநாள் பயிற்சி

6.7 தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சி

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 24 சுனாமி பேரழிவினால் 35000 க்கும் மேற்பட்ட உயிர்களை எமது தாய்நாடு இழந்தது. அது மாத்திரமின்றி பல பில்லியன்கள் மதிப்புள்ள உள்கட்டமைப்பு வசதிகளையும் இழக்கச் செய்த அப்பேரலை பல மாவட்டங்களின் பொதுமக்கள் வாழ்க்கையை சீர்குலைய செய்தது.

இந்த பேரழிவில் இறந்த மக்களை நினைவுகூரும் வகையில், 2005 அமைச்சரவை பத்திரத்தின்படி, டிசம்பர் 26 தேசிய பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 26 திகதியன்று சுனாமி மற்றும் ஏனைய பேரழிவுகளில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து சர்வ மத நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் மற்றும் 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளை மய்யமாகக் கொண்டு அரசிய தானவர்கள் போன்று மாவட்ட/பிரதேச செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பில் இறந்தவர்களுக்காக பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

சர்வமத நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக பொது மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ செயட்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், சிரமதானங்களை ஒழுங்குச் செய்தல் போன்ற நிகழ்வுகள் 2019 ஆம் ஆண்டின் தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு செயட்படுத்தப் பட்டன.

விசேடமாக தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு 2004 சுனாமி பேரழிவினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் காலி, பேரலிய பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான கோபுரம் அருகாமையில் நிகழ்வொன்றினையும், 2004 சுனாமி பேரலையினால் முதலாவதாக தாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்தை மையமாகக் கொண்டு அரசியல் அதிகார தலைமைத்துவத்தில் அம்பாறை மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பில் விசேட சர்வமத நிகழ்வுகளும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.



ஹிக்கடுவை பேரலிய சுனாமி ஞாபகார்த்த கோபுரம் அருகில் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு



தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு அம்பாறை மாவட்டம்

07. அவசர செயல்பாட்டு நிலையம் (Emergency Operations Centre)

7.1 அறிமுகம்

2005 ஆம் ஆண்டின் 13 இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ள அவசர செயல்பாட்டு பிரிவு 24x7 மணி நேரமும் இயங்கி வருவதோடு அனர்த்த நிலைகள் உருவாகிவரும் விதத்தையும், பதிலளிப்பு மேற்கொள்ளவேண்டிய அளவையும் தொடர்ச்சியாக மதிப்பிடுகின்றது. அனர்த்தத்தின் அளவு பிரதேச மட்டத்தின் முகவர் நிறுவனங்களின் கட்டுப்பாட்டு எல்லையை கடந்துச் சென்றதும் தேசிய அளவிலான அவசர செயல்பாட்டு பிரிவு, அவசர பாதிலளிப்பு குழுவுடன் ஒருங்கிணைந்து தேடுதல், மீட்பு மற்றும் ஆபத்து நிலைமைகளுக்கு ஆளாகியுள்ள சமூகத்தினரை பாதுகாப்பாக அகற்றுதல் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்கின்றது.

அவசர செயல்பாட்டு நிலையத்தின் "முன்னாயத்தத்தை" தொடர்ச்சியாக பேணுதல் மற்றும் அவசர அழைப்பு நிலைய 117 இலக்கத்துடன் 24x7 மணி நேரம் பூராகவும் செயல்படுவதற்கு தேவையான வளங்களை அதிகரிப்பதன் மூலம் அவசர செயல்பாட்டு பிரிவின் சேவை தரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று அநர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்பை மதிப்பீடு செய்து அதற்கமைவாக ஏற்படக்கூடிய அநர்த்தங்களுக்கு பதிலளிக்கும் செயல்முறை தொடர்பாக தீர்மானிப்பதும், அதன் மூலம் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் அநர்த்தங்களுக்கு பதிலளிக்கும் நடவடிக்கைகளை திட்டமிட்டு, பல்வேறு முன்னறிவிப்பு முறைகளை பயன்படுத்தி அதற்க்கு இணையாக செயல்படுவதும் அவசர செயல்பாடு நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.



24x7 மணி நேர அவசர செயல்பாட்டு நிலையம்

7.2 2019 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள்

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதிக்குள் அறிவிக்கப்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை **138,550** ஆகும். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு

கூறுகளால் உதவிகள் கோரப்படும் பொது அவசர செயல்பாட்டு நிலையத்தினால் போலீஸ் மற்றும் முப்படைகளின் உதவியுடன் மீட்புப்பணிகள், மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுச் செல்லுதல் மற்றும் அவசர நிலை நிவாரணங்கள் வழங்குதல் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

விசேடமாக 2019 அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமையினால் பதுளை,நுவரேலியா, கண்டி, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், முல்லைத்தீவு, பொலன்நறுவை, அனுராதபுர, புத்தளம், குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் எனும் மாவட்டங்களின் மக்கள் பாதிக்கப் பட்டனர். ஏற்பட்ட கடும் மழைவீழ்ச்சி காரணமாக கழுத்தரை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் காலி எனும் மாவட்டங்களின் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக குறிப்பிடலாம்.

தொடர்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களை அழைத்து பருவமழை நிலைமைகளுக்கான ஆயத்தம் (Monsoon Meeting) மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாலோசித்து, உத்தியோகபூர்வ வானிலை அறிக்கைக்கு அமைவாக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சகல மாவட்டங்கள் தொடர்பாக ஊடகங்கள், தொலைபேசி, பெக்ஸ், இணையத்தளம் மற்றும் சமுக வளையங்களின் மூலமாக தொடர்ச்சியாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. வெள்ளங்களினால் ஆபத்தான இடங்களில் தரித்து நின்ற நபர்களை மீட்பதற்காக படகுகள் மற்றும் மீட்புப்பணி குழுக்கள் பயன்படுத்த பட்டதோடு, அநேகமான பாதைகள் வெள்ளத்தினால் மூடப்பட்டமை காரணமாக நிலத்தின் வழியாக உதவி வழங்கும் குழுக்களை அனுப்ப முடியாத காரணத்தினால் மக்களை மீட்டுக்கொள்வதற்காக ஹெலிகொப்டர் மூலம் உதவி வழங்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட முன்கூட்டிய வெளியேறும் அறிவித்தல்கள் ஊடகங்கள், போலீஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ வலையமைப்புகள் வழியாக மக்களுக்கு வழங்கப்பட்டதோடு அதில் 90% வீதமான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றதோடு, சுமார் 10% வீதமான மக்கள் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டனர். இந்த மக்களை மீட்பதற்காக போலீஸ் மற்றும் முப்படைகளுடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **நிலச்சரிவுகள்**

சீரற்ற காலநிலையில் வளர்ச்சியோடு நிலச்சரிவுகள் மற்றும் நிலச்சரிவு அபாயங்கள் இரத்தினபுரி கேகாலை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் ஏற்பட்டதோடு இரத்தினபுரி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பல கடுமையான ஆபத்துகள் இந்த அனர்த்த காலப்பகுதிக்குள் நிகழ்ந்தது. நிலச்சரிவுகள் தொடர்பாக இராணுவ தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அணியினர் தமையாக தளபதிக்கு அறிவிக்கப்பட்டு தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுத்தப் பட்டனர்.

2019 ஆண்டில் பருவகால மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளினால் 156062 குடும்பங்கைச் சேர்ந்த 643487 நபர்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். அதில் 60 பேர் உயிரிழந்து, 113 பேர் காயமடைந்து மேலும் 7 பேர் காணாமல் போயுள்ளனர். 375 வீடுகள் முழுமையாக சேதமடைந்ததோடு 19521 வீடுகளுக்கு பகுதி சேதம் ஏற்பட்டது.



நுவரேலியா மாவட்டத்தின் வளப்பனே பிரதேச பெயலாக பிரிவில் ஏற்பட்ட நிலச்சரிவு

- **பருவமழை காரணத்தால் கடும் கற்று ஏற்படுதல்.**



2019 ஆம் ஆண்டில் கடும் கற்று காரணமாக 13376 குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகின. மீட்புப்பணிகளை ஒருங்கிணைத்தல், வீதிகளை சீராக்குதல், தொலைத்தொடர்பு மற்றும் மின்சார இணைப்புகளை மறுசீரமைத்தல் அதேபோன்று தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒத்துழைப்பை பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் என்பவற்றில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் செயலாற்ற கூடியதாக இருந்தது. பருவமழைக்காலம் ஆரம்பமாகுவதற்கு முன் தமது வீடுகள் அருகாமையிலுள்ள ஆபத்தான மரங்கள் மற்றும் கிளைகளை அகற்றும் படியாகவும், அதற்காக பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

➢ **காட்டுத் தீ மற்றும் ஏனைய தீ விபத்துகளுக்கான உடனடி பதிலளிப்பேச் செயட்பாடுகள்.**

2019 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை இலங்கையில் 131 காட்டுத் தீ பரவல்கள் பதிவாகியுள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திறமையான தகவல் தொடர்பு வலையமைப்பைப் பயன்படுத்தி காவல்துறை, விமானப்படை, ராணுவம் மற்றும் பிராந்திய தீயணைப்பு நிலையங்களின் உதவிகளை பெற்று தீயணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 2018 மற்றும் 2019 ஆண்டுகளை ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் காட்டுத் தீ அதிகரிப்பு காணப்படுகின்றது

.



வீடுகள் / கட்டிடங்கள் தீ பிடித்தல்

ஆண்டு	காட்டுத் தீ எண்ணிக்கை
2017	58
2018	102
2019	131

அட்டவணை 7.1 : 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் ஏற்பட்ட காட்டுத் தீக்கள்



பேரழிவுகளினால் ஏற்பட்ட சேதங்களின் சாராம்சம் - 2019 ஜனவரி 1 முதல் 2019 டிசம்பர் 31 வரையிலான கால பகுதிக்குள்

நிகழ்வு	மரணங்கள்	காயம்	காணாமல் போதல்	வீடுகள் அழிவு	வீடுகள் சேதம்	பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
விலங்கு தாக்குதல்கள்	9	0	0	0	3	16	25
படகு கவிழுதல்	1	0	2	0	0	3	11
இரசாயன தாக்கங்கள்	1	1	0	0	0	2	10
கரையோர அரிப்பு	0	0	0	0	0	4	13
மண் சரிவுகள்	1	8	0	23	254	400	1708
சூறாவளி	0	0	0	1	10	11	37
வறட்சி	0	0	0	0	0	38773	140006
நீரில் மூல்குதல்	32	3	1	0	0	24	71
மின்சார தாக்கங்கள்	1	0	0	0	0	1	7
தீ	1	17	0	104	65	192	794
திடீர் வெள்ளம்	0	5	0	10	142	2510	9892
வெள்ளம்	13	23	2	139	6807	138894	578051
கடும் மழை	0	0	0	0	3	53	164
நிலச்சரிவுகள்	4	3	1	14	127	656	2374
மின்னல்	17	13	0	2	253	331	1304
பாறை வீழ்ச்சி	0	0	0	3	22	70	271
கடும் காற்று	26	89	4	174	12029	13376	50845
டொர்னாடோ	0	0	0	33	115	143	482
மரங்கள் விழுதல்	0	0	0	0	23	29	104
சுவர்கள் விழுதல்	0	1	0	0	10	11	41
மொத்தம்	**106**	**163**	**10**	**503**	**19863**	**195499**	**786210**


அட்டவணை 7.2: 2019-12-31 வரை அனர்த்தங்களை உள்ளாகிய நபர்களின் சாராம்சம்

7.3 முன் அறிவித்தல்கள்


அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன் அறிவிப்பு வழங்கும் 77 கோபுரங்கள் 2009 ஆம் ஆண்டில் கடற்கரை பிரதேசங்களில் தாபிக்கப்பட்டதோடு, அக்கோபுரங்களை மறுசீரமைக்கும் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது.மேலும், குறுந்செய்தி (எஸ்எம்எஸ்) மூலம் சமூக விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக நவீனமயப் படுத்தப்பட்ட தொகுதியொன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.மாவட்ட கூறுகளில் மற்றும் கிராமீய மட்ட சமூகங்களினுள் முன்னெச்சரிக்கை அறிவித்தல்களை விளம்பரப்படுத்தும் இயலளவை மேம்படுத்தலுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அதிக முன்னுரிமை வழங்கியுள்ளது. தற்போது நாட்டின் கூடுதலான பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் இந்த முன்னறிவித்தல் வழங்கும் தொகுதி விரிவாக்கப்பட்டுள்ளது.மேலும் VHF செயல்முறையினுடாக தரை மட்டம் வரை தொடர்பாடல்களை பரவலாக்குவதற்காக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- சர்வதேச சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்துடன் ஒருங்கிணைந்து இலங்கைக்கு முன்னெச்சரிக்கை அறிவித்தல்களை பெற்றுக்கொள்வதற்கான வலையமைப்பு இற்றைப்படுத்தப் பட்டது. (IOTWMS)
- அனைத்து பிராந்திய ஊடக நிருபர்களும் எமது முன் அறிவிப்பு தொகுதியோடு இணைத்துக்கொள்ள பட்டனர்.
- அவசர அனர்த்த நிலைமையொன்றின்போது அல்லது அதற்க்கு முன்னர் சகல அனர்த்த நடவடிக்கைகளுக்கான முன் அறிவித்தல்கள் வழங்குவதற்கான தகவல்களை இற்றைப்படுத்துதல்.
- தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்திற்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு விடுக்கப்பட்ட சகல தகவல் கோரிக்கைகளுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல் உத்தியோகத்தரினுடாக (Information Officer) பதிலளிக்கப்பட்டுள்ளது.
- முன்னெச்சரிக்கை அறிவிப்பு கோபுரங்களின் பராமரிப்பு செயல்பாடுகளை சிறப்பாக பேணுதல், நாளாந்த பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- தொகுதியின் பாவனையாளர்கள் எண்ணிக்கையை 23000 வரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதர பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை எனும் பரீட்சைகளிக்கு இணையாக பரீட்சைத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து அவசர நிலை பதிலளிப்பு திட்டங்களை தயாரித்து அவசர அனர்த்த நிலைமையொண்டின் போது பரீட்சை செயல்பாட்டுக்கு தடங்கல் ஏற்படாது 24 மணி நேரம் முழுவதும் பரீட்சை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.


- 2019 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலுக்கு இணையாக தேர்தல் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து அவசர நிலை பதிலளிப்பு திட்டங்களை தயாரித்து அவசர அனர்த்த நிலைமையொண்டின் போது தேர்தல் செயல்பாட்டுக்கு தடங்கல் ஏற்படாது 24 மணி நேரம் முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- இந்த தரவு தொகுதிக்கு அரச அதிகாரிகள், கிராமீய குழு தலைவர்கள், பாதுகாப்பு துறையினர் உட்பட முக்கிய தொடர்புகளை உள்ளடக்குவதன் மூலம் அவசர அனர்த்த நிலைமையொண்டின்போது முன்னெச்சரிக்கை குறுஞ்செய்தியினை சமூகத்திற்கு வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.
- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டில் 60 நிலச்சரிவு எச்சரிக்கை அறிவித்தல்கள் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டன. அதேபோன்று சீரற்ற காலநிலை தொடர்பாக வானிலையியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 336 அறிவித்தல்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன. அதேபோன்று வெள்ள அபாயங்களை அறிய தருவதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 117 அறிவித்தல்களும் அவசர செயல்பாட்டு பிரிவினுடாக மக்களுக்கு வழங்கப்பட்டன.
- தன்னியக்க மழைமானி தொகுதியொன்று தேசிய கட்டிட அரைச்சி நிறுவனத்தினாலும், வானிலையியல் திணைக்களத்தினாலும் நீர்ப்பாசன திணைக்களத்தினாலும் தாபிக்கப்பட்டுள்ளது. அந்த தரவுகளை ஆராயும் சந்தர்ப்பத்தை வழங்குதல் இந்த ஆண்டில் இடம்பெற்றமையும் அதன் மூலம் இலங்கையில் பொழியும் மலை தொடர்பான மழைமானி தரவுகள் உடனடியாக தெரிந்துக்கொள்ள கூடிய நிலையினுள் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்வது இலகுவாகியுள்ளது.



வானிலையியல் திணைக்கள தன்னியக்க மழைமானி தொகுதி



நீர்ப்பாசன திணைக்கள தன்னியக்க மழைமானி மற்றும் நீர் அளவீட்டு தொகுதிகள்



தன்னியக்க மழைமானி தொகுதிகளின் செயல்திறன்

7.4 அழைப்பு நிலையம்

2013 ஆம் ஆண்டிலிருந்து செயல்படும் அனர்த்த முகாமைத்துவ அழைப்பு நிலையம் (தொடர்பு இலக்கம் 117) அனர்த்த நிலைமைகளின் பொது மக்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்துவற்காக தாபிக்கப்பட்டுள்ளது. அனர்த்தங்கள் காரணமாக மக்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பாதிப்புகள் தொடர்பாக நேரடியாக கேள்விகளை எழுப்புவதன் மூலம் உடனடியாக தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு அவசர அழைப்பு நிலையம் தொடர்ச்சியாக செயலாற்றுகிறது. 2019 ஆம் ஆண்டில் 288,357 எண்ணிக்கையான அழைப்புகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளன.

அவசர அழைப்பு நிலையத்தின் தரவு தொகுதி இற்றைப்படுத்தப்பட்டது. மென்பொருள் இற்றைப்படுத்தல் மற்றும் அழைப்பு நிலையத்தை புதுப்பித்தல் மேற்கொண்டு 24 மணி நேரம் பூராகவும் தொடர்ச்சியாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

காலப்பகுதி	அனர்த்த தகவல் விசாரணை அழைப்புக்கள்	ஏனைய அழைப்புக்கள்	மொத்த அழைப்புக்கள்
2019.01.01 முதல் 2019.01.31 வரை	17615	5340	22955
2019.02.01 முதல் 2019.02.28 வரை	20330	1167	21497
2019.03.01 முதல் 2019.03.31 வரை	24471	1341	25812
2019.04.01 முதல் 2019.04.30 வரை	24349	1244	25593
2019.05.01 முதல் 2019.05.31 வரை	25439	939	26378

2019.06.01 முதல் 2019.06.30 வரை	26873	1054	27917
2019.07.01 முதல் 2019.07.31 வரை	24336	1027	25363
2019.08.01 முதல் 2019.08.31 வரை	24778	1302	26080
2019.09.01 முதல் 2019.09.30 வரை	20961	1602	22563
2019.10.01 முதல் 2019.10.31 வரை	18838	738	19576
2019.11.01 முதல் 2019.11.30 வரை	17036	615	17651
2019.12.01 முதல் 2019.12.31 வரை	25879	1093	26972
மொத்தம்	**270905**	**17462**	**288357**

அட்டவணை 7.3: 117 அழைப்பு நிலையத்திற்கு கிடைத்த அழைப்புக்களின் சாராம்ச அறிக்கை - 2019

117 அழைப்பு நிலையத்திற்கு கிடைத்த அழைப்புக்களின் சாராம்ச அறிக்கை - 2019



அவசர அழைப்பு நிலையம்

7.5 காவல்துறை மற்றும் முப்படைகள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் ஏற்படும் எந்தவொரு அனர்த்த நிலைமையிலும் தேடுதல் மற்றும் மீட்புப்பணிகள் அதேபோன்று அவசர பதிலளிப்பு நடவடிக்கைகள் முப்படைகளினால் மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

இந் நிலையத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முப்படைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரியொருவரின் கீழ் முப்படை மற்றும் காவல்துறை அதிகாரிகள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவசர செயல்பாட்டு நிலையத்தில் 24 மணி நேரம் பூராகவும் முப்படை மற்றும் காவல்துறை படையினர் பணியாற்றுவதோடு இதுவரை ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளின்போது முப்படை தளபதி தலைமையகத்துடன் ஒருங்கிணைந்து மிக குறுகிய காலத்துக்குள் தேவையான இடங்களுக்கு மீட்பு மற்றும் நிவரான பணிகளுக்காக படையணிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேல்குறிப்பிட்ட வகையில் 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளங்கள், நிலச்சரிவுகள், காட்டுத் தீ விபத்துகள் மற்றும் சாதாரண தீ விபத்துக்கள் உட்பட சகல அனர்த்தங்களின் போதிலும் அதேபோன்று பருவமழை காரணத்தால் கழிவடைந்த குடிநீர் கிணறுகளை சுத்திகரிக்கும் பணிகளிலும் முப்படைகளின் மீட்பு மற்றும் நிவாரண சேவைகள் குழுக்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மேலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அநர்த்தங்களின்போது காவல்துறை மற்றும் முப்படைகளுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேலும் பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக காவல்துறை மற்றும் முப்படைகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் கீழ்வருமாறு செயல்படுத்தப் படுகின்றது.

ஒவ்வொரு அனர்த்த நிலைமையின் பொதிலும் மீட்பு பணிகளுக்காக முப்படைகள் மற்றும் காவல்துறை கலந்துகொண்ட மாவட்டங்கள் மற்றும் பிரதான அனர்த்தங்கள்

காற்று தீ மற்றும் ஏனைய தீ விபத்துக்கள்

	மாவட்டம்	பங்குபற்றிய விதம்
முப்படை அணியினர் மற்றும் காவல்த்துறை	மன்னார், கண்டி, மொனராகலை, பதுளை, கம்பஹா, காலி, இரத்தினப்புரி குருநாகல், கம்பஹா, நுவரேலியா, மொனராகலை, இரத்தினபுரி, பதுளை. மன்னார், கம்பஹா.	132 இடங்களில் ஏற்பட்ட தீ விபத்துகளை கட்டுப்படுத்த முப்படை அதிகாரிகளினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 7.4: ஒவ்வொரு அனர்த்த நிலைமையின் பொதிலும் மீட்பு பணிகளுக்காக முப்படைகள் மற்றும் காவல்துறை கலந்துகொண்ட மாவட்டங்கள் மற்றும் பிரதான அனர்த்தங்கள்

பருவமழை காலத்தில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளங்கள், நிலச்சரிவுகள் மற்றும் குளங்கள் கொந்தளிப்புகள்

	மாவட்டம்	பங்குபற்றிய விதம்
முப்படை அணியினர் மற்றும் காவல்த்துறை	யாழ்ப்பணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, கம்பஹா, இரத்தினப்புரி, கொழும்பு, புத்தளம், ஹம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை மட்டக்களப்பு, காலி, மாத்தரை, குருநாகல், பொலன்னறுவை, கழுத்தரை	தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை மற்றும் அவைகளுக்கு இடையிலான மழை காரணமாக ஏற்பட்ட நிலைமை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளுக்கு முப்படையினர்களை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 7.5: ஒவ்வொரு அனர்த்த நிலைமையின் பொதிலும் மீட்பு பணிகளுக்காக முப்படைகள் மற்றும் காவல்துறை கலந்துகொண்ட மாவட்டங்கள் மற்றும் பிரதான அனர்த்தங்கள்

7.6 தேடுதல் மற்றும் மீட்பு தொடர்பான அனர்த்த முகாமைத்துவ 12 நாள் வதிவிட பயிற்சிநெறி

அனர்த்த நிலைமைகளின்போது முப்படைகள் மற்றும் காவல்துறை சார்ந்த தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள் அதேபோன்று சுகாதார துறையின் தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள் மிக முக்கியமான மற்றும் பாராட்டுக்குரிய பங்களிப்புகளை வழங்கின. அதற்கமைய, தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களை வலுவூட்டும் நோக்கத்துடன், உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அனுசரணையில், மாதுறுஓயா - விசேட படையணியினர் பயிற்சி பாடசாலை மற்றும் கம்பொல - இலங்கை இராணுவ அனர்த்த எதிர்செயலாற்று பயிற்சி நிலையம் எனும் இடங்களின் தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களை சார்ந்த 248 உறுப்பினர்களுக்கு பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி உதவிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் உலக சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.





❖ **வெள்ளம் மற்றும் ஏனைய பேரழிவுகள் தெடர்பான பதிலளிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான உபகரணங்களை 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்து 2019 ஆம் ஆண்டில் பகிர்ந்தளித்தல்.**

➢ இலங்கையில் அடிக்கடி நிகழும் பேரழிவுகளுக்கு பதிலளிக்க தேவையான பதிலளிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்து பாதிப்புகள் ஏற்படும் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளும் அவசர செயல்பட்டு பிரிவின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. மாவட்ட அளவில் கோரப்பட்ட தேவைகள் மற்றும் கடந்த அனர்த்த நிலைமைகளின்போது எதிநோக்கிய சிக்கல்கள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இக் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. அதன்படி, ஆண்டதோறும் பல உபகரணங்களை கொள்வனவு செய்து பதிலளிப்பு நடவடிக்கைகளுக்காக மாவட்டங்களுக்கு அவ் உபகரணங்கள் வழங்கப்பட்டது.



அனர்தங்களுக்கு பதிலளிக்கும் செயல்பாட்டுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யும்பொருட்டு 2019 ஆண்டிற்காக அவசர செயல்பட்டு பிரிவுக்கு ஒதுக்கீட்டுக்கு கிடைக்கப்பெறாததோடு அது தொடர்பாக இடைக்கால முகாமைத்துவ

குழுவிற்கு கோரிக்கை சமர்பிக்கப்பட்டு 2019.08.26 ஆம் திகதி நடாத்தப்பட்ட குழு கூட்டத்தின்போது ஒட்டுமொத்த பதிலளிப்பு உபகரண தேவையப்பாட்டில் 20% அளவை பெற்றுக்கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 49 படகு சங்கிலி அரிவாள்கள், 85 கோடரிகள், 37 தெப்பங்கள், 12 இறப்பர் படகுகள், 273 உயிர்காப்பு அங்கிகள், 97 பொதுமக்கள் தொடர்பாடல் கருவி அமைப்புகள், 980 மன்னா கத்திகள், 37 படகு இயந்திரங்கள், 140 (100 மீட்டர்) உயிர்காப்பு தேடாக்கள், 7 (200 மீட்டர்) உயிர்காப்பு தேடாக்கள், 200 உயிர்காப்பு பொதிகள், 64 மழைமானிகள், 10 தாபோலின் சீட் மற்றும் 10 ரெயின்கோட் தேவை அடிப்படையின் கீழ் 25 மாவட்டங்களுக்கும் முப்படை மற்றும் காவல் துறையினருக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டின் இறுதி பாகத்தில் 35 படகு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அக் கொள்வனவுகள் பெறுகை செயல்பாட்டிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டதோடு படகு இயந்திரங்கள் முப்படை மற்றும் காவல் துறைக்கு வழங்கப்பட்டது.

- அவசர செயல்பட்டு நிலையத்திற்கு தேவையாகவிருந்த கலந்துரையாடல் மேசையொன்று (Conference Table) 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி ஈ எச் குரே நிறுவனத்தின் மூலம் ரூ.462,399.00 விலைக்கு பெறுகை செயல்பாட்டிற்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டது.

7.7 SPILLEX 2019 ஒத்திகை நிகழ்ச்சியினை நடத்துதல்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புஅதிகார சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் உட்பட தொடர்புடைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து கடலில் ஏற்படும் எண்ணெய் சிதைவு பேரழிவுக்கு உரியதாக ஒத்திகையொன்று 2019 ஏப்ரல் மாதம் 4 மற்றும் 5 திகதிகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமையில் நடாத்தப்பட்டது. அதன்போது சகல சம்பவ கட்டளை அமைப்பை (ICS) உபயோகபடுத்தி அதிலுள்ள உரிய பதவிநிலைகள் மற்றும் பொறுப்புகளை முறையாக பகிர்ந்தளிக்கப்பட்டு பிரதான செயல்பாட்டு அறையாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயல்பாட்டு அறையை பயன்படுத்த பட்டது. அதிலுள்ள தொடர்பாடல் வலையமைப்பை அந்நாளில் பயன்படுத்தி ஒத்திகைக்குரிய சகல அறிவிப்புத் தேவைகள் பூர்த்திசெய்துகொள்ளப் பட்டன.

பல ஆண்டுகளாக நடாத்தப்படும் இந்த ஒத்திகை நிகழ்ச்சிக்காக 2019 ஆண்டில் காலிமுகத் திடலை பயன்படுத்தி நடைமுறை ஒத்திகையொன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்காக இணை செயல்பாட்டு கட்டளை அதிகாரிகளாக கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அவர்களும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகமவர்களும் கடாமியற்றினர்.

தேசிய எண்ணெய் கசிவு தற்செயல் திட்டத்தின் படி அனைத்து ஏற்பாடுகளும் செயல்படுத்த பட்டதோடு Table Top Exercise மற்றும் Field Exercise (தரையில் மேற்கொள்ளும் பிராந்திய நடவடிக்கைகள்) உள்ளடங்கிய முழுமையான ஒத்திகையொன்று நடாத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படும் ஒத்திகை திட்டத்தில் உள்ள குறைபாடுகள் அடுத்த ஆண்டில் நிவர்த்திக் செய்யப்பட்டு அத்தோடு விசேட சந்தர்ப்பங்களுக்கு உரியதாக எழும் விடயங்களுக்கு அடுத்த ஆண்டில் தீர்வுகளை வடிவமைத்து ஏற்படக்கூடிய எதிர்பாராத எண்ணெய் கசிவு அச்சுறுத்தலுக்கு தயாராகுதல், பயிற்சி பெறுதல், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்கள் எடுத்தல், தீர்வுகாணல், தேவையான இடங்களுக்குரிய குறிப்பிட்ட உபகரணங்களை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த ஒத்திகை பயிற்சி உதவுகின்றது.



ஒத்திகை நிகழ்ச்சிகளை நடாத்துதல்

7.8 அவசர நிலைமைகளின்போது ஊடக ஒருங்கிணைத்தல்

பேரழிவு நிலைமைகளின்போது 24 மணி நேரமும் அச்சீட்டு மற்றும் மின்னணு ஊடகங்களை பயன்படுத்தி முன்னறிவித்தல்களை வழங்கி பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள படுகிறது.

மேலும் 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள நிலமைக்கு முன்னதாக உரிய நேரத்தில் முன்னறிவித்தல்கள் ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டன.


மேலும் ஊடகங்கள் வழியாக மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் தகவல் வெளியிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதோடு அதனை தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்காகவும் செயல்படுத்தப் பட்டது.

அதேபோன்று தேசிய மற்றும்சர்வதேச அளவில் சமூக வலயங்கள் வழியாகவும் தொடர்ச்சியாக மக்கள் விழிப்புணர்வு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



ஊடகங்கள் வழியாக மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தல் - அனர்த்த முகாமைத்துவ நிலையம்

7.9 தேசிய அவசரநிலை செயல்பாட்டுத் திட்டம் (தே. அ. செ. தி.)



தேசிய அவசரநிலை செயல்பாட்டுத் திட்டம் மூலம் நாட்டினுள் பேரழிவுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் விவரிக்கப் படுவதோடு இலங்கையினுள் ஏற்படும் வானிலையியல், நீரியியல், உயிரியல், தொழில்நுட்பவியல் மற்றும் மனிதனால் ஏற்படுத்தும் பேரழிவுகளுக்கான பதிலளிப்பு பொறிமுறைகள் அதனுள் உள்ளடங்குகின்றன. ஒரு நிறுவனத்தின் சாத்தியவளத்தை மற்றும் நிலையான பொறுப்புகளை மீறும் வகையிலான அவசர நிலையொன்றின்போது நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல், மென்னெச்சரிக்கை பொறிமுறையை செயல்படுத்தல், அவசர தேவை செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிறுவன பொறுப்புகள் மற்றும் பணிகள் தொடர்பாக இதில் விளக்கப்பட்டுள்ளன. மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள தே. அ. செ. தி. க்கான அமைச்சரவை அங்கீகாரம் 2017 ஆகஸ்ட் 22 திகதியை மற்றும் அமப/17/2130/715/032 இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் மூலம் வழங்கப்பட்டுள்ளதோடு, அதில் திருத்தங்களை பூர்த்திச் செய்து மீள அனுமதி பெறுவதற்காக தயார் செய்யப்பட்டு வருகின்றது.

7.10 2019 ஆம் ஆண்டில் அவசர செயல்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயல்பாடுகள்


அவசர செயல்பாட்டு நடவடிக்கைகளை இலகுவாக்குதல்

➢ பிரிட்டன் சால்ஃபோர்ட் (Salford) பல்கலைக்ககத்தின் மூலம் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவத்தினை இலகுவாக்குவதற்காக Emergency Response Mobilize Software Platform உள்ளடங்கிய டச் டேபிள் (Touch Table) ஒன்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயல்பாட்டு பிரிவுக்கு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நன்கொடையாக வழங்கப்பட்டது. அதன்முலம் அவசர செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான பலவித மென்பொருள்களை உள்ளடக்கி செயல்பாடுகளை ஒருங்கிணைப்பு செய்யலாம். வரைபடங்களை மிக இலகுவாக பகுப்பாய்வு செய்யும் வசதிகளும், உரிய இடங்களை மிக தெளிவாக அவதானிக்கும் வசதிகளும், பலவிதமான மொடல்ஸ் (Model) அதாவது, Flood Inundation Modal, Landslide In fact Modal, Tsunami Inundation Modal போன்ற மொடல்களை இலகுவாக செயல்படுத்தும் வசதிகளும், ஒவ்வொரு நிறுவனங்கள் ஒரு செயற்பாட்டுக்காக பல வகையான platform களை பயன்படுத்தியுள்ளபோது அவற்றை ஒரே மேடைக்கு கொண்டுவரும் வசதிகளும் இதில் உள்ளடங்குகின்றது.



அவசர செயல்பாட்டு நிலயத்தினுள்

➢ **GIS Unit (அலகொன்றை) தாபித்தல்**



அவசர செயல்பாட்டு அறையினுள் அவசர நிலையொன்றை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் முன்னெச்சரிக்கை வழங்குதலை இலகுவாக்குவதற்காக அவசர பதிலளிப்பு வழங்கல் வரைப்பட அலகு (Emergency Mapping Unit) தாபிக்கப்பட்டது. அதன்மூலம் 2019 ஆண்டில் வெள்ளம் ஏற்பட்ட இடங்களை அடையாளம் கண்டு, அந்த நிலைமைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக விசேட தரவுகள் உள்ளடங்கிய சுருக்கமான அறிக்கைகளுடன்கூடிய வரைபடங்கள் மற்றும் தரவுகளை முன்வைத்து உடனடியாக

தீர்மானங்களை எடுக்க தேவையான தகவல்களை வழங்கும் செயல்முறையொன்றை உருவாக்குதல், தேவையான அறிக்கைகளை தயாரித்து வழங்குதல் மற்றும் அவ் அறிக்கைகள் மூலம் தேவையான நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற பல முக்கிய விடயங்கள் இந்த அலகை தப்பிப்பதன் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது.

7.11 அவசர செயல்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

- பூமியில் ஏற்படும் நிலநடுக்கங்களை கண்காணித்தல் மற்றும் அது தொடர்பாக ஒருங்கிணைத்தல்.

  இந்து - ஆஸ்திரேலிய புவிப்பொறைக் கண்டத்தட்டு கட்டமைப்பில் மாத்திரமல்லாது பூமியிலுள்ள சகல புவிப்பொறைக் கண்டத்தட்டு கட்டமைப்புக்களிலும் ஏற்படும் நில அதிர்வுகள் தொடர்பான தகவல்களை **USGS APP** மூலம் பெற்றுக்கொண்டு அவற்றின் அடிப்படையில் தேவைக்கேற்ப வானிலையியல் திணைக்களம் அத்தோடு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்துடன் **(GSMB)** ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அந் நிறுவனங்களின் தொழில்நுட்ப தகவல்களின்படி கவனத்தில் கொள்ளவேண்டிய அளவிலான நிலநடுக்கங்கள் தென்படும்போது அவற்றில் ரிக்டர் அளவு 5 க்கு மேற்பவைகள் தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளை அறிவுறுத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை மேற்கொண்டு, சுனாமி ஏற்படக்கூடிய வாய்ப்புகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது.

- தினசரி நிலை அறிக்கைகள் தயாரித்தல்.

  மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளிலிருந்து முறையான படிவங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களின்படி தேசிய அளவிலான நாளாந்த நிலை அறிக்கை ஒரு நாளுக்கு மூன்று முறை இற்றப்படுத்தப்பட்டு இணையதளத்துக்கு செலுத்தப்படுகின்றது. அதேபோன்று அந் நிலை அறிக்கைகள் சனாதிபதி செயலகம், பிரதமரின் செயலகம் மற்றுமபாதுகாப்பு அமைச்சு எனும் நிறுவனங்களுக்கு பெக்ஸ் மூலம் அனுப்பப் படுகின்றன. சுமார் 1095 சாதாரண நிலை அறிக்கைகள் 2019 வெளியிடப்பட்டுள்ளதோடு விசேட நிலைமைகளின்போது விசேட நிலை அறிக்கைகள் வழங்கப் படுகின்றன.

- அனர்த்த ஒத்திகை பயிற்சிகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

  சுனாமி, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சிகள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ள படுவதோடு வருடாந்தம் சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி சர்வதேச மற்றும் பிராந்திய மட்டங்களில் மேற்கொள்ள படுகின்றது. அவற்றுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் அவசர செயல்பாட்டு பிரிவினால் வழங்கப்படுகின்றன. அதற்க்கு மேலதிகமாக மாவட்டங்களில்

சுனாமி, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஒத்திகை நிகழ்ச்சிகள் தேசிய, பிரதேச மற்றும் கிராமீய அளவுகளில் நடாத்தப்படும்போது தேவையான தொழில்நுட்ப உதவிகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூறுகளுக்கு வழங்கப்படுகின்றன.

- அவசர செயல்பாட்டு நிலையத்தை பார்வையிட வருபவர்களை அறிவூட்டல்.

  உள்நாட்டு/வெளிநாட்டு மாணவர் குழுக்கள், பாதுகாப்பு துறை அதிகாரிகள், தொடர்புடைய தரப்பினர்கள், அரச அதிகாரிகள் போன்றவர்களுக்காக, அவசர செயல்பாடுகள், முக்குணறிவிப்பு வழங்குதல், அனர்த்த முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாக வீடியோ மாநாட்டு அறை மற்றும் அவசர செயல்பட்டு அறை என்பவற்றை பயன்படுத்தி சுமார் 20 அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.



அவசர நிலை செயல்பாட்டு நிலையத்தின் அறிவூட்டல் நிகழ்ச்சிகள்

7.12 சவால்கள்

- அவசர செயல்பாட்டு நிலயமானது நாட்டில் ஏற்பாடு எந்தவொரு பேரழிவு மற்றும் அவசர நிலைமையின்போதும் அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்காக 24X7 மணி நேரமும் பணியாற்றும் ஓர் நிலையமாகும். அதன்மூலம் நாட்டின் 25 மாவட்டங்களிலும் நிகழும் பேரழிவுகளை ஒருங்கிணைத்து ஆபத்துக்கு உள்ளாகிய அல்லது உள்ளகக் கூடிய நபர்களை காப்பாத்துதல் அல்லது மீட்டுக்கொள்ளல் ஏனைய தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக தேசிய அவசர செயல்பட்டுநிலையம் மற்றும் மாவட்ட செயலகங்களில் தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பி கூறுகள் 24 மணி நேரமும் பணியாற்றுவது மிக முக்கியமானதாகும். இதில் சில மாவட்டங்கள் மற்றும் தேசிய அவசர செயல்பாட்டு நிலையம் 24 மணி நேரம் செயல்பட்டாலும் தற்போதைய ஆள்பற்றாக்குறை காரணமாக 24X7 சேவைக்கு ஏனைய மாவட்டங்களை இணைத்துக்கொள்வதில் சிரமங்களை ஏற்பட்டுள்ளது. ஆகவே, 24X7 சேவைக்கு ஆட்சேர்புகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டியுள்ளது.

- முன்னெச்சரிக்கை வழங்குதல் மற்றும் அவசர செயட்பாடுகளை செயல்படுத்த தேவையான உபகரணங்கள் போதுமானதாக இல்லாததால், அவற்றை கொள்வனவு செய்வதற்கு போதுமான நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்ளுதல்.

- அவசர நிலைமைகளின்போது சிறிய செலவுகளுக்காக அல்லது செயட்பாடுகளுக்காக அதாவது, மீட்புப்பணி குழுக்களின் போக்குவரத்து செலவுகள், சில உபகரணங்களின் அல்லது இயந்திரங்களின் எரிபொருள் செலவுகள், இயந்திர பாகங்கள் அவசரமாக கொள்வனவு செய்தல் போன்றவைகளுக்காக கைவசம் பணம் தேவைப்பட்டாலும் அவ்வாறு பணம் கைவசம் இல்லாமை.

8. நிதி மற்றும் கணக்குகள் பிரிவு

8.1 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்

2019 ஆண்டுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ரூ.587.5 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் போது திறைச்சேரியினால் வழங்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூ.300 மில்லியன்களை நிறுவனம் தமது தொடர்ச்சியான செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்து ரூ.287.79 மில்லியன் செலவழிக்கப் பட்டதோடு மூலதன செலவுகளுக்காக ரூ.287.5 மில்லியன் ஒதுக்கீடு செய்து ரூ.205.68 மில்லியன் செலவழிக்கப் பட்டது. ஒட்டுமொத்த ஒதுக்கீடுகளில் 2019 டிசம்பர் 31 தினத்தின் நிலவரப்படி கீழ்வருமாறு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செலவு தலைப்பு இல:	கருத்திட்டம்/நிகழ்ச்சி/செயல்பாடு	ஒதுக்கீடு (திருத்த) (ரூ.மில்.)	உண்மையான செலவு (ரூ.மில்.)	முன்னேற்றம் %	
				நிதி	பௌதீக:
130-2-7-2-1503	**மீளவரும் / தொடர்ச்சியான செலவுகள்**	**300**	**287.79**	**96**	**96**
	மூலதன செலவுகள்				
130-2-7-2-2201 (I)	அ.மு.நி. உத்தியோகத்தர்களின் இயலளவு மேம்பாடு	3	3	100	100
130-2-7-2-2201 (II),(iii)	தளபாடங்கள், தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	5.5	3.94	72	72
130-2-7-3-2509	மாவட்டங்களில் அனர்த்த அபாய குறைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்	200	131.23	66	85
130-2-7-5-2509 (i)	அனர்த்த மேலாண்மை சமூக விழிப்புணர்வு மற்றும் தயாரிப்பு - மக்கள் விழிப்புணர்வுப் பிரிவு	20	19.68	98	98
130-2-7-5-2509 (ii)	அனர்த்த மேலாண்மை சமூக விழிப்புணர்வு மற்றும் தயாரிப்பு - முன் ஆயத்த திட்டங்கள் பிரிவு	20	16.72	84	84

130-2-7-7-2509	இலங்கைக்கான பல்வகை ஆபத்து இடர் விவரங்களை தயாரித்தல்	15	9.72	65	95
130-2-7-8-2103	வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளின் பேரழிவு எதிர்செயல் பொறிமுறையின் திறனை வலுப்படுத்துதல் - படகு இயந்திரங்களை கொள்வனவு செய்தல்	14	13.72	98	100
130-2-7-10-2509	அபிவிருத்திச் செயல்பாட்டில் அனர்த்த அபாய குறைப்பை ஒன்றிணைத்தல்	10	7.17	72	95
	மொத்த முதலீட்டு செலவுகள்	**287.50**	**205.18**	**67**	**82**

அட்டவணை 8.1: 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
31 டிசம்பர் 2019 இல் நிதி நிலைப்பாடு அறிக்கை

	குறிப்பு	2019 ரூ. '000	2018 ரூ. '000
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	3	880,379	1,069,617
தொட்டுணர முடியாத சொத்துகளை	4	11,648	8,556
நடைமுறைச் சொத்துக்கள்			
வெள்ளம் மற்றும் நிலச்சரிவு விசேட கடன்		90	209
அனர்த்த பதிலளிப்பு கருவிகள் கையிருப்பு	5	8,979	49,987
பொருட்கள்	6	10,514	11,167
மீளச்செலுத்துதல் மற்றும் முன் பணங்கள்	7	3,775	5,717
வைப்புத்தொகை மற்றும் ஏனைய பெறத்தக்கவை	8	2,010	1,629
பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை	9	33,458	38,471
மொத்த நடமாடும் சொத்துக்கள்		**58,826**	**107,180**
மொத்த சொத்துக்கள்		**950,853**	**1,185,353**
நிதி, ஒதுக்கீடுகள் மற்றும் பொறுப்புகள்			
தேறிய சொத்துக்கள்/பங்குடைமை			
திரட்டப்பட்ட நிதி		**(741,074)**	**(142,062)**
இருப்புக்கள்			
மறுமதிப்பீடு இருப்பு - மோட்டார் வாகனங்கள்		206,436	206,436
திறைசேரியிலிருந்து மூலதன மானியம்		1,078,382	869,847
சொத்துக்களின் மூலதன மானியம் - திறைசேரி		957	2,552
சொத்துக்களின் மூலதன மானியம் – ICET		520,489	655,599
மூலதன மானியம் மீதான முதலீடு	10		
		(219,953)	(533,979)
மொத்த தேறிய சொத்துக்கள்/பங்குடைமை		**845,237**	**1,058,393**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
31 டிசம்பர் 2019 இல் நிதி நிலைப்பாடு அறிக்கை

நடைமுறையல்லா பொறுப்புக்கள்	குறிப்பு	2019 ரூ. '000	2018 ரூ. '000
ஏனைய அமைப்புகள் வழங்கிய மானியம்	11	14,425	16,020
ஓய்வூதிய நன்மைக் கடமைகள்	12	39,310	33,686
நடைமுறை பொறுப்புகள்			
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	13	51,675	77,048
ஏனைய முன்னேற்பாடுகள்	14	206	206
மொத்த நடைமுறை பொறுப்புகள்		**51,881**	**77,254**
மொத்த பொறுப்புகள்		**105,616**	**126,960**
மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புகள்		**950,853**	**1,185,353**

1 முதல் 18 இணைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கியல் தரணிமங்களுக்கு இணங்க இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்குதல் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்..

நிஷாந்த அபேசிங்க
உதவி பணிப்பாளர் - நிதி (C.D)

S ரணசிங்க
பணிப்பாளர் நாயகம்

இடைக்கால முகாமைத்துவக் குழு சார்பாக கையொப்பமிடப்பட்டது

H U R பொன்சேகா
ndc psc
உறுப்பினர் IMC

கமல் குணரத்ன டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ பீஎஸ்சி
மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற)
செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி முன்னேற்ற அறிக்கை

	குறிப்பு	2019 ரூ . '000	2018 ரூ. '000
வருவாய்	15		
		280,550	287,125
ஏனைய வருவாய்	16		
		152,045	227,662
		432,595	**514,787**
நிருவாகச் செலவீனம்			
	17	**(488,379)**	**(534,668)**
ஏனைய செலவீனம்	18	(9,249)	(13,439)
செயல்பாடுகளினாலான அதிகம் / (பற்றாக்குறை)		**(65,033)**	**(33,320)**
நிதி செலவுகள்		**-**	**-**
வரிக்குமுன்னாலான அதிகம் / (பற்றாக்குறை)			
		(65,033)	**(33,320)**
வரி		-	**-**
ஆண்டுக்கான மொத்த அதிகம் / (பற்றாக்குறை)		**(65,033)**	**(33,320)**

1 முதல் 18 இணைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / பங்கு மாற்றங்கள் தொடர்பான அறிக்கை

	திறைச்சேரி மூலதன மானியம்	மூலதன மானிய சொத்துக்கள் - திறைச்சேரி	மூலதன மானிய சொத்துக்கள் ICET	மூலதன ஒதுக்கீடு மீள்மதிப்பீடு M / V	திரட்டப்பட்ட நிதி	தேறிய சொத்துக்களின் மொத்த தொகை
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
1 ஜனவரி 2018ல் உள்ளவாறான மிகுதி	**308,560**	**5,263**	**865,413**	**206,436**	**(108,742)**	**1,276,930**
முந்தைய ஆண்டு மாற்றங்கள்	-	-	-	-	-	-
2018 ஆண்டின் கடன்தொகை	-	(2,711)	(209,814)	-	-	(212,525)
ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியம்	561,287	-	-	-	-	561,287
ஆண்டின் மூலதன மானியம் மீதான முதலீடு	(533,979)	-	-	-	-	(533,979)
2018 ஆம் ஆண்டிற்கான அதிகம் / (பற்றாக்குறை)	-	-	-	-	(33,320)	(33,320)
2018 ஆண்டு மீள்மதிப்பீடு ஒதுக்கீடு எம்/வி	-	-	-	-	-	-
1 டிசம்பர் 2018ல் உள்ளவாறான மிகுதி	**335,868**	**2,552**	**655,599**	**206,436**	**(142,062)**	**1,058,393**
1 ஜனவரி 2019ல் உள்ளவாறான மிகுதி	335,868	2,552	655,599	206,436	(142,062)	1,058,393
முந்தைய ஆண்டு மாற்றங்கள்	-	-	-	-	-	-
2019 ஆண்டின் கடன்தொகை	-	(1,595)	(135,109)	-	-	(136,704)
ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியம்	208,535	-	-	-	-	208,535
ஆண்டின் மூலதன மானியம் மீதான முதலீடு	(219,954)	-	-	-	-	(219,954)
2018 ஆம் ஆண்டிற்கான அதிகம் / (பற்றாக்குறை)	-	-	-	-	(65,033)	(65,033)
31 டிசம்பர் 2019ல் உள்ளவாறான மிகுதி	**324,449**	**957**	**520,490**	**206,436**	**(207,095)**	**845,237**

1 முதல் 18 இணைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பணப்புழக்க அறிக்கை

	2019 ரூ. '000	2018 ரூ. '000
வரிக்குமுன்னாலான அதிகம் / (பற்றாக்குறை)	(65,033)	(33,320)
மாற்றங்கள்		
தேய்மானம் மற்றும் கடனத்தொகை	180,623	252,826
மூலதன மானிய சொத்துக்களின் கடனத்தொகை	(136,704)	(212,525)
பெறப்பட்ட பணம் அல்லாத மானியம்	(1,187)	(96)
பணம் அல்லாத வருவாய் இனங்காணல் - பிற வருமானம்	(2,992)	-
சொத்துக்களை அகற்றுவதில் இலாபம்	(92)	-
ஓய்வூதிய நன்மைகள் கடமைக்கான முன் ஏற்பாடு	6,770	5,556
பணிக்கொடை செலுத்துதல்	(1,146)	(203)
,முந்தய செயல்பாட்டு அதிகம் / குறைப்பாடு	**(19,761)**	**12,237**
செயல்பாட்டு மூலதனத்தில் வாய்ப்புகள்		
ஊழியர் வெள்ளக் கடனில் குறைவு / (அதிகரிப்பு)	119	120
ஏனைய பெறத்தக்கவைகளின் குறைவு / (அதிகரிப்பு)	(314)	(15)
இருப்புகளின் குறைவு / (அதிகரிப்பு)	653	(3,228)
அனர்த்த முகாமைத்துவ கருவி இருப்பு குறைவு/(அதிகரிப்பு)	41,008	(7,417)
முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவு குறைவு / (அதிகரிப்பு)	1,942	(3,067)
ஏனைய செலுத்த வேண்டியவைகள் குறைவு / (அதிகரிப்பு)	(25,373)	42,015
செயல்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய பணப் பாய்ச்சல்	**(1,726)**	**40,645**
முதலீடு நடவடிக்கைகளின் பணப் பாய்ச்சல்		
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	(6,260)	(37,063)
தொட்டுணர முடியாத சொத்துக்கள் கொள்வனவு	-	(8,556)
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் சீரமைவுகள்	12,873	-
சொத்து, ஆலை, உபகரண, வெளியேற்ற விற்பனை பணம்	120	-
முதலீடு நடவடிக்கைகளின் தேறிய பணப் பாய்ச்சல்	**6,733**	**(45,619)**
நிதியியல் நடவடிக்கைகளின் பணப் பாய்ச்சல்		
மூலதன மானியத்தில் நிகர அதிகரிப்பு (பெறுகை)	208,535	561,287
மூலதன மானியத்தில் நிகர அதிகரிப்பு (கொடுப்பனவு))	(219,953)	(533,979)
NGO/INGO நிறுவனங்களின் தேறிய மானியங்கள்	1,398	5,912
நிதியியல் நடவடிக்கைகளின் தேறிய பணப் பாய்ச்சல்	**(10,020)**	**33,220**
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவையின் தேறிய மாற்றம்	(5,013)	28,246
Cash & Cash Equivalents at the Beginning of the year	38,471	10,225
ஆண்டு இறுதி பணம் பணத்திற்கு சமமானவை (குறிப்பு A)	**33,458**	**38,471**
குறிப்பு A – பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	**Rs. '000**	**Rs. '000**
வங்கியில் உள்ள பணம்	33,458	38,471
	33,458	**38,471**

1 முதல் 18 இணைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2019 - வரவு / செலவு ஒப்பீட்டு அறிக்கை

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான ரூ.587.5 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூ.300 மில்லியன்களை நிறுவனம் தமது தொடர்ச்சியான செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்து ரூ.287.79 மில்லியன் செலவழிக்கப் பட்டதோடு மூலதன செலவுகளுக்காக ரூ.287.5 மில்லியன் ஒதுக்கீடு செய்து ரூ.205.68 மில்லியன் செலவழிக்கப் பட்டது. இது 2019 டிசம்பர் 31 தினத்தின் நிலவரப்படி கீழ்வருமாறு ஆகும்,

ஒதுக்கீடு இல:	கருத்திட்டம்/நிகழ்ச்சி/செயல்பாடு	ஒதுக்கீடு (திருத்த) (ரூ.மில்.)	உண்மையான செலவு (ரூ.மில்.)	முன்னேற்றம் %	
				நிதி	பௌதீக:
130-2-7-2-1503	**தொடர்ச்சியான/மீளவரும் செலவுகள்**	**300**	**287.79**	**96**	**96**
	மூலதன செலவு				
130-2-7-2-2201 (I)	அ.மு.நி. ஊழியர்களுக்கான பிரதான கட்டிடம்	3	3	100	100
130-2-7-2-2201 (II), (III)	தளபாடங்கள், தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	5.5	3.94	72	72
130-2-7-3-2509	மாவட்டங்களில் அனர்த்த தாக்கத்தை குறைக்க தணிப்பு திட்டங்களை செயல்படுத்துதல்	200	131.23	66	85
130-2-7-5-2509 (I)	அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக சமூகத்தின் விழிப்புணர்வு மற்றும் தயார்நிலை - விழிப்புணர்வு பிரிவு	20	19.68	98	98
130-2-7-5-2509 (II)	அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக சமூகத்தின் விழிப்புணர்வு மற்றும் தயார்நிலை - தயார்நிலை பிரிவு	20	16.72	84	84
130-2-7-7-2509	இலங்கைக்கான பல்வகை ஆபத்து இடர் விவரங்களை தயாரித்தல்	15	9.72	65	95
130-2-7-8-2103	வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளின் பேரழிவு எதிர்செயல் பொறிமுறையின் திறனை வலுப்படுத்துதல் - படகு இயந்திரங்களை கொள்வவிச் செய்தல்	14	13.72	98	100
130-2-7-10-2509	அபிவிருத்திச் செயல்பாட்டில் அனர்த்த அபாய குறைப்பை ஒன்றிணைத்தல்	10	7.17	72	95
மொத்த முதலீட்டு செலவுகள்		**287.5**	**205.68**	**67**	**82**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்
1. பொது தகவல்

1.1 சட்டம், அமைவு மற்றும் உருவாக்கம்

அனர்த்த முகாமைத்துவ நிலயமானது (நிறுவனம்) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் (சட்டம்) நியதிச்சட்ட நிறுவனமாக தாபிக்கப்பட்டு, இலங்கையில், கொழும்பு 7, வித்யா மாவத்தையில் அமைந்துள்ளது..

இலங்கையின் அனர்த்த இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு தேசிய அனர்த்த முகாமைத்துவ கவுன்சிலுக்கு உதவிகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை (DMC) நிறுவுவதற்கு இச்சட்டத்தினால் தேசிய அனர்த்த முகாமைத்துவ கவுன்சிலுக்கு ஏற்பாடுகள் வாங்கப்பட்டுள்ளது. நிறுவனம் சீராக செயல்படுவதற்கான தீமனங்களை எடுப்பதற்கு அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் இடைக்கால நிர்வாக குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம், தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்பட்டு வருகிறது.

1.2 அடிப்படை செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் இயல்பு

சட்டத்தின் உபப்பிரிவு (1) இன் கீழ் நிறுவப்பட்ட நிறுவனத்தின் செயல்பாடுகள் கவுன்சிலினால் தீர்மானிக்கப்படுவதோடு , அவற்றில் கீழ்வருபவை உள்ளடக்கப் படவேண்டும்:

- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதில் கவுன்சிலுக்கு உதவுதல் மற்றும் தேவைப்படும்போது அவற்றை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளை வழங்குதல்.
- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயல்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்று செயலாற்றுதல் மற்றும் தேசிய அனர்த்த நிலையொன்று பிரகடன படுத்தும்பொது அவசரகால செயல்பாட்டு திட்டத்தை செயல்படுத்துதல் ஒருங்கிணைத்தல்.
- அமைச்சுகள், அரசு திணைக்களங்கள் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள் மூலம் தயாரிக்கப்படும் பல்வேறு அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துடன் ஒத்துப்போகின்றன என்பதை உறுதி செய்தல்.
- சட்டத்தின் 10 வது பிரிவின் கீழ் பல்வேறு அமைச்சகங்கள், அரச திணைக்கங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் தயாரித்த அனர்த்த முகாமைத்துவ திட்டங்களின் அடிப்படையில், அனர்த்த முன்னாயத்தம், தணிப்பு, தடுப்பு, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்துதல் மற்றும் அத்தகைய திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்து அத்தகைய நடவடிக்கைகளுக்கு திறைச்சேரியிடமிருந்து நிதி ஒதுக்கீடுகளை பெற்று அவற்றை தொடர்புடைய பிரதேசங்களுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளை கண்காணித்து மதிப்பீடு செய்தல்.
- பேரழிவு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து பொருத்தமான நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள்

மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் அத்தகைய நிறுவனங்கள்/செயலாளர்களுடன் ஒருங்கிணைந்து பணித் திட்டங்களைத் ஆரம்பித்து செயல்படுத்துதல்.

- அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தரவு தொகுதி ஒன்றினை வடிவமைத்து பராமரித்தல் மற்றும்
- அதன் நடவடிக்கைகள் தொடர்பாக கவுன்சில் / இடைக்கால முகனைத்துவக் குழுவிற்கு காலத்துக்குக்காலம் மற்றும் தேவைப்படும் பொது அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

1.3 செயல்பாட்டின் முதன்மை இடம்

அணைத்த முகாமைத்துவ நிலையத்தின் (DMC) பிரதான அலுவலகம் கொழும்பு 7, வித்யா மாவத்தையில் அமைந்துள்ளது. அத்துடன் இணைந்த 25 மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1.4 முன்னோக்கிச்செல்லும் கொள்கை

இது ஒரு முன்னோக்கிச்செல்லும் நிறுவனம் என்ற கருத்தின் அடிப்படையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையை போலவே வருங்காலத்திலும் ஒரு முன்னோக்கிச் செல்லும் நிறுவனமாக இயங்கும் திறனை நிருவாகம் மதிப்பீடு செய்துள்ளது. மேலும், நிறுவனத்தின் முன்னோக்கிச் செல்லும் திறனை பாதிக்கக்கூடிய, குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக கவுன்சில் அறியாதுள்ளதோடு, நிறுவனத்தை கைக்கவோ அல்லது அதன் செயல்பாடுகளை நிறுத்தவோ எதிர்பார்க்கவில்லை.

1.5 நிதிக் காலம்

நிறுவனத்தின் நிதிக் காலம் 2019 ஜனவரி 1 முதல் 2019 டிசம்பர் 31 வரையிலான பன்னிரண்டு மாத காலத்தைக் குறிக்கின்றது.

1.6 நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கான அடிப்படை

1.6.1 இணக்கப்பாட்டு அறிக்கை

இந்த நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரணியமங்கள் (SLPSAS) மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவன கணக்கியல் தரணியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6.2 அளவீட்டின் அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான மதிப்பு தொடர்பாக பொருத்தமான குறிப்புகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்து நிதி அறிக்கைகள் திரட்டப்பட்ட அடிப்படையில் மற்றும் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6.3 ஒப்பீட்டு தகவல்கள்

தனித்தனி விடயங்களின் ஒவ்வொரு விடய வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. முக்கியமற்றவை என கருதப்படாத வேறுபட்ட விடயங்கள் அல்லது செயல்பாடுகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

1.6.4 பொருள் மற்றும் ஒருங்கிணைப்பு

தனித்தனி விடயங்களின் ஒவ்வொரு விடய வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. முக்கியமற்றவை என கருதப்படாத வேறுபட்ட விடயங்கள் அல்லது செயல்பாடுகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

1.6.5 செயல்பாட்டு மற்றும் முன்வைக்கப்படும் நாணயம்

நிதி அறிக்கைகள் நிறுவனம் செயல்படும் அடிப்படை பொருளாதார சூழலான இலங்கையின், இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது நிறுவனத்தின் செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயமாகும்.. இலங்கை ரூபாயில் வழங்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் அருகிலுள்ள ஆயிரத்திற்கு வட்டமிட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1.7 குறிப்பிடத்தக்க கணக்கியல் கணிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள்

நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் வழங்கல், கணக்கியல் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றின் பயன்பாடு தொடர்பான தீர்மானங்கள் , மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களைச் செய்ய முகாமைத்துவத்திற்கு தேவையான இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையான முடிவுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்படும் தீர்மானங்களிலிருந்து வேறுபடலாம்.

திருத்தம் அந்த காலத்தை மட்டுமே பாதிக்குமேயானால் அல்லது திருத்தம் தற்போதைய மற்றும் எதிர்கால காலங்களை பாதிக்குமேயானால் மதிப்பீடுகள் திருத்தப்படும்போது மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் அல்லது முன்னோக்கிச் செல்லும் கணக்கீட்டு மாற்றங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதில் மதிப்பீடுகளின் குறிப்பிடத்தக்க பகுதிகள், எதிர்பாராத மற்றும் முக்கியமான தீர்ப்புகள் பற்றிய நிதி அறிக்கைகளில் ஒன்றிணைக்கப்பட்ட தொகைகளின் மிக முக்கியமான விளைவுகள் பின்வருமாறு:

1.தெளிவான நன்மைகள் திட்டங்கள்

பாதுகாக்கப்பட்ட எதிர்கால பணப் பாய்ச்சல் முறையைப் பயன்படுத்தி பணியாளரின் வேலைவாய்ப்புக்கு பிந்தைய சலுகைகள் திட்டத்தின் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது. இந்த முறைமையில் சராசரி மாத சம்பளம் மற்றும் நிறைவு செய்துள்ள ஆண்டுகள் எண்ணிக்கை தொடர்பான அனுமானங்கள் கையாளப் படுகின்றது. திட்டத்தின் நீண்டகால தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகும்.

2. கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் மாற்றங்கள்

கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்மானங்களின் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், நிதி அரிக்கைகளுடன் தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்
2.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்
2.1.1 சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்

1. கண்டுணரும் மற்றும் அளவீடும் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கும் மற்றும் சொத்தின் விலையை நம்பத்தகுந்த முறையில் மதிப்பிட முடியும் எனில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் கண்டுணரப்படுகின்றது.

சகல சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் செலவு அடிப்படையில் குறிப்பிடப்பட்டு அதன் பின்னர் குவிக்கப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் இழப்புகளை குறைத்து அளவிடப்படுகிறது. பழுது மற்றும் பராமரிப்பு செலவுகள் விரிவான வருமான அறிக்கையில் சொத்து, ஆலை ஆகியவற்றின் முன்கொண்டு செல்லும் மதிப்பு என கண்டுணர படுவதுடன் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முன்கொண்டு செல்லும் மதிப்பை மீட்டெடுக்க முடியாது என்பதைக் குறிக்கும் போது உபகரணங்கள் அக் குறைபாட்டிற்காக மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1. தேய்மானம்

சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாளில் அத் தொகைகளை கழித்துவிடுவதற்காக சகல சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் விலையில் ஒரு நேர் கோடு முறையைப் பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை பின்வருமாறு:

சொத்து வகை	**பயனுள்ள ஆண்டுகள்**
கட்டிடங்கள்	50
தளபாடங்கள்	10
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரம்	20
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	5 - 20
வாகனங்கள்	5 - 10
கணினிகள்	10
அலுவலக உபகரணங்கள்	10

ஒரு சொத்தின் தேய்மானம் பயன்பாட்டிற்கு கிடைக்கும்போது ஆரம்பமாவதுடன், சொத்து விற்பனைக்கு வகைப்படுத்தப்பட்ட வகைப்படுத்தப்பட்ட மிக அண்மித்த நாளில் முடிவடையும்.

பல்வேறு பயனுள்ள வாழ்க்கைநாட்களை கொண்ட சொத்து, ஆலைகள் மற்றும் உபகரணங்களின் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படும்.

2. மீள்கண்டுணருதல்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருள் அகற்றப்பட்ட பின் கண்டுணருதல் அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்க

இயலாத நிலை. சொத்தை மீளகண்டுணருதலில் ஏற்படும் எந்த ஆதாயமும் இழப்பும் தேறிய அகற்றல் வருமானம் மற்றும் சுமந்து செல்லும் தொகை ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு மூலம் கணக்கிடப்பட்டு சொத்து மீளகண்டுணப்பட்ட ஆண்டின் விரிவான வருமான அறிக்கையில் சேர்க்கப்படும்.

2.1.2 தொட்டுணர முடியாத சொத்துக்கள்

சொத்துக்களுக்குக் காரணமான எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கும் மற்றும் சொத்துக்களின் இழப்பை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனில், தொட்டுணர முடியாத சொத்துக்கள் கணக்கிடப் படுகின்றன. நிறுவனத்தால் பெறப்பட்ட தொட்டுணர முடியாத சொத்துக்கள், செலவிலிருந்து குவிக்கப்பட்ட கடன்தொகை மற்றும் திரட்டப்பட்ட குறைபாடு இழப்பு என்பவற்றை கழித்து அளவிடப்படுகின்றன.

1. **கணினி மென்பொருள்**

கைப்பற்றப்பட்ட கணினி மென்பொருள் உரிமங்கள் கையகப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்படும் செலவுகளின் அடிப்படையில் மூலதனமய படுத்தப் படுகின்றன. இந்த செலவுகள் மதிப்பிடப்பட்ட பத்து (10) ஆண்டுகால பயனுள்ள வாழ்நாளில் தேய்மானம் செய்யப் படுகின்றது. கணினி மென்பொருள் பராமரிப்பு தொடர்பான செலவுகள் செலவுகளாகவே கணக்கிடப்படுகின்றன. நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும் அடையாளம் காணக்கூடிய மற்றும் தனித்துவமான மென்பொருள் தயாரிப்புகளின் செயல்பாட்டுடன் நேரடியாக தொடர்புடைய செலவுகள் பின்வரும் விடயங்களை பூர்த்தி செய்யும்போது தொட்டுணர முடியாத சொத்துகளாக இனங்காணப் படுகின்றன:

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1. மென்பொருள் தயாரிப்பை பூர்த்திக் செய்வது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியவளமிக்கது, பயன்பாட்டிற்கு தயாகவிருக்கும்;
2. முகாமைத்துவம் மென்பொருள் தயாரிப்பை பூர்த்திக் செத்து அதைப் பயன்படுத்த எதிர்பார்க்கின்றது;
3. மென்பொருள் தயாரிப்பு பயன்படுத்தும் நிலையில் உள்ளது;
4. மென்பொருள் தயாரிப்பு எதிர்கால பொருளாதார நன்மைகளை எவ்வாறு உருவாக்கும் என்பதை இது நிரூபிக்க முடியுமாக இருக்க வேண்டும்;
5. தயாரிப்பை பூர்த்திக் செய்யவும் மற்றும் மென்பொருள் தயாரிப்பைப் பயன்படுத்தவும் போதுமான தொழில்நுட்ப, நிதி மற்றும் ஏனைய வளங்கள் உள்ளமை; மற்றும்
6. மென்பொருள் அதன் தயாரிப்பின் போது உள்ளீர்க்கும் செலவுகளை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமாக இருக்க வேண்டும்.

மென்பொருள் உற்பத்தியின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படும் நேரடியாகக் கூறப்படும் செலவுகள் மென்பொருள் மேம்பாட்டு ஊழியர் செலவுகள் மற்றும் தொடர்புடைய மேல்நிலைகளின் பொருத்தமான பகுதி ஆகியவை உள்ளடங்கும்.

தொட்டுணர முடியாத சொத்துகளாக இனங்காணும் செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கையில் பத்து (10) ஆண்டுகளுக்குள் தேய்மானப்படுத்தப்படும். மென்பொருளின் மேம்பாடு தொடர்பான செலவுகள் மென்பொருள் பயன்பாட்டிற்குத் தயாராகும் வரை மூலதனப் நடப்பு வேலைகளின் கீழ் கொண்டுசெல்லப்படும்.

2.1.3 கையிருப்புகள்

வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கு உரிய ஒதுக்கீட்டுகளைச் செய்தபின், விலை மற்றும் தேறிய உணரக்கூடிய மதிப்புகளில் மிகக் குறைந்த மதிப்பின் கீழ் கையிருப்புகள் குறிக்கப்படுகின்றன. தேறிய உணரக்கூடிய மதிப்பு என்பது வணிகத்தின் சாதாரண போக்கில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து, நிறைவு மற்றும் விற்பனை செலவினங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவை கழிக்கப்பட்ட மதிப்பாகும். பொருட்களின் மதிப்பு கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இச் செலவில் பொருட்களை கையகப்படுத்துவதற்கும் அவற்றை இருக்கும் இடம் மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஏற்படும் செலவுகள் உள்ளடங்கும்.

2.1.4 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட வகையிடல் அல்லாத நிதி சொத்துக்கள் ஆகும்.
அடிப்படையாக, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் அவை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இனங்காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான பணம் செலுத்தாத அபாயத்தை ஈடுசெய்வதற்காக நிலுவையில் உள்ள தொகையிலிருந்து ஒதுகீட்டோன்றினை கழித்தே குறிப்பிடப்படுகின்றன.

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் ஊழியர்களின் கடன்கள் மற்றும் முன்கூட்டிய வைப்புத்தொகைகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் உள்ளடங்குகின்றன.

2.1.5 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை

பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக நிறுவனம் கையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளை கருத்தில் கொள்கின்றது. கையிருப்பு பணம் மற்றும் வங்கியில் உள்ள பணம் ஆகியவை பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை என்பதில் உள்ளடக்கின்றது.

2.1.6 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

இயல்பான செயல்பாடு சுழற்சியில் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கப்படும் போது ஒரு பொறுப்பு நடைமுறை என வகைப்படுத்தப்படுவதுடன் சேவையின் எதிர்கால நோக்கத்திற்காக அடிப்படையாக நடைபெறும் இது, அறிக்கையிடும் காலத்திற்குப் பின் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட உள்ளது மற்றும் அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்பைத் தீர்ப்பதற்கு ஒத்திவைக்க எந்த நிபந்தனையற்ற உரிமையும் இல்லை. நிறுவனம் ஏனைய சகல கடன்களையும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்துகிறது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

2.1.7 ஏற்பாடுகள்

கடந்த நிகழ்வொன்றின் விளைவாக நிறுவனத்திற்கு சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடமை ஏற்படும்போது மற்றும் கடமையைத் தீர்ப்பதற்கு சொத்துக்களின் வெளியேற்றம் தேவைப்படலாம் மற்றும் கடமையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனும் நிலையின் பொது நிதி நிலை அறிக்கையில் ஒரு ஏற்பாடு இனங்காணப்படுகின்றது.

2.1.8 ஊழியர் நன்மைகள்

1. பணியாளர்களுக்கு உரித்தான நன்மைத் திட்டம் - பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் DMC உடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளுக்காக, ஒவ்வொரு ஆண்டுக்காகவும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரை மாத சம்பளத்தில் கணக்கிடப்பட்டு

கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டு விடயம் வெவ்வேறு பொறுப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்காக வெளிப்புறமாக நிதியளிக்கப்படவோ அல்லது உண்மையில் மதிப்பிடப்படவோ இல்லை.

2. குறிப்பிட்ட பங்களிப்பு திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர்களுக்கு, உரித்தான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் ஆவர். விரிவான வருமான அறிக்கையில் இவை ஒரு மேற்கொள்ளப்பட்ட செலவாக இனங்காட்டப்பட்டுள்ளது. நிறுவனம் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 12% மற்றும் 3% முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு பங்களிக்கிறது.

2.1.9 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களின் விளக்கம்

இலங்கை ரூபாவைத் தவிர மற்ற நாணயங்களின் பரிமாற்றங்கள், பரிமாற்ற திகதியில் உண்மையான விகிதங்களை தோராயமாக மதிப்பிட்டு இலங்கை ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்படுகின்றன.

2.1.10 நிதிகள், மானியங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் பெறுதல் மற்றும் பயன்பாட்டுக்கான கணக்கு

நிறுவனம் குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களுக்காக பல்வேறு மானியங்களைப் பெற்றுக்கொள்கிறது, மேலும் நிதி பயன்படுத்தப்பட்ட மற்றும் பெறப்பட்ட ஆண்டின் வருமானம் மற்றும் செலவு என குறிப்பிடப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019

குறிப்பு 03 – சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்

	01.01.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	ஆண்டின் சேர்த்தல் / இடமாற்றங்கள் ரூ. '000	ஆண்டின் இடமாற்றங்கள் / அகற்றல் ரூ. '000	31.12.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	01.01.2019 திகதியில் தாழ்த்தப்பட்ட மதிப்பு ரூ. '000
நிலையான சொத்துக்கள்					
சுனாமி & முன்எச்சரிக்கை கோபுரங்கள்	427,322	-	-	427,322	250,910
அலுவலக உபகரணங்கள்	71,334	5,035	14,244	62,125	44,538
தளபாடங்கள் & பொருத்துதல்கள்	15,110	855	104	15,861	8,460
கணினிகள் மற்றும் பாகங்கள்	111,037	1,556	12,059	100,535	38,960
வாகனங்கள்	360,760	-	5,008	355,752	311,692
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	1,562,736	-	-	1,562,736	410,516
மென்பொருள்	6,657	-	6,657	-	4,541
	2,548,300	**7,446**	**31,542**	**2,524,331**	**1,069,617**

	ஒட்டுமொத்த 01.01.2019 ரூ. '000	ஆண்டின் ஏற்பாடுகள் / சரிசெய்தல் ரூ. '000	ஆண்டின் தேய்மான சரிசெய்தல் ரூ. '000	31.12.2019 திகதியில் திரட்டப்பட்ட தேய்மானம் ரூ. '000	01.01.2019 திகதியில் தாழ்த்தப்பட்ட மதிப்பு ரூ. '000
தேய்மானம்					
சுனாமி & முன்எச்சரிக்கை கோபுரங்கள்	176,412	21,366	-	197,778	229,544
அலுவலக உபகரணங்கள்	26,796	3,853	1,275	29,373	32,752
தளபாடங்கள் & பொருத்துதல்கள்	6,651	1,205	104	7,751	8,109
கணினிகள் மற்றும் பாகங்கள்	72,077	9,342	12,058	69,361	31,174
வாகனங்கள்	49,068	35,569	5,008	79,630	276,122
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	1,152,221	107,839	-	1,260,060	302,677
மென்பொருள்	2,116	-	2,116	-	-
	1,483,225	**160,727**	**20,561**	**1,643,952**	**880,379**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019

குறிப்பு 04 – தொட்டுணர முடியாத சொத்துக்கள்

	01.01.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	ஆண்டின் சேர்த்தல் / இடமாற்றங்கள் ரூ. '000	ஆண்டின் இடமாற்றங்கள் / அகற்றல் ரூ. '000	31.12.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	01.01.2019 திகதியில் தற்போதைய மதிப்பு ரூ. '000
செலவு					
நில அளவையாளர் GIS தரவுகள்	8,556	-	-	8,556	8,556
மென்பொருள்	-	6,657	-	6,657	-
	8,556	**6,657**	**-**	**15,213**	**8,556**

	01.01.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	ஆண்டின் சேர்த்தல் / இடமாற்றங்கள் ரூ. '000	ஆண்டின் இடமாற்றங்கள் / அகற்றல் ரூ. '000	31.12.2019 திகதியில் மொத்த செலவு ரூ. '000	01.01.2019 திகதியில் தற்போதைய மதிப்பு ரூ. '000
கடன்தொகை					
நில அளவையாளர் GIS தரவுகள்	-	856	-	856	7,700
மென்பொருள்	-	593	2,116	2,709	3,948
	-	**1,449**	**2,116**	**3,565**	**11,648**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 05 – அனர்த்த பதிசெயல் கருவிகள் கையிருப்பு

பொருள்	எண்	2019 மொத்த மதிப்பு ரூ. '000	எண்	2018 மொத்த மதிப்பு ரூ. '000
செயின் சோவ்	-	-	67	3,704
உயிர் காப்பு ஜாக்கெட்டுகள்	823	2,881	402	1,407
படகு இயந்திரங்கள்	7	2,723	45	18,225
படகுகள் (Hull)	1	195	1	195
DMC அடையாள ஜாக்கெட்டுகள்	458	227	4023	506
சைரன்கள்	2	49	2	49
மழை அளவீடுகள்	190	523	452	1,213
மனா கெதி	11	11	1001	966
தேடல் மற்றும் மீட்பு கயிறுகள்	1	59	88	5,522
தேடல் விளக்கு	57	106	57	106
படகு எடுத்துச் செல்லும் டிரெய்லர் Modl Nu – SH 718 BT	-	-	-	-
கேடமரன்ஸ்	1	124	43	5,332
ஒலிபெருக்கி UNHABITAT	10	759	-	-
Vote -7 இலிருந்து கம் பூட் வாங்குதல்	13	17	13	17
மின் ஆக்கி	1	38	1	38

DMC அடையாள ஜாக்கெட்டுகள் - UNDP	825	408	1350	668
மீட்பு பை	80	132	580	957
நீர் தொட்டி 1000 L	46	373	46	373
ரப்பர் கையுறைகள்	236	41	236	41
முகமூடிகள்	705	105	780	116
அச்சுகள்	5	4	100	89
மழை கோட்டுகள்	34	52	174	268
நீர் பம்ப் BGVSP 2 SP	2	62	5	155
டார்பாலின் - NDRSC	30	90	167	501
அவசர மீட்பு படகு	-	-	12	9,540
மொத்த மதிப்பு		8,979		49,987

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 06 – கையிருப்புகள்

	2019	2018
	ரூ. '000	**ரூ. '000**
எழுதுபொருள் பொருட்கள்	3,830	2,647
கணினி டோனர் & கார்ட்ரிட்ஜ்	3,247	3,300
துண்டு பிரசுரங்கள்	224	1,384
சிறு புத்தகங்கள்	1,440	2,157
வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு	1,711	1,415
ஏனைய	62	263
மொத்தம்	**10,514**	**11,166**

குறிப்பு 07 - முன் கட்டணம் மற்றும் முட்பணங்கள்

	ரூ. '000	**ரூ. '000**
முட்பணங்கள் – விழாக்கள்	63	185
முட்பணங்கள் – UNDP	595	535
முட்பணங்கள் – முத்திரை	20	-
முன் எச்சரிக்கை கோபுரங்களுக்கான முன் கட்டணம்	2,542	4,392
முட்பணங்கள் – பணம் - தலைமை அலுவலகம்	-	4
முட்பணங்கள் – சேவை மற்றும் பராமரிப்பு தலைமை அலுவலகம்	-	12
முட்பணங்கள் – பணம் - மாவட்டங்கள்	-	344
முட்பணங்கள் – மாவட்டங்களில் முன் ஆயத்தமும் திட்டமிடலும்	491	185

முட்பணங்கள் – மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு	-	20
முட்பணங்கள் – எரிபொருள் - மாவட்டங்கள்	64	40
	3,775	**5,717**

குறிப்பு 08 – வைப்புகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

	ரூ. '000	**ரூ. '000**
டாங்கிள்களுக்கான வைப்பு	3	3
வைப்புகள் – இலங்கை மின்சார சபை	1,109	1,109
வைப்புகள் – தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை	52	52
ஏனைய பெறத்தக்கவைகள்	847	466
	2,011	**1,630**

குறிப்பு 09 – பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	**ரூ. '000**	**ரூ. '000**
இலங்கை வங்கி – 2744646	33,458	38,471
குட்டி பணம்	-	-
	33,458	**38,471**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 10 – மூலதன மானியத்தில் முதலீடுகள்

	2019	**2018**
	ரூ. '000	**ரூ. '000**
மூலதன செலவு		
ஊழியர்களின் பிரதானக் கட்டிடம்	3,000	3,000
குருநாகளை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கழுத்தரை, மாத்தளை, முல்லைத்தீவு & பதுளை நடுத்தர அளவிலான அனர்த்த தணிப்பு திட்டங்கள்	105,498	394,258
வெள்ள அவசரத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு	54,693	85,590
முன் ஆயத்த திட்டங்களைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல்	16,700	24,968
பானத்துறை, கழுத்தரை பி.சே. பிரிவில் வெள்ள தணிப்பு	-	-
தம்புளை பி.சே. பிரிவில் வெள்ள தணிப்பு	-	-
யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள தணிப்பு	-	-
அனர்த்த முதாயத்தம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கட்டியெழுப்புதல்	16,202	19,496

முன் எச்சரிக்கை தொகுதியின் கொள்ளளவு மேம்பாடு – UNHABITAT	-	-
முன் எச்சரிக்கை தொகுதியின் கொள்ளளவு மேம்பாடு – UNHABITAT கட்டம் II	-	-
வெள்ளத் தனிப்புத் திட்டங்கள்	-	-
இலங்கைக்கான பல்வகை ஆபத்து இடர் விவரகுறிப்பினை உருவாக்குதல்	8,450	3,603
அனர்த்த முகாமைத்துவ நிலையம் – கையகப்படுத்துதல் மற்றும் ஏனைய	-	-
வெள்ளத்திற்கான பதிலளிப்பு கொள்ளளவை பலப்படுத்துதல்	10,996	-
டிராக்டர் பவுசர்கள் மற்றும் படகுகள் கொள்வனவு	-	31
அனர்த்த அபாய குறைப்பினை அபிவிருத்தியுடன் ஒன்றிணைத்தல்	4,414	3,032
மூலதன மணியத்தின் தேறிய முதலீடு	**219,953**	**533,979**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 11– ஏனைய நிறுவனங்களின் மானியங்கள்

	2019	**2018**
	ரூ. '000	**ரூ. '000**
Oxfam	357	**688**
UNDP (DMC Identification Jackets)	628	645
World Vision Lanka	28	28
ADPC	265	265
CSE	234	234
IT Related Items Purchasing A/ C	38	38
World Health Organization – WHO	514	355
Ministry of DM for Deyata Kirula	121	121
UNGABITAT PHASE II	86	86
ADPC Safety Day	33	33
SAARC for Workshop	1,756	1,756
UNDP for IDMP	1,104	1,104
UNDP for RSSDP	160	160

UNDP for SFDRR	-	981
UNDP for DOSEG	668	668
UNDP for Mainstreaming DRR into LGS	1,000	1,000
UNDP for NDMP	5	5
Uma Oya DMC Project office	-	1,001
1% Admin cost – Project office	768	3,386
Grant from NDRSC	5,093	1,908
Ministry of DM Funds for CRIWMP	715	647
UNDP for School Tsunami Program	852	913
	14,425	**16,020**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 12 – ஓய்வூதிய நன்மை பயன் பொறுப்பு

	2019	2018
	ரூ. '000	ரூ. '000
1 ஜனவரி 2019 திகதியில் இருப்பு	**33,686**	**28,429**
ஆண்டுக்கான ஏற்பாடு	6,770	5,556
	40,456	33,985
கொடுப்பனவுகள்	(1,146)	(299)
31 டிசம்பர் 2019 திகதியில் இருப்பு	**39,310**	**33,687**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் DMC உடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளுக்காக, ஒவ்வொரு ஆண்டுக்காகவும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரை மாத சம்பளத்தில் கணக்கிடப்பட்டு கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டு விடயம் வெவ்வேறு பொறுப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்காக வெளிப்புறமாக நிதியளிக்கப்படவோ அல்லது உண்மையில் மதிப்பிடப்படவோ இல்லை.

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய LKAS-19 - பணியாளர் நன்மைகள் தரணியமங்களின் அத்தியாயம் 57- பின் இணைப்பு D இன் மூலம் நிறுவனம் ஓய்வூதிய நன்மை கடமைக்கு ஒரு ஏற்பாடு செய்ய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.அதற்கமைய நிறுவனங்களில்

100 க்கும் மேற்பட்ட ஊழியர்களின் இருப்பின் பின் இணைப்பு E இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம். பொருட்களை விற்பனை செய்வதில் அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பொது நிறுவனங்களுக்காக பின் இணைப்பு D (2) வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 13 – ஏனைய செலுத்தவேண்டியவை

	2019 ரூ. '000	2018 ரூ. '000
செலுத்தவேண்டிய EPF	2,478	2,478
PAYE & SRL	2	7
செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஊதியங்கள்	30	29
செலுத்தவேண்டிய மேலதிநேர கொடுப்பனவுகள்	1,878	1,185
செலுத்தவேண்டிய பயணம் மற்றும் உயிர்வாழ்வு	926	598
செலுத்தவேண்டிய எரிபொருள் செலவுகள்	271	176
செலுத்தவேண்டிய வாடகை மற்றும் உள்ளூர் வரி கட்டணங்கள்	69	50
செலுத்தவேண்டிய தபால் மற்றும் தொலைத்தொடர்பு கட்டணங்கள்	1,217	1,336
செலுத்தவேண்டிய வாகன பராமரிப்பு கட்டணங்கள்	560	660
செலுத்தவேண்டிய மின்சாரம் & நீர் கட்டணங்கள்	938	840
செலுத்தவேண்டிய பிற சேவை கட்டணங்கள்	14	18
செலுத்தவேண்டிய ஊழியர் நலனோம்பு செலவுகள்	4	-
செலுத்தவேண்டிய தணிக்கும் திட்ட செலவுகள்	42,629	68,367
செலுத்தவேண்டிய பாதுகாப்பு சேவை கட்டணங்கள்	113	127
செலுத்தவேண்டிய தூய்மை சேவை கட்டணங்கள்	7	112
செலுத்தவேண்டிய பணிக்கொடை	-	50
செலுத்தவேண்டிய வருடாந்த கணக்காய்வு கட்டணம்	539	-
ஆவணப்படம் - குறும்படம் செலவுகள்	-	1,017
	51,675	**77,048**

குறிப்பு 14 – பிற ஏற்பாடுகள்

	ரூ. '000	ரூ. '000
பொருட்கள் இழப்புக்கான ஏற்பாடு	206	206
	206	**206**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 15 – வருமானம்

	2019	2018
	ரூ. '000	ரூ. '000
தொடர்ச்சியான செலவினங்களுக்கான மானியம்	280,550	287,125
	280,550	**280,550**

பொது திறைச்சேரியிலிருந்து பெறப்பட்ட தொடர்ச்சியான செலவினங்களுக்கான மானியம் LKAS 20- அரசு மானியங்களுக்கான கணக்கு மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல் என்ற வகையில் இனங்காணப்பட்டுள்ளது. அத் தரணியமங்களின்படி, மானியங்கள் பெறப்படும் என்று நியாயமான உத்தரவாதம் கிடைக்கும் வரை அரசாங்க மானியங்கள் இனங்காணப்படக் கூடாது. ஆகவே, DMC யினால் 2019 டிசம்பர் 31 ஆம் தேதி வரையிலான தொடர்ச்சியான மானியங்கள் பெறுவதை மாத்திரமே அதன் வருமானமாக காட்டியுள்ளது.ஆனாலும் வருமானத்தின் மீதான செலவுகள் நிகழ்ந்த அடிப்படையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பு 16 – ஏனைய வருமானம்

		ரூ. '000	ரூ. '000
Oxfam உதவிகள்		691	-
UNDP உதவிகள்		260	322
மீள வழங்கப்படாத கேள்வி-விலை வைப்புக்கள்		10	136
இதர வருமானம்		1,337	5
மூலதன மானியத்தின் மீதான கடன் பெறுதல்	குறிப்பு: 16.01	136,705	212,525
WHO உதவிகள்		2,410	1,078
NEOP க்கான UNDP உதவிகள்		-	5
காப்புறுதி தொகை கோரிக்கை		-	51
SFDRR க்கான UNDP உதவிகள்		981	-
DMC திட்ட அலுவகத்திற்க்கான Uma oya உதவிகள்		-	2,766
தரவு திட்டத்திற்கான UNDP உதவிகள்		-	257
NDRSC உதவிகள்		4,112	7,667
CRIWMP க்கான அ.மு. அம்மைச்சின் உதவிகள்		842	272
பாடசாலை சுனாமி திட்டத்திற்க்கான UNDP உதவிகள்		61	2,163

மா.செ. ஹம்பந்தோட நன்கொடை	-	415
திட்ட நன்கொடைகளைத் திரட்டுவதில் இருந்து வருவாய்	1,187	-
மிடி திட்டங்களின் 1% நிர்வாக செலவைப் பயன்படுத்துவதற்கான வருவாய்	3,449	-
	152,045	**227,662**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 16 – ஏனைய வருமானம்

உப குறிப்பு – 16:01 சொத்துக்களின் மூலதன மானியத்தின் அளவீடு

	01.01.2019 திகதியின்படி மொத்த செலவு	**ஆண்டின் சேர்த்தல்/ முதலீடுகள்**	**முந்தைய ஆண்டு சரிசெய்தல்**	**31.12.2019 திகதியின்படி மொத்த செலவு**
	ரூ. '000	**ரூ. '000**	**ரூ. '000**	**ரூ. '000**
வழங்கப்பட்ட சொத்துக்கள்				
சுனாமி & முன் எச்சரிக்கை கோபுரங்கள்	426,287	-	-	426,287
அலுவலக உபகரணங்கள்	5,916	-	-	5,916
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்	559	-	-	559
மோட்டார் வாகனங்கள்	259,413	-	-	259,413
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	1,547,757	-	-	1,547,757
கணினிகள் மற்றும் பாகங்கள்	66,763	-	-	66,763
மோட்டார் வாகனங்கள் - பிற கருவூலம்	31,675	-	-	31,675
	2,338,370	**-**	**-**	**2,338,370**

	01.01.2019 திகதியில் ஒட்டுமொத்த இருப்பு	**ஆண்டிற்கான கடன் தொகை**	**முந்தைய ஆண்டு சரிசெய்தல்**	**31.12.2019 திகதியில் ஒட்டுமொத்த இருப்பு**
	ரூ. '000	**ரூ. '000**	**ரூ. '000**	**ரூ. '000**
கடன்தொகை				
மோட்டார் வாகனங்கள் ICET	259,413	-	-	259,413
சுனாமி & முன் எச்சரிக்கை கோபுரங்கள் ICET	154,528	21,314	-	175,842
கணினிகள் மற்றும் பாகங்கள் ICET	43,610	6,676	-	50,286

அலுவலக உபகரணங்கள் ICET	5,549	183	-	5,732
தொலைத்தொடர்பு உபகரணங்கள் ICET	1,149,479	106,881	-	1,256,359
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் ICET	447	56	-	503
மோட்டார் வாகனங்கள் - பிற கருவூலம்	29,123	1,595	-	30,718
	1,642,149	**136,705**	-	**1,778,853**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 17 – நிர்வாக செலவுகள்

	2019 ரூ. '000	**2018** ரூ. '000
தேய்மானம்		
சுனாமி & முன் எச்சரிக்கை கோபுரங்கள்	21,366	21,366
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	107,839	182,445
காணி	-	-
கணினிகள்	9,342	7,944
அலுவலக உபகரணங்கள்	3,853	3,384
மென்பொருள்	-	1,017
கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	-
வாகனங்கள்	35,569	35,569
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்	1,205	1,101
நில அளவையலர் GIS தரவுகள்	856	-
மென்பொருள் கடன்	593	-
பராமரிப்பு செலவுகள்		
ஆலை இயந்திரங்கள் மற்றும் பிற உபகரணங்கள் பராமரிப்பு	21,287	14,526
கட்டிட பராமரிப்பு	-	481
வாகன பராமரிப்பு	16,093	15,814
தனிப்பட்ட ஊதியங்கள்		
DMCயின் EPF பங்களிப்பு (12%)	18,185	17,302
ஏனைய கொடுப்பனவுகள்	36,692	45,940
DMCயின் ETF பங்களிப்பு (3%)	4,546	4,325

சம்பளம் மற்றும் ஊதிய செலவுகள் கணக்கு	116,580	99,737
டிரைவர்களுக்கு சீரான கொடுப்பனவுகள்	152	152
மேலதிக நேர கொடுப்பனவுகள் செலவு	17,120	12,995
தொடர்ச்சியான செலவுகள்		
EPF மற்றும் ETF.நிதி செலுத்துதலுக்கான ஏற்பாடுகள்	-	-
வரிவிதிப்பு	-	-
ஓய்வூதிய பணிக்கடை செலுத்துதலுக்கான ஏற்பாடுகள்	6,770	5,556
சேவைகள்		
தூய்மைப்படுத்தும் சேவை	1,300	1,208
விசாரணை கட்டணங்கள்	-	221
தெயட்ட கிருல DMC	-	-
வாடகை மற்றும் உள்ளூர் வரி	858	2,041
IMC கொடுப்பனவுகள்	267	376
நேர்முக தேர்வுகள் தொடர்புடைய செலவுகள்	124	114
தபால் மற்றும் தொலைத்தொடர்பு	18,032	18,346
விளம்பரம்	126	931
மொழிபெயர்ப்பு கட்டணம்	346	164
டெங்கு நிகழ்ச்சித் திட்ட செலவுகள்	-	-
AMC கொடுப்பனவுகள்	175	131

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2019
குறிப்பு 17 – நிர்வாக செலவுகள்

	2019	**2018**
	ரூ. '000	**ரூ. '000**
	410	626
ஏனைய செலவுகள்		
மின்சாரம் & நீர்	12,018	11,924
பாதுகாப்பு சேவை	1,283	1,556
சட்ட கட்டணம்	16	85
போக்குவரத்து கட்டணங்கள்	92	18

வருடாந்த கணக்காய்வு கட்டணம்	539	-
வழங்குதல்கள்		
அச்சிடுதல், எழுதுபொருள்கள் மற்றும் அலுவலக தேவைகள்	11,083	7,055
செய்தித்தாள்கள் மற்றும் ஏனைய	170	195
எரிபொருள் செலவுகள்	10,262	9,302
உபசரிப்பு செலவுகள்	834	1,266
பயண மற்றும் வாழ்வாதார செலவுகள்		
பயண மற்றும் வாழ்வாதார செலவுகள் - உள்நாட்டு	9,063	5,766
பயண மற்றும் வாழ்வாதார செலவுகள் - வெளிநாட்டு	3,333	3,687
	488,379	**534,668**

குறிப்பு 18 – ஏனைய செலவுகள்

	2019 **ரூ. '000**	**2018** **ரூ. '000**
Oxfam உதவியிலிருந்து செலவுகள்	691	-
UNDO உதவியிலிருந்து செலவுகள்	260	322
WHO இலிருந்து செலவுகள்	2,410	1,078
NEOP இலிருந்து செலவுகள்	-	5
SFDRR இலிருந்து செலவுகள்	981	-
DMC கருத்திட்ட அலுவலகத்திற்கு UMAOYA விலிருந்து செலவுகள்	-	1,517
NDRSC விலிருந்து செலவுகள்	4,114	7,667
அ.மு. அமைச்சின் நிதியிடல்மூலமான CRIWMP செலவுகள்	732	272
UNDP நிதியிடல் மூலம் பாடசாலை சுனாமி நிகழ்ச்சித்திட்ட செலவுகள்	61	2,163
மா.செ. ஹம்பாந்தோட்டை நன்கொடை செலவுகள்	-	415
	9,249	**13,439**

பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிலைக்கணிப்பீட்டு கருத்து

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2019 டிசம்பர் 31 திகதியில் நிதி நிலை அறிக்கை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை, உரிமங்களின் மாற்றங்கள் தொடர்பான அறிக்கை, மற்றும் சாராம்சப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கிய 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் இணைந்து வாசிக்கப்படவேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் வெளியிட வேண்டுமென என்னைக் கருதப்படும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைவாக ஏனாதி அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் நிலைக்கணிப்பீட்டு கருத்துகளுக்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயயங்களினால் ஏற்படும் அழுத்தங்களை தவிர்த்து, அனர்த்த முகாமைத்துவ நிலத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலை மற்றும் அத் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் பணப்புழக்கம் என்பவை இலங்கை அரச துறை கணக்கீட்டு தணியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கப் படுகின்றது என்பது எனது கருத்தாகும்.

1.2 நிலைக்கணிப்பீட்டு கருத்துகளுக்கான அடிப்படை

(அ) வருடாந்த மொத்த கையிருப்பு கணக்கெடுப்பின் பொது ரூ.1,652,924 பெறுமதியுள்ள காலாவதியான அளிக்கப்படவேண்டிய பொருட்கள் மற்றும் இனங்காணப்பட்ட பொருட்கள் குறைவடைதல் மற்றும் காணாமல் போன பொருட்களுக்காக ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

(ஆ) நிறுவனத்திற்கு எதிராக மோட்டார் வாகன வழங்குநர் ஒருவரினால் ரூ.15 மில்லியன் அரவிடுவதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் 07 ஏனைய தரப்பினர்களும் நிறுவனத்திற்கு எதிராக இழப்பீடு வழக்குகள் தாக்கள்ச் ஐந்தை இந்த பொறுப்புகளுக்காக

இலங்கை அரச துறை கணக்கீட்டு தரணியமங்கள் 08ற்கு அமைவாக ஒதுக்கீடு செய்யவோ நிதி அறிக்கைகளில் வெளியிடப்படவோ இல்லை.

(இ) அரச துறை கணக்கீட்டு தரணியமங்கள் 19 க்கு அமைவாக ஊழியர் புரள்வு, அங்கவீனமடைதல் மற்றும் முன்கூட்டியே ஒய்வு பெறுதல், தள்ளுபடி விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரித்தல் மற்றும் நலன்கள் போன்ற உண்மையான கணிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட உண்மையான மதிப்பீட்டு முறைமைக்கு (Actuarial Valuation Method) அமைவாக ஊழியர் நலன்களை கணிப்பீடு செய்து ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் நிறுவனம் சாதாரண சட்டடரீதியான ஏற்பாடுகளை அடிப்படையகக் கொண்டு ரூ.39 மில்லியன் ஒதுக்கீடுகளை மாத்திரமே நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) அரச துறை கணக்கீட்டு தரணியமங்கள் 15 க்கு அமைவாக நிதி அறிக்கைகளில் வழங்க வேண்டிய வரவுச்செலவு மற்றும் உண்மை பெறுமதிகளை ஒப்பீட்டு செய்யும் அறிக்கை மற்றும் அதற்குரிய நிதி அறிக்கைகளில் குறிப்புகளின் கீழ் வழங்கவேண்டிய வெளியிடுதலை நிறுவனத்தின் நிதி அறிக்கைகளில் வழங்கப்படவில்லை.

1.3 நிதி அறிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிறுவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதி அறிக்கைகளை இலங்கை அரச துறை கணக்கீட்டு தரணியமங்களுக்கு அமைவாக தயாரித்தல், நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவைக்குரிய பொய்யான குறிப்புகளற்றதாக நிதி அறிக்கைகளை தயாரிக்கக் கூடியதாக தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி அறிக்கைகளை தயாரிக்கும்போது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை தொடர்ந்து நடத்திச் செல்லும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை முடிவுறுத்த கருத்தில் கொள்வதாயின் அல்லது வேறொரு மாற்றுவழி இல்லாதபோது செயட்பாடுகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வதாயின் தவிர தொடர்ந்துச் செல்லும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கு உரிய விடயங்களை வெளியிடுவது முகமைத்தின் பொறுப்பாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயல்பாடு தொடர்பான பொறுப்பு, நிறுவகிக்கும் தரப்பினர்களால் வகுக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(I) உப உறுப்புரைக்கு அமைவாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த மற்றும் கால பகுதிகளுக்கான நிதி அறிக்கைகளை தயாரிக்க கூடியதாக தமது வரவுகள், செலவுகள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக தகுந்த முறையில் பதிவுகள் மற்றும் குறிப்புகளை பேணிச்செல்ல வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கனகாவிற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது நோக்கமானது ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கைகளின் பொருள் தவறான விளக்கத்திலிருந்து விடுபட்டுள்ளதா? மற்றும் அவை களவு, பிழைகள் என்பவற்றிலிருந்து விடுபட்டுள்ளதா? என்பது தொடர்பான குறித்த நியாயமான உத்தரவாதத்தை பெற்று எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும். ஆனால், இலங்கை கணக்காய்வு தரநிலைகளின்படி நடத்தப்பட்ட ஒரு கணக்காய்வு எப்போதுமே ஒரு சிறு தவறு ஏற்பட்டாலும் அதனை கண்டுபிடிக்கும் என்பதற்கான உததரவாதத்தினை அளிப்பதில்லை. தவறான தகவல்கள்> மோசடி அல்லது பிழைகளிலிருந்து எழக்கூடும். மேலும்> அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இருந்தால் இந்த நிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனாளர்களின் பொருளாதார முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நியாயமான முறையில் கருதும் பட்சத்தில் அந்த தவறான தகவல்கள் முக்கியமான ஒரு தவறாக கருத்தில் கொள்ளப்படும்.

என்னால் தொழில்முறை தீர்ப்பு மற்றும் தொழில்முறை சந்தேகங்களோடு இலங்கை கணக்காய்வு தரணியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது பிழை காரணமாக நிதி அறிக்கைகளின் பொருள் தவறாக மதிப்பிடுவதன் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுதல் மற்றும் அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தது நடைமுறைப்படுத்தல் மற்றும் எமது கருத்துக்கு ஒரு அடிப்படை அதாரத்தினை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மோசடியில் விளைவாக ஒரு முக்கிய விடயத்தினை தவராகக் கண்டறிய முடியாமைக்கான ஆபத்து ஒரு பிள்ளையின் விளைவாக இருப்பதை விட மிகவும் அதிகமாக உள்ளது ஏனெனில்> மோசடியில் கூட்டு> மோசடி> வேண்டுமென்றே விடுபடுகளைச் செய்தல்> தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை மீறுதல் என்பன காணப்படுவதால் பிழை ஒன்றினை கண்டறிவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாக காணப்படும்.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாடு குறித்த ஒரு புரிதலை விரிவாக பெற்றுக்கொள்ளுதல். ஆனால்> இந்த உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக விளக்கத்தினை பெற்றுக்கொள்வது நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் உள்ளக கட்டுப்பாடு குறித்தான ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் மற்றும் அவற்றின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிருவாகத்தால் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் என்பவற்றை மதிப்பீடு செய்தல்.

- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் மற்றும் அவற்றின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிருவாகத்தால் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் என்பவற்றை மதிப்பீடு செய்தல்.
- நிச்சயமற்ற தன்மை இருக்கிறதா என்பது குறித்து பெற்றுக்கொண்ட கணக்காய்வு சாட்ச்சிகளின் அடிப்படையில் கணக்கியலுக்காக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை தொடர்பான அடிப்படையை ஈடுபடுத்துவதன் தொடர்பை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமாற்றத் தனமாய் உள்ளதென நான் முடிவுச் செய்வதாயின் நிதி அறிக்கைகளில் அது தொடர்பான வெளிப்படுத்தல் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனப் செலுத்தப்பட வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லையாயின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தொடர்ந்து இயங்கும் தன்மை முடிவடையலாம்.

- வெளிப்பாடுகள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த அறிமுகம் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான முறையில் அறிமுகப்படுத்தும் வகையில் அடிப்படை கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அவதானித்த முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலான முக்கிய குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவாகத்தை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப் பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

– 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(a) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக எனது அறிக்கையின் கருத்துக்கள் அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் பாதிப்பை தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன் என்பதோடு எனது ஆய்வில் அவதானித்துள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முறையாக கணக்கு பதிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

– வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 06(I)(d)(iii) ஆம் பிரிவிற்கமைய முந்தய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

– வழங்கப்பட்ட நிதி அறிக்கைகளானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 06(I)(d)(iv) ஆம் பிரிவிற்கமைவாக கடந்த ஆண்டில் என்னால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கப்பட்டுள்ளது

நிகழ்த்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் பொருள் சார்ந்த விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை ஆகும். கீழ்வரும் எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) பிரிவிற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளும் குழுவின் எந்தவொரு உறுப்பினரும் வணிகத்தின் சாதாரண காரணத்திற்கு புறம்பான நிறுவனத்தால் ஏற்படுத்திக்கொண்டுள்ள எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடி அல்லது மறைமுக ஆர்வமுள்ளதாக குறிப்பிடுவதற்கு.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(f) பிரிவிற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளும் குழுவால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டம் பொது மற்றும் சிறப்பு உத்தரவுகளுக்கு நிறுவனம் இணங்கவில்லை என்று குறிப்பிடுவதற்கு.

சட்ட ஒழுங்குவிதிகளுக்கான குறிப்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசியலிச குடியரசின் நிதி பிரமாண கோவை	
நி.பி. 237	ரூ.71,750,056 மதிப்பீட்டு பெறுமதியுள்ள 14 அனர்த்த குறைப்பு கருத்திட்டங்கள் தொடர்பாக வேலை பூர்த்திக் செய்தலுக்கான அறிக்கைகள் சமர்பிக்கப்படவில்லை.
நி.பி. 751	அனைத்து பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோகம் தொடர்பாக முறையாக கணக்கு வைப்புகள் மேற்கொள்ள வேண்டியதாக இருந்தாலும் நிலையத்தினால் பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோகம் தொடர்பாக அச்சந்தர்பத்திலேயே பதிவுகள் செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.
நி.பி. 752	பொருட்கள் பதிவு புத்தகத்தின் ஒவ்வொரு குறிப்பும் பொருட்கள் பதிவு வவுச்சர் ஒன்றினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தாலும் களஞ்சிய பதிவுகளில் பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோகங்களை பதிவு செய்யும்போது அதற்குரிய பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோக உறுதிச் சீட்டுகள் தொடர் இலக்கம் களஞ்சிய பதிவு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கவில்லை. அதேபோன்று, பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோக உறுதிச் சீட்டுகள் முறையாக இலக்கமிடப்பட்டு கோவைப்படுத்த வேண்டியிருந்தாலும் நிலையத்தின் பொருட்கள் பெறுதல் மற்றும் விநியோக உறுதிச் சீட்டுகள் தொடர் இலக்கமின்றி முறையற்ற விதமாக கோவைபத்துத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
நி.பி. 754	ஒவ்வொரு நிதி ஆண்ட்டின் இறுதியிலும் பொருட்கள் பதிவு புத்தகம் சமநிலைப்படுத்தப்பட்டு அதன் "கையிருப்பு மிகுதியை" அடுத்த ஆண்டுக்கு முன்கொண்டுச் செல்ல வேண்டியிருந்தாலும் நிலையத்தின் களஞ்சிய பதிவுப் புத்தகம் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு சமநிலைப்படுத்தி

	அதன் மிகுதி முன்கொண்டுச் செல்லப்படவில்லை
(ஆ) 01/2012 இலக்க மற்றும் 2012 ஜனவரி 05 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	ஒப்பந்தலை வழங்குவதற்காக சமூக அடிப்படையிலான இயக்கங்களை தெரிவுச் செய்யும் குழுவில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் உள்ளடங்க வேண்டுமானாலும் அவ்வாறு பிரதிநிதி ஒருவர் நியமித்திருக்கவில்லை.
(இ) 6/97 இலக்க மற்றும் 2012 பெப்ரவரி 03 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் 02 (VI) பந்தி	மேலதிகநேர வேலைகளை பொறுப்பளிப்பது தொடர்பான தமது பரிந்துரைகளை 03 மாதங்களுக்கு ஒருமுறை நிறுவனத் தலைவர் மேலாய்வுச் செய்ய வேண்டியிருந்தாலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.
(ஈ) 19/89 இலக்க மற்றும் 1989 மார்ச் 23 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 05	பந்தியின் உப வசனங்களில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக மேலதிக நேர வேலைகளுக்காக பதிவுப் புத்தகமொன்றை பேணிச்செல்ல வேண்டியிருந்தாலும் சுற்றறிக்கைக்கு அமைவாக அவ்வாறு பதிவுப் புத்தகமொன்றை பேணிச்செல்லவில்லை.
(உ) 12 ஆம் இலக்க மற்றும் 2003 ஜூன் 02 ஆம் திகதிய பொது வியாபார சுற்றறிக்கை	
(i) 6.5.3 ஆம் பந்தி	நிலையத்தினால் 2014 முதல் 2017 வரையிலான ஆண்டறிக்கைகள் 2020 ஜூன் 16 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்படவில்லை.
(ii) 9.7 ஆம் பந்தி	பல்வகையான அபாயங்களை வரைபடமாக்க தரவுகளை தயாரிப்பதற்காக ரூ.3,428,400 தொகை கொடுப்பனவுகளை செலுத்தியிருந்தாலும் அதற்காக திறைசேரியின் அனுமதி பெறப்படவில்லை.

- 2018 ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தமது அதிகாரங்கள் மற்றும் பணிகள் மற்றும் பொறுப்புகளுக்கு புறம்பாக செயலாற்றியுள்ளது என்பது தொடர்பாக.
- 2018 ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைவாக கீழ்வரும் அவதானிப்புகளை தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ளதாகவும் கால எல்லைகளுக்குள் உரிய சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லை என்பது தொடர்பாக.

(அ) அனர்த்த அபாய குறைத்தலை அபிவிருத்திச் செயல்பட்டினுள் ஒன்றிணைப்பதற்கான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனமொன்றை தெரிவுச்

செய்வதற்கான பெறுகைக் குழு ஆலோசகரை தெரிவுச் செய்யும் வழிகாட்டல் கோவையின் 2.6.3 பிரிவிற்க்கமைய அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படவில்லை. அத்துடன் வழிகாட்டல் கோவையின் 3.4 பிரிவிற்கமைய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் மதிப்பீடு ஒன்றினை தயாரித்திருக்கவில்லை. மேற்போந்த வழிகாட்டல் கோவையின் 6.6.4 பிரிவிற்கமைய இணக்கம் தெரிவித்த தொகையில் 20 சதவீதம் மாத்திரம் முட்பணமாக செலுத்த கூடியதாக இருந்தாலும் இணக்கம் தெரிவித்த தொகையில் 30 சதவீதம் அதாவது ரூ.1,927,500 தொகை முட்பணமாக பிணையின்றி செலுத்தப்பட்டிருந்தது. வழிகாட்டல் கோவையின் 6.6.1 பிரிவிற்கமைய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடவில்லை என்பதோடு இணக்கம் தெரிவித்த காலத்திற்குள் பணிகள் நிறைவுச் செய்யப்படவும் இல்லை.

(ஆ) இலங்கையை பாதித்துள்ள பல்வகையான அனர்த்த விபரங்களை உள்ளடக்கி அபாய குறிகாட்டிகள் புத்தகமொன்றை அச்சிடுவதற்காக தெளிவாக அடையாளம் காணாத தேவையோ நோக்கமோ இன்றி அத்துடன் விநியோகம் செய்யவேண்டிய நிறுவனங்கள் தொடர்பான திட்டமுமின்றி ரூ.1,850,000 செலவில் 100 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6(ii) பிரிவிற்கமைய விவரக்குறிப்புகளை அறையில் மற்றும் அனுமதி வழங்குதல் மேற்கொண்டிருக்கவில்லை என்பதோடு கேள்வி விலை வழங்குவதற்காக முன்வைத்த விவரக்குறிப்புகளுக்கு புறம்பாக புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தது.

(இ) வடகிழக்கு பருவமழை பாதிப்பினால் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாக் பைகளின் தேவையினை மாவட்ட அலுவலகங்களினால் 2019 ஆண்டில் அறிவித்திருந்தாலும் அவற்றை கொள்வனவுச் செய்ய திட்டமிடப் படாததினால் அவசர கொள்வனவுகள் மூலக அவற்றை பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. அதனால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விவரக்குறிப்புகளுக்கு இணக்கமற்றதாக ஒரே நாளில் பொருட்களை கொள்வனவுச் செய்வதற்காக ரூ.1,200,000 செலவிடப்பட்டதோடு அதில் 500 பொலிஸாக் பைகள் நிலையத்தின் நிதி மற்றும் மனிதவள பிரிவினால் பயன்படுத்தப் பட்டிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரிடர் முகாமைத்துவச் சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டிருந்தாலும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிவரை பாராளுமன்ற அனுமதிக்காக சமர்பிக்கப்படவில்லை.

(ஆ) சர்வதேச தேவைப்பாடு ஒன்றாகிய சென்டாய் கட்டமைப்பிற்கமைய அனர்த்த அபாய குறைப்பு திட்டமொன்றை தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் மூலம் 2015 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு ரூ.1.30 மில்லியன் வழங்கப் பட்டிருந்தாலும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான ஒரு திட்டம் தயாரிக்கப்படவில்லை. அதேபோன்று, 2005 ஆண்டின் 13 ஆம் இலக்க இலக்க இலங்கை பேரிடர் முகாமைத்துவச்

சட்டத்தின் 8 ஆம் அதிகாரத்தின் 2(அ) பிரிவின்படி 2018 - 2030 காலப்பகுதிக்கான தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றை தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் மூலம் 2017 ஆண்டில் ரூ.02 மில்லியன் வழங்கப்பட்டிருந்தாலும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அப் பணி போர்த்திக் செய்யப்படவில்லை.

(இ) 2016 முதல் 2018 வரையிலான காலப்பகுதியினுள் 67 அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை செயல்படுத்திடுவதற்காக நிலையத்தினால் ரூ.68.3 மில்லியன் தொகையை மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு விடுவித்திருந்தாலும், அத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள், அவற்றுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள், திட்டங்களை செயல்படுத்தல் மற்றும் தொடராய்வு செய்தல் என்பவற்றுக்கு பொறுப்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்கள், ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுக்காக முன்வைக்கப் படவில்லை.

(ஈ) மொனராகலை மாவட்டத்தில் விவசாய கிணறுகள் அமைப்பதற்காக ரூ.26.9 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொண்டிருந்தாலும் மாவட்ட செயலாளரின் வழிகாட்டல்களை இணங்கி செயல்படாமையினால் ரூ.10.5 மில்லியன் தொகை 2019 டிசம்பர் 10 ஆம் திகதி மீண்டும் அமைச்சுக்கு கைப்பற்றப் பட்டது. அதேபோன்று, 53 நலன்பெறுநர்களுக்காக விவசாய கிணறுகள் அமைப்பதற்கு ரூ.26.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும் நலன்பெறுநர்களின் தேவைகளை முறையாக மதிப்பிடாது நிதியினை செலவழித்தமையால் தேவையற்ற 24 கிணறுகளை அமைப்பதற்கு செலவழித்த ரூ.12 மில்லியன் தொகை பயனற்ற செலவாகியுள்ளது.

(உ) நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயல்பட வேண்டியிருந்ததோடு நிலையான அபிவிருத்தி நோக்குகள் மற்றும் இலக்குகளை அடைந்தமைக்கான முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

(ஊ) 2015 ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் மூலம் 05 பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்ற ரூ.3.56 மில்லியன் தொகை மற்றும் சார்க் அமைப்பினால் முட்பணமாக 2015 ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.1.75 மில்லியன் மற்றும் பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் வழங்கிய ரூ.772000 தொகை குறிப்பிட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படவில்லை. அதேபோன்று, தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சினால் 10 நகரங்களின் அனர்த்த அபாய வரைபடங்களை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட ரூ.2 மில்லியன் மற்றும் உலக உணவு திட்டம் மூலம் வழங்கப்பட்ட ரூ.2 மில்லியன் தொகை பயன்படுத்தாது திருப்பி அனுப்பப்பட்டிருந்தது .

(எ) வானிலையியல் திணைக்களத்திற்கு சொந்தமான காணியொன்றில் ரூ.1,034.39 மில்லியன் செலவில் நிலையத்தின் தலைமை அலுவலக கட்டிடம் 2010 ஆண்டில் அமைக்கப்பட்டாலும், மீளாய்வுக்குள்ளாகும் ஆண்டின் இறுதி நாள் வரையிலும் அக் காணி மற்றும் கட்டிடத்தை சட்டரீதியாக நிலையத்திற்கு கைப்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) 2019 டிசம்பர் மாதம் ஈக திகதிக்கு நிலையத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 465 பேராக இருந்தாலும் கடமையில் ஈடுபட்டிருந்த எண்ணிக்கை 316 ஆக இருந்ததோடு 149 வெற்றிடங்கள் காணப்பட்டன.

டபிள்யு பீ சி விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்